# விடுதலைப்புலிகள்

குரல்: 25 | ஆவணி - புரட்டாதி 1991 | அன்பளிப்பு: 25/-

## ஆ. க. வெ.

# இராணுவ நடவடிக்கை

10-07-1991 அதிகாலையிலிருந்து 29-08-1991 முன்இரவு வரை உள்ள 31 நாட்களும் ஆனையிறவுப் பகுதியில் பாரிய சமர் ஒன்று நடந்து முடிந்துள்ளது. உலகின் கவனத்தை எமது இயக்கத்தின் பக்கம் திசைதிருப்பிய இச் சமர் இராணுவ அரசியல் பரிமாணங்களில் குறிப்பிடக்கூடிய வளர்ச்சிகளை எமது போராட்டத்தில் ஏற்படுத்தியுள்ளது.

ஆ. க. வெ. என பெயரிட்டழைக்கப்பட்ட இந்த இராணுவ நடவடிக்கையில் 400ற்கும் மேற்பட்ட சிங்களப் படையினர் கொல்லப்பட்டுள்ளனர். சுமார் 1000 பேர் காயமடைந்துள்ளனர்.

அதேசமயம் எமது தரப்பில் 573 போராளிகள் வீரமரணமடைந்துள்ளனர். 1500 புலிவீரர்கள் காயமடைந்துள்ளனர்.

இந்த ஆ. க. வெ. இராணுவ நடவடிக்கை நடைபெற்றவிதத்தை, இது தொடர்பான ஆய்வுப்பார்வையை உள்ளடக்கியதாக இந்த இதழ் அமைக்கப்பட்டுள்ளது.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தச் சமரின் விபரங்களையும், விளக்கங்களையும் எமது மக்களுக்கு தெரியப்படுத்துகின்றோம்.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் முதற்தடவையாக நாம் நடாத்தியதொரு இராணுவ நடவடிக்கைக்கு பெயர் சூட்டியுள்ளோம்.

ஆ. க. வெ. என அழைக்கப்படும் இந்த இராணுவ நடவடிக்கை ஆனையிறவு தளம் மீதான முற்றுகைச் சண்டையுடன் தொடர்புபட்ட முழு இராணுவ நடவடிக்கைக்கும் பொருந்தக்கூடிய வகையிலேயே பெயரிடப்பட்டிருந்தது.


இந்தச்சண்டை நடைபெற இருந்த பகுதிகளின் பூகோள அமைப்பு இந்தச் சண்டையில் நாம் அறிமுகப்படுத்தப் போகும் ஆயுதங்கள், மற்றும் இந்த இராணுவ நடவடிக்கைக்கான போர்முறைத் திட்டங்கள் ஆகியவற்றின் அடிப்படையிலேயே இப்பெயரைத்தெரிவுசெய்திருந்தோம்.


அகண்ட ஆகாயம், பரந்த கடல், நீண்டவெளிகளில் இச் சண்டையை எதிர்பார்த்தோம் எதிரியுடன் சமரிடக்கூடிய நவீன ஆயுதங்களுள் சிலவற்றை முதன்முதலில் இச் சண்டையில் பயன்படுத்தியிருந்தோம்.

இந்தச் சண்டைகளில் 8000ற்கும் அதிகமான சிங்களப் படைவீரர்கள் கலந்து கொண்டிருக்கின்றனர். இதில் 400ற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டுள்ளனர். சுமார் 1000 படைவீரர்கள் காயமடைந்துள்ளனர். இத்துடன் ''பவள்'' ''சலாடின்'' ரகங்களைச் சேர்ந்த 11கவச வாகனங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. இரண்டுபோர்விமானங்கள், ஒரு அவ்ரோரக விமானம், ஒரு உலங்குவானூர்தி என்பன குண்டடிபட்ட நிலையில் சண்டைக் களத்தில் இருந்து அகன்று சென்றன.

உலகமே வியந்து பார்த்து நிற்க 31 நாட்கள் நடந்த

(11ம் பக்கம் பார்க்க)






தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

www.eelamview.com

## புலிகளின் குரல்

# தேசிய பலத்தை அணிதிரட்டுவோம்

தமிழீழ மக்களின் தன்னாட்சி உரிமைப் போராட்டம், மகத்தான வீர சாதனைகளூடாக, இன்று பிரமிக்கத்தக்க வளர்ச்சியைக் கண்டு உலக நாடுகளின் கவனத்தை தனது பக்கம் ஈர்த்திருக்கிறது.

உலகில் தமிழர்களுக்கென்று தோன்றி நிற்கும் ஒரே படையாக, விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இராணுவ அமைப்பு இன்று வளர்ச்சி கண்டிருக்கின்றது. புலிகள் இயக்கத்தின் இந்த வளர்ச்சிதான் விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சி என்பது சொல்லிக் குறிப்பிட வேண்டிய ஒரு விடயமல்ல.

புரட்சிகர ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்த தன் மூலம், தமிழீழ மக்களின் தன்னாட்சி உரிமைக்கான போராட்டத்தில் ஒரு புதிய திருப்பத்தை, ஒரு புதிய அத்தியாயத்தை, ஏற்படுத்தியது விடுதலைப் புலிகள் இயக்கமே. விடுதலைப்புலிகள் இயக்கத்தின் ஆயுதப் போராட்டம்தான், தமிழ் மக்களின் தன்னாட்சி உரிமைப்போரை இன்று சர்வதேச மட்டத்திற்கு உயர்த்தியுள்ளது.

அரசியல் தன்னாட்சி உரிமைக்கான எமது போராட்டம் நீண்ட வரலாற்றைக் கொண்டது. இப்போராட்டம் பல வடிவங்களில் பரிணாமம் பெற்றது. ஆரம்ப கால கட்டத்தில் அமைதி வழிப்பாதையில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. உண்ணா விரதங்கள், சத்தியாக்கிரகங்கள், ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் என அகிம்சைத் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்ட போராட்டங்களே அன்று நிகழ்ந்தன. ஆனால், அந்த அகிம்சைப் போராட்டங்களை எதிரி மிருகத்தனமாக அடக்கினான். ஆன்மீக பலத்தின் உணர்வுகளை வெளிப்படுத்துகின்ற சாத்வீகப் போராட்டங்களுக்குத் தான் மதிப்பளிக்கக் கூடியவனல்ல என்பதை எதிரி அப்பட்டமாகவே நிரூபித்தான். மாறிமாறி ஆட்சிபீடத்திலேறிய சிங்கள அரசுகள் எல்லாமே எமது மக்களின் நியாய பூர்வமான கோரிக்கைகளை நிராகரித்ததுடன், ஆன்மீக உணர்வுகளை வெளிப்படுத்திய அவர்களின் போராட்டங்களை, ஆயுதப்படைகளைக் கொண்டு அடக்கின.

இந்த நீண்ட வரலாற்றின் பிரதிபலிப்பாகவே, தேசிய சுதந்திரத்திற்கான ஒரு புரட்சிகர ஆயுதம் தாங்கிய போராட்டத்தின் வரலாற்றுக் கட்டாயமும், அதன் அரசியல் ரீதியான முக்கியத்துவமும், எமக்கென ஒரு படையை உருவாக்கி, எமது உரிமைப் போராட்டத்தை பலம் பொருந்திய நிலையிலிருந்தே நாம் நடாத்த வேண்டும் என்ற தேவையும் தமிழர்களால் புரிந்துணரப்பட்டது.

இக்கால கட்டத்திலேயே தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப்படையாக புலிகள் இயக்கத்தை உருவாக்கி, தலைவர் பிரபாகரன் அவர்கள் ஆயுதப் போராட்டப் பாதையைத் திறந்தார்.

ஆயுதப் போராட்டத்தை நாமாக விரும்பித் தழுவிக்கொள்ளவில்லை. ஆயுதப் போராட்டத்தை வரித்துக்கொள்ள நாம் நிர்ப்பந்திக்கப்பட்டோம். பேரினவாத சிங்கள அரசின் கொடூரமான அடக்கு முறைகளை எமது மக்கள் எதிர்நோக்கினார்கள். மிருகத்தனமான முறையில் இன அழிப்பு நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டார்கள். தாங்கொணாத் துன்பத்தையும் அழிவுகளையும் சந்தித்தார்கள். இவற்றைப் பார்த்து சர்வதேசம் கவலை தெரிவித்தது. கண்டனங்கள் சொல்லியது. விமர்சித்தது. ஆனால், இன அழிப்பு மேலும் மேலும் விஸ்வரூபம் எடுத்தது. அதனால் எம்மைப் பாதுகாத்துக்கொள்ள நாம் போராட வேண்டிய நிர்ப்பந்தம் அன்று எழுந்தது. எமது இனத்தைப் பொறுத்தவரை போராட்டமில்லாமல் வாழ்வு இல்லை. போராடினால்தான் வாழலாம் என்ற கட்டாய நிலையில் நாம் இன்று நிற்கின்றோம். இது வரலாற்றின் மிக முக்கியமான காலகட்டம். நாம் அணிதிரண்டு போராடி எமது இலட்சியத்தை வென்றெடுப்பதன் மூலம் தான் எங்களதும், எமது அடுத்த சந்ததிகளினதும் சுதந்திரமான கௌரவமான வாழ்வை உறுதிசெய்துகொள்ள முடியும். அதைச் செய்வதற்கு எமக்கு மிகப் பெரியபலம் தேவை. எதிரிக்கு நிகரான பலமாக அல்ல; எதிரியிலும் மிகையான பலமாக நாம் அணிதிரள வேண்டும்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் இராணுவ அமைப்பானது, தமிழீழத்தின் தேசிய மரபுவழிப்படையாக இன்று பரிணாமம் பெற்றுவருகின்றது. சிறீலங்காவின் வான், கடல், தரைப் படைகளை ஒரேசமயத்தில் எதிர்த்துப் போரிடக் கூடிய வளர்ச்சியை அது கண்டிருக்கிறது. அண்மைக் காலங்களில் சிறீலங்கா அரசுப்படைகளினால் மேற்கொள்ளப்பட்ட பாரிய இராணுவ நடவடிக்கைகள் பல வெற்றிகரமாக முறியடிக்கப்பட்ட நிகழ்வுகள் இந்த வளர்ச்சியை கோடிட்டுக்காட்டுகின்றன. இதனை எடுத்துக் காட்டும் சிறப்பான அம்சமாக ஆனையிறவுச் சமரைக் கருதலாம்.

ஆனையிறவில் - கனரக ஆயுதங்கள் கவச வாகன அணிகள், பீரங்கிப் பிரிவுகள் சகிதம், வான்படை ஊர்திகளின் முழு அளவிலான தாக்குதல் உதவியுடன், கடல்வழியாகத் தரையிறங்கி முன்னேறிய 8000 துருப்புக்களைக் கொண்ட மிகப்பெரிய ஒரு படையணியை ஒரு முனையிலும் - சகல விதமான பாதுகாப்பு ஏற்பாடுகளுடனும், வான்படையினரின் தொடர்ச்சியான உதவியும் கிடைக்கின்ற, கூடக்குறைய 1000 துருப்புக்களைக் கொண்ட பலம் வாய்ந்த ஒரு படைத்தளத்தை இன்னொருமுனையிலும், புலி வீரர்கள் எதிர்கொண்டு மோதினார்கள். எந்தவிதமான வசதி வாய்ப்புகளுமற்ற சாதாரண ஒரு தரைப்படையை மட்டும் வைத்திருந்து - சிறீலங்கா முப்படைகளுக்கும் எதிராக 24 நாட்கள் போரிட்டது, புலிகள் இயக்கத்தின் பரிணாம வளர்ச்சியை எடுத்துக்காட்டுகின்றது.

இருந்த போதிலும், இரண்டு பாரிய முனைகளில் நிகழ்ந்த இந்தச் சண்டையில், சிறீலங்காப்படைகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில், அத்தொகையின் கால் பங்கு தொகையுடைய போராளிகளே களத்தில் நின்றார்கள். சிங்களப்படையிற்கு நிகரான ஆட்பலத்துடன் தமிழர்படை அங்கு மோதியிருக்குமானால் அது இச்சண்டையின் போக்கிலும் - முடிவிலும் நிச்சயம் ஒரு பிரளயத்தை ஏற்படுத்தியிருக்கும்.

ஒட்டுமொத்தமாக நோக்கும் போது, எமது மக்களைப் பொறுத்தவரை இன்று அவர்களுக்கு அவசியமானது அவர்களுக்கென்று இருக்கக்கூடிய மிகப்பெரிய ஒரு சொந்தப் பலமே ஆகும்.

நிகரற்ற; ஈடிணை இல்லாத ஆன்மீக பலம் எம்மிடம் இருக்கிறது. இலட்சியத்தை வென்றெடுப்பதில் நாம் கொண்டுள்ள உறுதிப்பாடும், எமது இலட்சியத்திற்காக உயிரைத் துச்சமாக்கி — அர்ப்பணித்துப் போராடத் தயாராய் இருக்கின்ற எமது மனோதிடமும், ஒப்புவமை இல்லாத எமது ஆன்மீக பலத்தை விழித்துக் காட்டுகின்றது.

இருந்த போதிலும் - போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கில், படிப்படியாக எமது நிலம் விடுவிக்கப்படுகின்ற போது, வளர்த்துப் பெருக்க வேண்டியவற்றுள் ஆயுத பலமும் ஒன்றே என்பது மறு கேள்விக்கு இடமில்லாத தெளிவு.

ஆனால், நிகழ் காலத்தோடு நோக்குகின்ற போதும், எதிர் காலத்தை கருத்திலெடுக்கின்ற போதும் எப்போதும் பெருக்கி வைத்திருக்கவேண்டிய-வளர்ந்திருக்க வேண்டிய பலம், ஆள் பலமாகும். ஓர் இனத்தின் தேசிய விடுதலைப் போராட்டத்தில், அப் போராட்டத்தின் முன்னணிப்படையின் - படைப்பலம் எதிரிகளுக்கு நிகரானதாக இருக்க வேண்டியது அவசியமானது. தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டமும் இதற்கு விதிவிலக்கானதல்ல. எமது போராட்டத்தின் முன்னணிப்படையாக இயங்குகின்ற அரசியல் - இராணுவ அமைப்பான விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு தமிழீழத்தின் இளம் சந்ததி அணிதிரண்டு படைப்பலம் சேர்க்க வேண்டியது வரலாற்று முக்கியத்துவம் மிக்க ஒரு தேவையாக இன்றைய காலகட்டத்தில் அமைந்துவிட்டது.

தவிர்க்க முடியாததாக எழுந்து நிற்கும் இந்த வரலாற்றுத் தேவையை உணர்ந்து தமிழீழத்தின் இளம் பரம்பரை, புலிகள் படையில் இணைந்து அதன் படைப்பலத்தை அதிகரித்து போராட்டக்களத்தில் இறங்க வேண்டும்.

இருப்பினும், எவ்வகையான பலங்களிலும் நிறைவடைந்து ஒரு போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றதுஎன வைத்துக்கொண்டாலும் மக்கள் பலமே ஒரு போராட்டத்தின் உயிர் மூச்சாகும். பின் பலமாக மக்கள் சக்தியைக் கொள்ளாது பிறக்கின்ற போராட்டங்கள் அழிந்து போனதாகவே உலக சரித்திரம் கூறுகின்றது. மக்களின் விடுதலை என்று முளைத்த பல குழுக்கள், மக்களை வெறுத்து - விரோதித்து, மக்களுக்குத் துரோகமிழைத்து வளர முற்பட்ட போது, சிசுவிலேயே அழிந்துபோனதை தமிழீழ வரலாறு காட்டுகின்றது. மக்களே போராட்டத்தின் உயிர்நாடி-மக்கள் பலம் இல்லாத ஒரு போராட்டம் இருக்க முடியாது. விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை, தாயக மண்ணின் அடிமை விலங்கு உடைக்கப்பட வேண்டும் என்ற இலட்சியவெறி கொண்ட இளைஞர்களால் கட்டிவளர்க்கப்பட்டதே புலிப்படை. புலிப்போராளிகள் மக்களின் குழந்தைகள் புலிகள் இயக்கம் மக்களின்;

( 19 ம் பக்கம் பார்க்க )


www.eelamview.com

# போரும், சமரும், சண்டையும்

*போர், சமர், சண்டை, தாக்குதல், மோதல்கள்... என சொற்பதங்களை பொருத்தமான இடங்களில் பிரயோகிப்பதன்மூலம் இராணுவ விஞ்ஞானத்தை தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும்*

*ஆனையிறவுச்சமரின் இராணுவ பரிமாணத்தை, அதன் முக்கியத்துவத்தை விளக்க வேண்டுமாயின் சொற்பதங்கள் தொடர்பான வரையறை தேவை.*

*இங்கே சொற்பதங்களை தரம்பிரிக்க முயலுகின்றோம். இது தொடர்பான கருத்துச் செழுமைகளை வரவேற்கின்றோம்.*



கோட்டை முற்றுகைப் போர், மாங்குளம் சண்டை, சிலாவத்துறைப்போர், வவுனியாச்சண்டை, ஆனையிறவுப் போர்... என எல்லாவற்றிற்கும் போர் அல்லது சண்டை என்ற சொற்பதங்களை கலந்துமாறிப் பயன்படுத்துகின்றோம். இந்த சொற்பிரயோகம் சரியானதல்ல.

சண்டை என்ற சொற்பதத்தைவிட போர் என்ற சொற்பதம் சற்று உயர்ந்தது என்ற எண்ணத்திலேயே மேற்படி சொற்களைப் பயன்படுத்த முனைகின்றோம்.

உண்மையில் இச்சொற்பதங்களின் கருத்துக்கள் வேறு வேறானவை என்பதுடன் ஒரு தொடரான அர்த்த பரிமாணங்களைக் கொள்ளக் கூடியவை.



இராணுவ விஞ்ஞானம் தொடர்பாகவும், அவற்றை விளங்கவைக்கும் சொற்தொடர்களை இதுவரை நாம் வரையறுக்காததும் தான் இத் தடுமாற்றத்துக்குக் காரணம்.

இந்தமுறை, போர் அறிவை ஒழுங்காக விளங்கிக் கொள்ளுமுகமாக சொற்களை வரையறுப்போம்.

நாம் இதுவரையும் விளங்கிக்கொண்டதுபோல போர் என்பது பெரியதொரு பரிமாணத்தில் நடக்கும் சண்டை அல்ல.

''போர்'' என்பது சண்டைகளுக்கெல்லாம் அடிப்படையான ஒரு அரசியற் செயற்பாட்டு வடிவம். இதற்கும் மூலமாக ஒரு அரசியல் இலக்கு இருக்கும்.

எமது விடுதலைப் போராட்டம் ''போர்'' என்ற பரிமாணத்துக்குள்ளேயே அடங்கும். போரில் பலவகைகள் உண்டு.

உலகப்போர், ஆக்கிரமிப்புப்போர், விடுதலைப்போர், காலனித்துவப்போர்.... என அவைகள் இனங்காணப்படும்.

அடக்கும் தேசிய இனத்துக்கும், அடக்கப்படும் தேசிய இனத்திற்கும் இடையில் எழும் முரண்பாடு போராக வடிவம் பெறும்போது அது தேசிய விடுதலைப்போர் என அழைக்கப்படுகின்றது.

இந்தவகையில் சிங்கள பேரினவாத அரசிற்கும் அதன் இயந்திரங்களுக்கும் எதிராக தமிழீழமக்கள் நடாத்தும் போர் தேசிய விடுதலைப் போராகும்.

போரை முடிவு செய்ய நடாத்தப்படுபவைகளை சமர் (BATTLE) என அழைக்கலாம். ''சமர்'' என்பது மரபுவழி முறையிலான நேரடிச் சண்டைகளைக் கொண்டதாகவே இருக்கும்.

ஒரு போர் (WAR) பல சமர்களைக் (BATTLES) கொண்டிருக்கும்.

18 சமர்களைக் கொண்டதுதான் பாரதப்போர். பல நூறு சமர்களைக் கொண்டதுதான் இரண்டாம் உலகப்போர்.

''சமர்'' என்பது சில சண்டைகளைக் (COMBATS) கொண்டுவிளங்கும்.

ஆனையிறவுச் சமரானது இரண்டு சண்டைகளைக் கொண்டதாக இருந்தது.

I. தளம்மீதான முற்றுகைச் சண்டை (SIEGE)

II. வெற்றிலைக்கேணி புல்லாவெளி நேரடிச்சண்டை (DIRECT COMBAT).

ஒரு சண்டை பல தாக்குதல்களை (ATTACKS) கொண்டிருக்கும்.

ஆனையிறவுத் தளம் மீதான முற்றுகைச் சண்டையில் மட்டும் நான்கு தாக்குதல்களை நடாத்தியிருக்கிறோம். தாக்குதல்கள் பலவகைகளாக இருக்கும். அதிரடித்தாக்குதல் (Raid), பதுங்கித்தாக்குதல், (Ambush) தகர்த்தெறிந்து நுழைதல் (Break through)... என அவை செயற்படும் முறைகளையும், தந்திரோபாயங்களையும் வைத்து இனங்காணப்படும்.

ஒரு தாக்குதல் ஏராளமான மோதல்களை (Clashes) உள்ளடக்கியிருக்கும்.

தாக்குதலுக்குட்படுத்தப்படும் குறித்த இலக்கின் ஒவ்வொரு முனையிலும், ஒவ்வொரு காவலரணிலும் அது நிகழும். இந்த மோதல்களில் ஒரு சில- மிகநெருங்கிய நிலையில்- கைகலப்புகளாகவும் (Skirmishes) இருக்கும்.

இந்த வகையில் ஆனையிறவுப் பகுதியில் நடந்த சண்டைகளை ஆனையிறவுச் சமர்(BATTLE of ELEPHANT PASS) என்றேவரலாறு அழைக்கும்.

படிப்படியாக சமர்களை வெல்வதன் மூலம் ஒட்டுமொத்தப்போரை வெல்ல வேண்டும் என்பதுதான் பிரதான போர்முறைத்திட்டமாக(STRATEGIC)இருக்கும்.

ஆனால் சமர்கள் வெற்றியிலும் முடியலாம். தோல்வியிலும் முடியலாம். அது போரின் முடிவாக இருக்காது.

சில வேளைகளில் சில சமர்களின் முடிவுகள் போரின் முடிவுக்கு கட்டியம் கூறலாம். ஆனால் போரில் வெற்றி என்பதும், தோல்வி என்பதும் ஒரு முறைதான் நிகழும். அத்துடன் அப்போர் முடிவுக்கு வந்துவிடும்.

இரண்டாம் உலகப்போரில் யப்பானும், ஜேர்மனியும் பல சமர்களில் வெற்றி பெற்றிருந்தாலும்கூட அவை போரில் தோற்றுப்போயின.

அமெரிக்க — வியட்நாமிய போரில் 15 இலட்சம் வியட்நாமியர்கள் அமெரிக்கர்களால் கொல்லப்பட்டிருந்தாலும் கூட வியட்நாமிய மக்கள்தான் போரில் வென்றார்கள். (இப் போரில் இறந்த அமெரிக்க இராணுவத்தின் எண்ணிக்கை ஏறக்குறைய 50000)

உலகில் நான்காவது பெரிய படை, பிராந்தியவல்லரசு என்ற பெயரைத் தாங்கியிருந்தாலும்கூட ஆக்கிரமிப்புக்கெதிரான போராகிய இந்திய-புலிகள் போரில் புலிகளே வெற்றி பெற்றார்கள்.

இந்தக் கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டதைப் போன்று எமது விடுதலைப் போராட்டம் ''போர்'' என்ற பரிமாணத்துள் அடங்கும் என்றும், அதை நிர்ணயிக்க நடப்பவைகள் அனைத்தும் ''சமர்கள்'' என்றும் குறிப்பிட்டிருந்தோம்.

அப்படியாயின் எமது விடுதலைப்போராட்டத்தின் ஓர் அங்கமான இந்திய - புலிகள் யுத்தமும் ''சமர்' என்றபரிமாணத்துக்குள் அடங்குமா?

'' இல்லை ''. இந்தியப்படைகளுக்கும், புலிகளுக்கும் இடையில் நிகழ்ந்தது சமர் அல்ல. அது ஒரு போர்.

எமது விடுதலைப் போராட்டத்துடன் சம்பந்தமில்லாத ஒரு அந்நியதேசம் தனது அரசின் நலனுக்காக எமது விடுதலைப்போரை அழிக்க தனது படைகளை ஏவும் போது, எமது '' விடுதலைப் போர்'' ஆக்கிரமிப்புக்கு எதிரான ஒரு போராக புதுவடிவம் எடுக்கின்றது.

எனவே இந்திய ஆக்கிரமிப்புப்படைகளுடனான புலிகளின் மோதல் இந்திய-புலிகள் போர் என்றே வரலாறு அழைக்கும்.

இந்திய - புலிகள் போரில் பல சமர்கள் நடந்திருக்கின்றன. யாழ். குடாநாட்டைக் கைப்பற்ற இந்தியஆக்கிரமிப்புப்படைகள் நடாத்திய சமரை யாழ்ப்பாணச் சமர் ( BATTLE OF JAFFNA ) என்றே இந்திய இராணுவ - அரசியல் நிபுணர்கள் அழைக்கின்றார்கள்.

இந்தியப்படைகள், தமிழீழத்தை ஆக்கிரமித்து வைத்திருந்த சுமார் இரண்டு வருடகாலத்திலும் பல சமர்களை (BATTLES) இந்தியா நடாத்தியிருக்கின்றது.

''ஒப்பரேசன் பவான்'', ''ஒப்பரேசன் மகாகிர்த்தி,'' ''ஒப்பரேசன் திரிசூலம்'', ''ஒப்பரேசன் செக்மேற்''...... என்று, தான் நடாத்திய சமர்களுக்கு இந்திய அரசு பெயரும் இட்டிருக்கின்றது.

எனவே, போர், சமர், சண்டை, தாக்குதல், மோதல்கள்... என்று இராணுவ சொற்பிரயோகங்களின் கருத்துக்களை விளங்க முயல்வோம். இவைகள் தொடர்பான

(19ம் பக்கம் பார்க்க)

www.eelamview.com

# போர்முறைத்திட்டமும், தந்திரோபாயங்களும்

எந்த ஒரு சமரும் ஆரம்பிக்கப்பட முன்னர் அது நடைபெற இருக்கும் இடத்தின் பூகோள - கேந்திர நிலைகளைக் கருத்திற் கொண்டு அங்கே எப்படி சமரை நடாத்த வேண்டும். அதற்கு என்னென்ன தந்திரோபாயங்களைக்கடைப் பிடிக்கவேண்டும் என ஒரு திட்டம் வகுக்கப்படும். அதை போர்முறைத்திட்டம் Strategic என அழைப்பர். இத்திட்டத் துள் அரசியல்-இராணுவநோக் கங்கள் உள்ளடங்கியிருக்கும்.

எதிரியினதும், எம்முடைய தும் பலம் பலவீனங்களுக்கு ஏற்ப அது நுணுக்கமாகத் தயாரிக்கப்படும்.

எதிரியினுடைய நிலைப்பாடு இத்தகையது எனவே இப் படித்தான் சமரைத்தொடங்க வேண்டும். எத்தனை அணி களைத் தாக்குதலுக்குப் பயன் படுத்துவது, எத்தனை அணி களை தற்காப்பிற்குப் பயன் படுத்துவது, தாக்குதல் அணி கள் எப்படி உள்நுழையவேண் டும், அது - என்னென்ன ஆயு தங்களைப் பாவிக்க வேண்டும். வெளியிலிருந்து எதிரிக்கு உதவி வரக்கூடிய பாதைகள் எவை- அதை எப்படித் தடுக்க வேண்டும். மருத்துவ, விநி யோக வசதிகள் எப்படி நடைபெற வேண்டும். முயற்சி வெற்றிபெற்றால் என்ன செய்வது. எதிர்பாராத திருப் பங்கள் ஏற்பட்டால் என்ன செய்வது ...என்பனபோன்று ஒரு சமர் தொடங்கி முடி யு' வரை என்ன செய்ய வேண்டும் எப்படிச்செய்ய வேண்டும்? என்பதை உள்ள டக்கியே போர்முறைத்திட் டம் வகுக்கப்படும்.

ஒரு போர்முறைத்திட்டத் திற்கென்று ஒரு இலக்கு இருக்கும். அந்த இலக்கை அடைவது தான் அப்போர் முறைத் திட்டத்தின் நோக்க மாக இருக்கும்.

ஒரு போர்முறைத் திட் டத்தை வெற்றிகரமாக நிறை வேற்ற பல்வேறு தந்திரோ பாயங்கள் **(tactics)** பயன்படுத் தப்படும்.

ஆனையிறவுச் சமருக் கென்றும் ஒரு போர்முறைத் திட்டமும் அதற்கே உரித் தான தந்திரோபாயங்களும் வகுக்கப்பட்டிருந்தன.

அவைகள் என்ன? என்று பார்க்குமுன்னர் போர் முறைத்திட்டம், அதன் இலக்கு, அதற்கான தந்தி ரோபாயங்கள் என்பவற்றை எமது விடுதலைப்போராட் டம் கடந்துவந்த ஒரு கால கட்டத்தை உதாரணத்திற்கு எடுத்து மேற்குறித்த இரா ணுவ அறிவை விளங்கிக் கொள்வோம்.

*1983*ம் ஆண்டு திண்ணை வேலித்தாக்குதலில் *13* இரா ணுவத்தினர் கொல்லப்பட்ட தைத்தொடர்ந்து இலங்கைத் தீவு முழுவதிலும் தமிழர் களுக்கு எதிராக எழுந்த அரச பயங்கரவாதத்தின் விளை வாக எமது விடுதலைப் போராட்டமும் முனைப்புப் பெற்றது. போராளிகளின் எண்ணிக்கை அதிகரித்தது.

அதே சமயம் அரசபடைகளின் பிடியும் இறுகத் தொடங்கி யது. அன்றைய நிலையில் போராளிகள் தலைமறைவு வாழ்க்கையே வாழ்ந்தார் கள். தமிழீழமெங்கும் அரச படைகளின் ரோந்தும், நட மாட்டங்களும் அதிகரித்தன. இந்த ரோந்துகளும், நட மாட்டங்களும் சிறிய சிறிய அளவிலேயே நடந்தது.

இந்த ரோந்துகளும், எழுந்த மானமான அரசபடைகளின் நடமாட்டங்களும் கெரில்லா வாழ்க்கையிலிருந்த எமக்கு பெரிய தடையாக இருந்தது.

நகர்வுகளும், தொடர்பு களும் கெரில்லாக்களுக்கு மிக மிக முக்கியமானது. எங்களது நகர்வுகள் சிரமத்துக்குள்ளா யின. தகவல் பரிமாற்றங்கள் காலதாமதத்துக்கு உள்ளா யின. இது போராட்ட வளர்ச் சிக்கு முட்டுக்கட்டையாக இருந்தது.

எனவே இந்தமுட்டுக்கட்டை களை நீக்கி போராட் டத்தை வளர்ச்சிப்பாதையில் கொண்டு செல்வதற்கென்று இயக்கம் ஒரு தாக்குதல் திட்டத்தை வகுத்தது.

அதாவது, ஒரு குறிக்கப் பட்ட காலவரையறைக்குள்- யாழ். குடாநாட்டிற்குள் ரோந்து செல்லும் அரசபடை கள் மீது பரவலான முறை யில் அடுத்தடுத்து தாக்கு தலைத் தொடுப்பதென்று தீர் மானிக்கப்பட்டது. இவைகள் எங்கெங்கே நடாத்தப்பட வேண்டும் என்றும், ஒவ் வொரு தாக்குதலுக்கும் யார் யார் தலைமை ஏற்கவேண் டும் என்றும், ஒவ்வொரு தாக்குதற் குழுவிலும் எத் தனை எத்தனை போராளி கள் பங்குபற்றவேண்டும் என் றும், தாக்குதலை நடாத்திய பின் என்ன செய்வது என் றும், அவசியம் ஏற்பட்டால் தலைமைப்பீடத்துடன் எப் படித் தொடர்புகளை வைத் துக் கொள்வது என்பது பற் றியும் ஆராய்ந்து முடி வெடுத்து ஒரு பூரண போர் முறைத்திட்டமொன்று தயா ரிக்கப்பட்டது.

இப்போர் முறைத்திட்டத் தைச் செயற்படுத்தி இலகு வாக வெற்றியைச் சந்திப்ப தற்காக பல்வேறுவிதமான தாக்குதல் தந்திரோபாயங் களைக் கடைப்பிடிக்க முடிவு செய்யப்பட்டது.

அதாவது, கண்ணிவெடி களைப் பயன்படுத்துவது. பதுங்கியிருந்து துப்பாக்கித் தாக்குதலைத் தொடுப்பது. மின்னல்வேக அதிரடிகளை நடாத்துவது.

இந்தத் தந்திரோபாயங் களை மேலும் வலுவுள்ள தாக்கி எதிரிக்கு உளவியல் தாக்கங்களைக் கொடுத்து நிலை தடுமாற வைப்பதற்காக பல வழிவகைகள் கைக்கொள்ளப்பட்டன.

மதகுக்குள் கண்ணிவெடி வைத்தோம். வீதியில் இயல் பாக இருந்த குழிக்குள் கண் ணியை புதைத்தோம். வீதியைத் தோண்டி அதற்குள் கண்ணியைப் வைத்து உரு மறைப்புச் செய்தோம்.

வீதியில் நிறுத்தியிருந்தவாக னத்துக்குள் கண்ணியை வைத்து வெடிக்கச்செய்தோம்.

கட்டடங்களில் இருந்து துப் பாக்கித் தாக்குதலைத் தொடுத்தோம்.

பற்றைகள், தோட்டங்களுக் குள் இருந்தும் துப்பாக்கித் தாக்குதலை நடாத்தினோம்.

சைக்கிள்களில் சென்று அதிர டிகளை மேற்கொண்டோம்.

வாகனங்களில் வந்தும் அதிர டிகளை மேற்கொண்டோம்.


எதை, எப்படி எதிர்கொள் வது என்று தெரியாது எதி ரியை மலைக்கச் செய்வதன் மூலம் எமது போர்முறைத் திட்டத்தின் இலக்கை அடைய முயற்சிசெய்தோம்.

அதாவது எதிரியின் எழுந்த மானமான நகர்வுகளை, ரோந்துகளை தடுக்க முயன்றோம். அதன் மூலம் யாழ். குடாநாட்டின் மீது எதிரி வைத்திருந்த கட்டுப் பாட்டை தகர்க்கவிழைந் தோம்.

இதன் மூலம் எங்களது நகர்வுகளையும், தொடர்பு களையும் இலகுவாக்கிக் கொண்டு போராட்டத்தை இன்னொரு கட்டத்திற்கு நகர்த்தினோம்.

இனி ஆனையிறவுச் சமர்க் களத்துக்கு வருவோம். ஆனையிறவுத் தளத்தை அழித்தொழித்து அந்தப் பகு தியை எதிரியின் பிடியிலிருந்து விடுவிப்பதுதான் எமது போர் முறைத்திட்டத்தின் இலக்கா கும். அதை எட்டுவதன்மூலம்

## ஆனையிறவு சிறீலங்காப் படைத்தளம்



1. பெரிய உப்பள பிரதான படைமுகாம்
2. இராணுவ தடைமுகாம்
3. பாடசாலை இராணுவமுகாம்
4. பிரதான உப்பள அலுவலக இராணுவ முகாம்
5. சுற்றுலா விடுதி இராணுவ முகாம்
6. யாழ்ப்பாணம் நோக்கிய பிரதான வீதி
7. யாழ்ப்பாணம் நோக்கிய புகையிரதப் பாதை
8. புல்லாவெளிச் சந்தி நோக்கிய பாதை
9. தட்டுவன் கொட்டிப் பாதை

வடதமிழீழத்தின்மைய நிலக் கட்டுப்பாட்டை எதிரியிடமிருந்து பூரணமாகவே விடுவித்துவிட முடியும்.

ஆனையிறவு தளம் தொடர்பாக எதிரியின் நிலை என்ன? அந்தத்தளம் எந்தப்பாதுகாப்பு முறையின் கீழ் (defense system) அமைத்து வைக்கப்பட்டிருக்கின்றது என்பதை அறிந்து கொண்ட பின்னர்தான் அதை அழிக்கவென நாம் ஒரு போர் முறைத்திட்டத்தை வரையமுடியும்.

### தளத்தின் அமைப்பு, அமைவிடம், அதன் பலம், பலவீனம்.

எனவே முதலில் ஆனையிறவு தளத்தின் அமைப்பு, அமைவிடம், அதன் பலம், பலவீனம் என்பவற்றை ஆராய்வோம்.

சென்ற ''விடுதலைப்புலிகள்'' பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டதைப்போல ஆனையிறவு தளமானது தொண்டைக்குள் திணிக்கப்பட்ட முள்ளைப்போலவே அமைந்திருக்கின்றது.

வட தமிழீழத்தின் பெரு நிலப்பரப்புடன் குடாநாட்டை இணைக்கும் ஒரே ஒரு தரைப்பாதையில் குந்தியிருந்தபடி வடதமிழீழ மக்களுக்கு பெரும் துன்பத்தையும், சுமைகளையும் சுமத்திக் கொண்டிருக்கின்றது.

கோட்டை, கொக்காவில், மாங்குளம்முகாம் தகர்ப்புகள் எதிரிக்கு ஒரு பாடத்தைக் கற்றுக் கொடுத்திருக்கின்றன. அதாவது, கடற்றொடர்புகள் இல்லாமல் வடதமிழீழத்திற்குள் எந்த ஒரு இராணுவ முகாமையும் வைத்திருப்பதோ அல்லது புதிதாக அமைக்க முயலுவதோ புத்தி சாதுரியமான விடயமல்ல.

ஆனால் கடற்றொடர்புகள் அற்ற நிலையிலும் ஆனையிறவை தன்வசம் வைத்திருப்பதற்கு எதிரியிடம் சில காரணிகள் இருக்கின்றன.

ஆனையிறவு ஒரு முகாமைப்போல அல்லாமல் பலமுகாம்கள்சேர்ந்த ஒரு தளமாகஇருப்பது ஒரு காரணம். தளங்கள் இதுவரை எம்மால் அழிக்கப்படவில்லை. எனவே ஆனையிறவுத் தளத்தை, பாதுகாப்பாக வைத்திருக்கலாம் என்ற நம்பிக்கை எதிரிக்குப்பிறப்பது புரிந்து கொள்ளக் கூடியதே.

அடுத்தது ஆனையிறவுத் தளம் அமைந்திருக்கும் பகுதியினதும், அதன் சுற்றாடலினதும், பூகோள அமைப்பும், தன்மைகளும் எதிரிக்குச் சார்பானதாகவே இருக்கின்றது.

படைத்தளத்தின் பெரும் பகுதி உப்புநீரேரியால் அரண் செய்யப்பட்டுக்கிடக்கின்றது. தளத்தைச்சூழ பெரும் வெளிப்பிரதேசம் உண்டு. அத்துடன் பெருங்கடலுடன் தொடுக்கப்பட்டிருக்கும் ஆனையிறவுப்பகுதி முழுவதுமே பொட்டல் வெளிகளையும், நீர் நிலைகளையும் கொண்டதாகவே இருக்கின்றது.

இந்தப் பூகோள அமைப்பு எதிரிக்கு இரண்டு விடயத்தில் சாதகமாக இருக்கின்றது.

I. தளத்தைச் சூழநின்று புலிகள் தாக்குதலைத் தொடுத்தாலும் கலபமாக வான்தாக்குதலை நடாத்தி அதைமுறியடித்துவிடமுடியும்.

II. அதற்கும் மேலாக ஒரு அவசரநிலை ஏற்பட்டாலும்கூட பெருங்கடலுடன் தொடர்புடைய பரந்த வெளிகளில் எங்கோ ஓரிடத்தில் வான்வழிமூலமோ அல்லது கடல் வழி மூலமோ மேலதிக படைகளை இறக்கி ஆனையிறவு தளத்தைப் பாதுகாக்கலாம் என எதிரி நம்பிக்கை கொண்டிருக்கலாம்.

இத்தகைய காரணிகளால் தான் ஆனையிறவில் தொடர்ந்தும் நிலைகொண்டிருக்க எதிரி துணிகின்றான்.

ஆனையிறவு தளத்தின் ஒரு முனையாகிய தடைமுகாம் பகுதியிலிருந்து (இதுதான் முன்னைய ஆனையிறவு முகாமாகும்) மறுமுனையாகிய உல்லாச விடுதிமுகாம் வரை (இது உப்புக் கூட்டுத்தாபன அதிகாரிகளின் தங்குவிடுதியாகும்.) சுமார் 3 கி. மீ. தூர வவுனியா-யாழ். நெடுஞ்சாலை உள்ளடங்கியிருக்கின்றது- இந்த நெடுஞ்சாலையை உள்வாங்கியதாக உப்புக் கடலேரி, மற்றும் உப்புக் கூட்டுத்தாபனம், சந்தை, பாடசாலை, மற்றும் கட்டடங்கள் யாவுமே எதிரியினால் இராணுவ மயப்படுத்தப்பட்டிருக்கின்றன.

ஆனையிறவு இராணுவத் தளம் 5 பெரிய முகாம்களைக் கொண்டதாக விளங்குகின்றது.

I. தடைமுகாம்
II. உப்பள அலுவலகமுகாம்
III. உப்புக்கூட்டுத்தாபன முகாம்
IV. பாடசாலை முகாம்
V. உல்லாச விடுதிமுகாம்

என்பனவே அவையாகும். இதில் மையப்பகுதியிலிருக்கும் உப்புக்கூட்டுத்தாபன முகாமே தளத்தின் பெரியதும், பிரதானமான முகாமுமாகும். இங்கே தான் உலங்குவானூர்தி இறங்கு தளமும் உண்டு. வாரத்தில் ஒரு நாள் பல உலங்கு வானூர்திகள் மூலம் தளத்துக்கான உணவு, வெடிமருந்து விநியோகங்கள் நடைபெறும்.

தளத்தின் வடபகுதியில் (இயக்கச்சிப்பக்கம்) இருக்கும் தடைமுகாமிற்கும், தென் பகுதியில் (பரந்தன் பக்கம்) இருக்கும் உல்லாசவிடுதி முகாமிற்கும் முன்னால்தான் எமது காவல் அரண்களுண்டு. தளத்தின் மற்றைய பகுதிகளில் எமது காவலரண்கள் இல்லை. ஏனென்றால் அவை நீரிணையால் சூழப்பட்டு பாதுகாப்பாக இருக்கின்றன. முன்சொன்ன இரண்டு முகாம்களுக்கு ஊடாகத்தான் தளத்தின் மற்றைய பகுதிகளுக்கு தரைப்பாதை உண்டு.

தடைமுகாமிற்கு முன்னால் சுமார் 200 - 300 மீற்றர் தூரத்திலும் உல்லாச விடுதிக்கு முன்னால் சுமார் 500-600 மீற்றர் தூரத்திலும் எமது காவல் அரண்கள் உண்டு. இந்த இடைத் தூரத்தில் எதிரி மிதிவெடிகளை விதைத்து வைத்திருந்தான்.

நூற்றுக்கணக்கான படைவீரர்களுடன் ஏராளமான இலகு இயந்திரத் துப்பாக்கிகள், எறிகணை செலுத்திகள் மற்றும் சாதாரண சுரிகுழல் (றைபிள்) துப்பாக்கிகளை விட, நீண்ட தூரம் பாயும் ஆட்டிலறிகள், பலமான காவல் அரண்களையே உடைத்தெறியும் பீரங்கிகள், (பின் உதைப்பில்லா பீரங்கி) ஆர். சி. எல். எனப்படும், பீரங்கிகள், கவசவாகனங்கள் என்பன ஆனையிறவுத் தளத்தில் உண்டு. அத்துடன் விமானங்களும், உலங்கு வானூர்திகளும் ஆனையிறவு தளத்தின்-பிரதான நம்பிக்கைக்குரிய ஆயுதங்களாக இருந்தன:

ஆனையிறவுப்பகுதி முழுவதுமே நிலக்கீழ் நீர்மட்டம் உயர்ந்து காணப்படுவதால் இரண்டு அல்லது மூன்று அடிக்கு மண்ணைத் தோண்டும் போது நீர் சுரந்து விடுகின்றது. எனவே பதுங்குகுழி என்பது சாத்தியம் இல்லாது போகின்றது.

இத்தனையையும் கருத்திற் கொண்டே ஆனையிறவுச் சண்டைக்கான போர்முறைத் திட்டத்தை வகுத்தோம்.

### தாக்குதற் போர்முறையும், தற்காப்புப் போர்முறையும்

ஆனையிறவுச் சண்டைக்குரிய போர்முறைத்திட்டத்தின் முதலாவது கட்டம் ஆனையிறவுத் தளம்மீது ஒரு இறுக்கமான முற்றுகை வலையை விரிப்பதுதான். அதன் மூலம் தளத்துக்குள்ளே உலங்குவானூர்திகளை இறங்கவிடாது தடுத்துமருத்துவத்தையும். விநியோகங்களையும் தடைசெய்தபடி தினமும் தளம் மீது தாக்குதலைத் தொடுப்பது.

இந்த முயற்சியில் நாம் ஈடுபடும்போது தளத்தைப் பாதுகாப்பதற்காக வான்வழி மூலமாகவோ, கடல்வழிமூலமாகவோ துருப்புக்களைத் தரையிறக்கி தளமுற்றுகையை எதிரியுடைக்கமுயல்வான்.

அதற்காக ஆனையிறவுத் தளத்தின் தென்பகுதியுடன் சேர்ந்தபடி இருக்கும் கண்டாவளை, பரந்தன், பூநகரி ஆகிய பகுதிகளில் வான்வெளி தரையிறக்கத்தை எதிர்பார்த்து காத்திருக்கவேண்டும். அதேபோல தளத்தின் வடபகுதியுடன் இணைந்தபடியுள்ள இயக்கச்சி, கட்டைக்காடு,வெற்றிலைக்கேணி மற்றும் சுண்டிக்குளம் ஆகிய பகுதிகளில் ஒரு கடல்வழித் தரையிறக்கத்தை எதிர்பார்த்து அதற்கேற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அப்படியானதொரு தரையிறக்கம் தொடர்பாக எதிரியை குழப்பத்துக்குள்ளாக்குவ தற்காக சில தந்திரோபாயங்களை கடைப்பிடித்தோம். அதாவது பெரிய ஆயுதங்களைப்போலவும், புலி வீரர்களைப்போலவும் மாதிரி உருவங்களைச் செய்து ஆங்காங்கே நிறுத்தியிருந்தோம்.

ஆனையிறவுச் சண்டையை இரண்டு பரிமாணத்தில் நடாத்துவது என்று திட்டமிட்டிருந்தோம்.

I. தளம்மீது ஒரு தாக்குதற் போர்முறையை (Offensive) பிரயோகித்தல்.

இந்தப் போர்முறையின் நோக்கம் எதிரிமுகாங்களை விரைவாகக் கைப்பற்றுவது தான். இதை இலகுவாக்குவதற்காக இரவில் அதிரடித் தாக்குதலை நடாத்தும் தந்திரோபாயத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். ஆனால் எதிரி விதைத்து வைத்திருக்கும் மிதிவெடிகளும், சண்டை தொடங்கிய பின் இயந்திரத்துப்பாக்கி கொண்டு எதிரி அமைக்கப் போகும் வேலியைத் தாண்டுவதும் அங்கே முக்கிய பிரச்சினைகளாக எழும். இதை வெற்றிகொள்ள சில வழி முறைகளைக் கடைப்பிடிக்க முன்னேற்பாடு செய்திருந்தோம். அதாவது ''பசிலன் 2000'', எறிகணைகளை சரமாரியாக உள்ளே எறிந்து கொண்டு அதே சமயம் கவசமிடப்பட்ட புல்டோசர்கள், உழவு இயந்திரங்கள் ஆகியவற்றுடன் தேவை ஏற்பட்டால் உரல் வடிவிலான மரக்குற்றிகளை உருட்டியபடி எதிரியின் பாசறைக்குள் புகத் திட்டம் வகுத்திருந்தோம்.

II. தரையிறக்கப்படப் போகும் படையினருடன் ஒரு தற்காப்பு (Defensive) போர் முறையைக் கைக்கொள்ளல்

இது பெரும்பாலும் ஒரு நேரடிச்சண்டையாகவே இருக்கும். எனவே உருமறைப்புச் செய்தலும் எதிரியை ஏமாற்றி திசைதிருப்புவதும், விநியோகங்களும் தகவல் தொடர்புகளும் மிக மிக முக்கியமானவை எனக் கண்டு கொண்டோம்.

### அறிமுகப்படுத்தப்பட்ட விமான எதிர்ப்புத் துப்பாக்கிகள்.

இந்த இரண்டு போர் முனைகளுக்கும் பொது எதிரியாக இருக்கப்போவது போர் விமானங்களும், உலங்கு வானூர்திகளுமாகும். இப் பெரும் சண்டைக்குரிய திட்டத்தைத்தீட்டும்போதே விமானங்களால் வரும் இடர்களை நீக்க நாம் புதிதாக அறிமுகப்படுத்திய அதிநவீன விமான எதிர்ப்புத் துப்பாக்கிகளைப் பயன்படுத்த வழி வகைகளைச் செய்திருந்தோம்.

இந்தச் சண்டையில் பங்கு பற்றுவதற்கென்று புலி வீரர்களை தயார்நிலையில் வைத்திருந்தோம். இவர்கள் பல அணிகளாகப் பிரிக்கப்பட்டு அவர்களுக்குரிய ஆயுதங்களும்,பொருட்களும் வழங்கப்பட்டு அவர்களுக்குரிய கடமைகளும் தெளிவுபடுத்தப்பட்டன.

படையணிகளின் நகர்வுகளை விரைவாக்கவும், மருத்துவசேவையை அதிவேகத்துடன் செய்யவும் என்று ஆனையிறவுத் தளப்பகுதியுடன் இணையும பிரதான நெடுஞ்சாலைகளை திருத்தி அமைத்தோம்.

எல்லாவற்றிற்கும் மேலாக இப்போர்முறைத் திட்டத்தில் மக்களின் பங்களிப்பை இணைக்கும் வழி வகைகளை மேற்கொண்டிருந்தோம்.

### போர்முனைகளும், தளபதிகளும்

இப்பெரும் சண்டையைத் திறம்பட நடாத்துவதற்காக ஒவ்வொரு போர் முனைகளுக்கும் கள அனுபவம் வாய்ந்த தளபதிகள் நியமிக்கப்பட்டிருந்தார்கள்.

ஒட்டு மொத்தமாக ஆனையிறவுச்சண்டையை நடாத்துவதற்குப் பொறுப்பாக எமது மூத்த தளபதிகளில் ஒருவரான திரு. பொட்டு நியமிக்கப்பட்டிருந்தார்.

ஆனையிறவு இராணுவ தளத்தின் தென்பகுதிமுனையில் (பரந்தன் பக்கம்) நடைபெறும் சமர்களுக்குப்பொறுப்பாக சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணித் தளபதி திரு. பால்ராஜ் நியமிக்கப்பட்டிருந்தார்.

இவரது தலைமையின் கீழ் இப்பகுதி தாக்குதல் அணிகளுக்குநேரடித்தலைமை தாங்க தளபதி சூசை அவர்களும் நியமிக்கப்பட்டிருந்தார். இவருடன் மகளிர்படைப்பிரிவின் தளபதிகளில் ஒருவரான ஜெனா நியமிக்கப்பட்டிருந்தார்.

அதே சமயம் இதே பகுதியில் வான்வழித் தரையிறக்கத்தை எதிர்பார்த்து நின்ற காவல் அணிகளுக்கு தண்டேஸ் அவர்கள் நியமிக்கப்பட்டிருந்தார். (பின்னர் நடந்த மணலாறு சமரில் இவர் வீரமரணமடைந்தது குறிப்பிடத்தக்கது). இவருடன் மகளிர் படைப்பிரிவின் துணைத்தளபதி ராதாவும் நியமிக்கப்பட்டிருந்தார். இவர்களுடன் இப்பகுதியின் விநியோகங்களுக்குப் பொறுப்பாக வன்னிப்பிராந்தியத்தின் தளபதிகளில் ஒருவரான குட்டியும். வன்னிமாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் மனோவும் நியமிக்கப்பட்டிருந்தார்கள். அத்துடன் இப்பகுதியில் மீட்பு வேலைகளுக்குப் பொறுப்பாக வன்னிமாவட்டத் தளபதிகளில் ஒருவரான மல்லி அவர்கள் நியமிக்கப்பட்டார். அத்துடன் இப்பகுதியில் மருத்துவ வேலைகளுக்கு வன்னிமாவட்ட மருத்துவப்பிரிவுப் பொறுப்பாளர் திவாகர் நியமிக்கப்பட்டிருந்தார்.

இராணுவத்தளத்தின் வட முனையில் (இயக்கச்சிப் பக்கம்) நடைபெறும் சண்டைகளுக்குப் பொறுப்பாக யாழ். மாவட்டத்தளபதி தினேஸ் நியமிக்கப்பட்டிருந்தார்.

இவரது தலைமையின் கீழ் இப்பகுதி தாக்குதலணிகளுக்கு தென்மராட்சிப் பகுதிப் பொறுப்பாளர் குணாவும், மகளிர்படைப்பிரிவுத் தளபதிகளில் ஒருவரான விதுசாவும் நியமிக்கப்பட்டிருந்தார்கள்.

வெற்றிலைக்கேணி - கட்டைக்காடு கடற்கரைச் சமருக்குப் பொறுப்பாக லெப். கேணல் சூட்டி நியமிக்கப்பட்டிருந்தார்.

இவர்களுடன் இப்பகுதி விநியோகங்களுக்குப் பொறுப்பாக யாழ்-மாவட்ட அரசியல் -நிர்வாக உதவிப்பொறுப்பாளர் பாப்பா நியமிக்கப்பட்டார். அத்துடன் இப்பகுதி மீட்பு வேலைகளுக்குப் பொறுப்பாக யாழ். மாவட்ட கொள்கை முன்னெடுப்புப் பிரிவுப் பொறுப்பாளர் ஆஞ்சநேயர் நியமிக்கப்பட்டார். அத்துடன் இப்பகுதியில் மருத்துவ வேலைகளுக்கு யாழ். மாவட்ட மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளர் மனோச் நியமிக்கப்பட்டிருந்தார்.

இந்தச் சண்டையின் போக்கைப் பொறுத்து ஏற்படும் திடீர் திருப்பங்களுக்கு ஏற்ற வகையில் தேவையான முடிவுகளை அவ்வப்போது எடுக்கவேண்டும் என்றும் தீர்மானித்து வைத்திருந்தோம்.

மேலும், சண்டை நடைபெறப்போகும் இடம் உவர் மண் எனவே உணவு, நீர் தூர இடங்களிலிருந்தே எடுத்துவரவேண்டும். விநியோகமும், மருத்துவமும் சரியாக நடைபெறாது விடின் சண்டையின் திசையே மாற்றமடைந்துவிடும். இவற்றைச் சீராகச் செய்வதற்கு பெரிய மனிதசக்திதேவை. இதற்காக இயக்கத்தின் பல்வேறு வேலைத் திட்டங்களிலும் பணியாற்றிக் கொண்டிருந்த போராளிகள் இந்த இராணுவ நடவடிக்கைக்காக அழைக்கப்பட்டிருந்தார்கள்.

இந்தஇராணுவநடவடிக்கை நடைபெறப்போகும் இடம், அதன் இராணுவ கனபரிமாணம் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு இச்சண்டைக்கு ஆ. க. வெ இராணுவநடவடிக்கை எனப் பெயரும் சூட்டினோம். அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்ட பின்னர் யூலை மாதம் 10ம் திகதி சண்டையைத் தொடங்குவது என்று முடிவெடுத்தோம்.

www.eelamview.com

# ஆனையிறவுத்தளம்மீதான முற்றுகைச் சண்டை

வளர்பிறை காலம். அத னால் முன்னிரவு அதிக கருமையாகவே இருந்தது. தென்மராட்சியின் ஒதுக்குப் புறமொன்றில் மக்கள் நட மாட்டம் அற்றுக்கிடந்த ஒரு பெரிய தென்னந்தோட்டம். சில நாட்களாக மனிதர்க ளால் நிரம்பி வழிந்துகாணப் பட்டது. அவர்களது கபட மற்ற பேச்சுக்களும் சூழலை மறந்த மகிழ்ச்சிப்பிரவாகமும் இடையிடையே கேட்ட இரா ணுவ "விசிலும்" அதை ஒரு பட்டதனமாக இனங் காட்டிக்கொண்டிருந்தது.

இந்த மண்ணின் தலை விதியை ஆயுதப்போரால் நிர்ணயித்துக்கொண்டிருக்கும் புலிவீரர்களினால் அத்தென் னந்தோப்பு நிரம்பிவழிந்தது.

இரவு 8-00 மணி நீண்டு பரந்துகிடக்கும் அந்தத் தென் னந்தோட்டத்தின் எட்டுத்தி சைகளிலும் திடீரென "விசில்" சத்தங்கள் எழுந் தன சிரிப்புகள், சத்தங்கள் மறைந்தன. ஓடும் காலடிச் சத்தங்களும் இயந்திரத்துப் பாக்கிகளின் "ரம்" மகசின் கள் சூலுங்கும் சத்தங்களும் மட்டும் இருட்டுக்குள் கேட் டுக்கொண்டிருந்தன.

ஒரு சில நிமிடத்தில் அந் தத்தோட்டத்தின் மத்தியில் அமைக்கப்பட்டிருந்த நான்கு மாவீரர்களின் கல்லறை களுக்கு அருகில் அனைவரும் குழுமினார்கள். "ஜெனரேட் டர்" ஒன்றின் உதவியுடன் ஒரு சில மின்குமிழ்கள் ஒளி ரத் தொடங்குகின்றன. கல் லறைக்கு அருகில் நின்ற கொடிக்கம்பத்தில் ஆரவார மில்லாது புலிக்கொடி பறந்து கொண்டிருப்பது தெரிகின் றது.

துப்பாக்கிகளின் குழாய்கள் வானைநோக்கிப் பார்க்கும் வண்ணம், துப்பாக்கிகளை அணைத்தபடி அனைத்துப் புலிகளும் வரிசைக் கிரமத் தில் தரையில் அமர்ந்திருந் தார்கள். அவர்களது முகத் தில் உற்சாகம், ஆவல், பர பரப்பு எல்லாம் ஒருங்கு சேரக் காணப்பட்டது.

மின்குமிழ்களின் ஒளியை யும் தாண்டி இருட்டை ஊட றுத்துப்பார்த்துக் கொண்டி ருந்தார்கள். அவர்கள் தலை வர் பிரபாகரனை எதிர்பார்த் துக் காத்திருக்கின்றார்கள். அவர்கள் எதிர்பார்த்தது போன்றே தலைவர் பிரபாக ரன் சிரித்தமுகத்துடன் கம் பீரமாக நடந்து வந்து போராளிகளுக்கு முன்னா லுள்ள கதிரையொன்றில் அமர்ந்தார்.

அங்கே அமர்ந்திருந்த போராளிகள் எல்லோரும் ஆனையிறவு இராணுவத் தளம் மீதான அதிரடித்தாக் குதலில் பங்குபெறப்போகும் புலிவீரர்கள் ஆகும். தாக்குத லுக்குத் தேவையான பயிற்சி கள், ஒத்திகைகளையே அந் தத் தோட்டத்திற்குள் அவர் கள் செய்து கொண்டிருந்தார் கள். போராளிகள் மத்தியில் தலைவர் உரையாற்றத் தொடங்கினார்.......

எதிரியின் அழிவில்தான் எங்களது வெற்றியே தங்கியி ருக்கின்றது. எங்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டுக்கொண் டிருக்கும் இராணுவ வீரனது உயிர் பிடுங்கப்படும்வரை எமது போராளிகள் உயிரிழந்து கொண்டிருப்பார்கள். எனவே எதிரியின் அரண்களுக்குள்ளே வேகமாகச் செல்லுங்கள். முடிந்தவரை எதிரிகளை விரை வாக வீழ்த்துங்கள். அதன் மூலம் வெற்றியைப் பெறுங்கள் என போரின் உண்மைத் தாற்பரியத்தைப் பற்றி தலை வர் பிரபாகரன் போராளி களுக்கு விளக்கிக் கொண்டி ருந்தார்.

செல்லுங்கள், வீழ்த்துங்கள், வெல்லுங்கள்...... என்ற பொருள் பொதிந்த வார்த்தை களை அடிக்கடி பயன்படுத்திக் கொண்டிருந்தார்.

ஒரு சண்டையில் சாதக - பாதக நிலைமைகளை எப் படி எதிர்கொள்வது. நிலை மைகளை எங்களுக்குச் சார் பாகப்படிப்பயன்படுத்துவது என்பதுபற்றியும் போராளி களுக்குச்சொல்லிக் கொடுத் துக்கொண்டிருந்தார். அவ்வப் போது தங்களுக்கேற்படும் சந்தேகங்களை கேள்வியாகக் கேட்டு தலைவரிடம் இருந்து விளக்கங்களைப் பெற்றுக் கொண்டிருந்தார்கள். கூட்டம் சுமார் 1 மணி நேரம்வரை நீடித்தது.

தலைவர் விடை பெற்றுக் கொள்ளும்போது அனைத் துப்போராளிகளின் மனங்களி லும் நம்பிக்கை, உற்சாகம்ஊற் றெடுத்திருந்ததை அவதானிக் கக்கூடியதாக இருந்தது.

கூட்டம் முடிவடைந்த ஒரு சில நிமிடங்களில் இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் கடும் இரைச்சலுடன் ஆனையி றவுத் தளத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தன. தாளப்பறப்பதற்கான அறி குறியே அந்தக் கடும் இரைச் சல்.

விமானங்கள் செல்லும் சத்தத்தை உற்றுநோக்கிய படி இருந்து விட்டு ஒரு தோழன் "ஆனை யிறவுச் சண்டை ஆரம்பித்த மறுகணம் எதிரிவிமானங்கள் இவ்வளவு பதிவில் பறக் குமா?" என அர்த்தம் தொனிக் கக் கூறினான்.

ஆனையிறவுத் தளம் மீது பாரிய தாக்குதல் ஒன்றைத் தொடுப்பதற்கு நாம் ஆயத் தங்களைச் செய்கின்றோம் என்பது எதிரிக்கும் நன்கு தெரியும். அதை அவன் பகி ரங்கமாக அறிவித்துமிருக் கின்றான். இச் சமரைப் பொறுத்தளவில் இது தவிர்க்க முடியாததுதான். பல மட்டங்களிலும், பல வழிகளிலும் இச் சமருக் குரிய ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. பெருமளவு வேலைகளை மக்களே செய்து கொடுத்தார்கள். இதற்கேற் றாற்போல் எதிரியும் ஆனை யிறவுத் தளத்தை பலப்படுத் தினான்.

சுருக்கமாகச் சொன்னால் இரண்டு பகுதியிலும் சண் டைக்குரிய ஏற்பாடுகள் ஏட் டிக்குப்போட்டியாக நடந்து வந்தன.

9ம் திகதி பகல் பொழுதில் குண்டுவீச்சு விமானங்கள் புடைசூழ, உலங்குவானூர்தி கள் பறந்துவந்து தளத்திற் குள் இறங்கி ஏறின. அவை உணவு, வெடிமருந்து போன்றவற்றை விநியோ கித்துவிட்டுத் திரும்பின.

9ம் திகதி நள்ளிரவுக்கு முன்னதாக முற்றுகைச் சண் டையில் ஈடுபடவிருந்த போராளிகள் தங்கள் தங்கள் நிலைகளுக்குச் சென்றனர். விடிந்தால் முற்றுகைச் சண் டைக்குரிய முரசு அறையப் பட இருந்தது.

## தளம்மீதான முற்றுகை

10ம் திகதி அதிகாலை 4.30 மணிக்கு தளத்தின் இரண்டு முனைகளாகிய தடைமுகாம் மீதும், உல்லாசவிடுதிமுகாம் மீதும் "பசிலன்" எறிகணை கள் விழுந்து முற்றுகைச் சண் டையைப் பிரகடனப்படுத் தின.

யிறவு தளத்தின் தென்பகுதிக் குப் பொறுப்பாக நியமிக்கப் பட்டிருந்த சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணித் தளபதி திரு. பால்ராஜ் அதற்குரிய நடவடிக்கைகளைச் செய்து கொண்டிருந்தார். முகாமைக் கைப்பற்ற வேண்டிய தாக்கு தலணிகளுக்குப் பொறுப்பாக தளபதி சூசை அவர்கள் நிய மிக்கப்பட்டிருந்தார். அவரு டன் மகளிர் படைப்பிரிவின் தளபதிகளில் ஒருவரான ஜெனாவும் நியமிக்கப்பட்டி ருநதார்.


எங்களது காவல் அரண்க ளிலிருந்து எதிரிமுகாமை அடைவதற்கு இடையிலுள்ள 500 யார் வெளியை நடந்து கடப்பது என்பது சாத்தியமே இல்லை. ஏனென்றால் தற் காப்புக்களை கைக் கொண்ட படி சண்டையை நடாத்தி முகாமிற்குள் நுழையக் கூடிய வகையில் அந்த 500 யார் இடைவெளிக்குள் இயற்கை யான காப்பரண்கள் எதுவுமே

## முதலாவது தாக்குதல்

10ம் திகதி இரவு 10 மணிக்கு சுற்றுலாவிடுதி முகாம் மீது தாககுதல் ஆரம்பிக்கப்பட் டது "பசிலன் 2000" எறி கணைகள் முகாமுக்குள் வீழ்ந்து வெடித்துக் கொண் டிருந்த அதேசமயம் மூன்று முனைகளிலிருந்து முகாமை நோக்கி விடப்பட்ட ஒரு புல்டோசரும் சில உழவு இயந் திரங்களும் புறப்பட்டன.

சண்டை தொடங்குமுன் விடுக்கபபடும் சட்ட பூர்வ அழைப்பைப் போன்று புல் டோசர்களினதும், உழவு இயந்திரங்களினதும் இரைச் சல்கள் எதிரிக்குக் கேட்டன.

வாகனங்களைக் கண்டதும் துப்பாக்கி விசைகளை சொடுக்கிவிடுவதுதான் அவர் களின் வேலை என்று சொல் லுமளவுக்கு காவல் அரண்க ளில் எதிரி தயாராகவே இருந் தான்.



ஒரு கவச வாகனம்போல் எம்மால் தயாரிக்கப்பட்ட "புல்டோசர்" வண்டி.

விடிந்ததும் போர்விமானங் களும், உலங்குவானூர்திகளும் வானை முற்றுகையிட்டபடி யிருந்தன. பசிலன் தாக்குதல் களால் காயமடைந்தவர் களை மீட்கவென உலங்கு வானூர்திகளை இறக்க முற் பட்டபோது, எமது புதியரக விமான எதிர்ப்புத்துப்பாக்கி கள் வானத்தில் கோடு கிழிக் கத் தொடங்கின. எதிரி விமா னங்களால் அந்தக் கோட் டுக்குமேலே நின்று வேடிக்கை பார்க்கத்தான் முடிந்தது. இத னைக் கண்ட எமது போராளி கள் மகிழ்ச்சிப்பிரவாகம் அடைந்தார்கள்.

முற்றுகை இறுக்கப்பட்டு விட்டதை முதன் முதலில் எதிரி உறுதிப்படுத்திக் கொள் கின்றான்.

அன்று இரவே (10ம் திகதி) சுற்றுலாவிடுதி முகாமைத் தாக்கிக்கைப்பற்றஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அனை

யில்லை. எனவே சண்டை தொடங்கியதும் இயந்திரத் துப்பாக்கி கொண்டு எதிரி அமைக்கப் போகும் தடுப்பு வேலியைத் தாண்டுவது முடி யாத காரியம்.

நாம் வரைந்த போர் முறைத்திட்டத்தில் இந்தச் சிக்கலுக்குத் தீர்வுகாணப் பட்டிருந்தது.

கவசமிடப்பட்டபுல்டோசர் களையும், உழவு இயந்திரங் களையும் முகாமை நோக்கி நகரவைத்து, அவற்றைக் காப்பரண்களாக்கிக் கொண்டு அதன் பின்னால் செல்லும் தாக்குதலணிகள் முதலில் காவல் அரண்களைக் கைப் பற்றுவது என்றும் பின்னர் அங்கிருந்து முகாமின் மத்திய பகுதிமீது தாக்குதலைத் தொடுத்து முகாமை எமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவது என்பது திட்டம்.

நாம் எதிர்பார்த்தபடியே தூரத்தில் வைத்து எமது கவச வாகனங்கள் ஆர்.பி.ஜி. மற் றும் எறிகணைத் தாக்குத லுக்கு உள்ளாகின. கவச மிடப்பட்ட உழவு இயந்திரம் ஒன்று குண்டடிபட்டுத் தீப் பிடித்தெரிந்தது. ஒரு சில சேதமடைந்தன. இவற்றுக் குள் இருந்த சிலசில போராளிகள் வீரமரண மடைந்தார்கள். பலர் காயத் துக்குள்ளானார்கள். ஆயினும் அனைத்து எதிர்ப்புக்களையும் தாண்டியபடி முன்னேறிய புல்டோசர் எதிரியின் முக்கிய காவல் அரண் ஒன்றை உடைத்து உட்புகுந்தது. உடைந்த காவலரணை எமது போராளிகள் கைப்பற்றி அதைத் தமது காவல் அர ணாகப் பயன்படுத்தி எதிரி மீது துப்பாக்கித்தாக்கு தலைத் தொடுத்தனர்.

www.eelamview.com

இதேவேளை உழவு இயந்திரங்களைக் காப்பரண்களாகக் கொண்டு முன்னேறி வந்த போராளிகள் முன்வரிசைக்காவல் அரண்களைப் பிடித்தனர்.

சிறிது நேரத்தில், மீண்டும், புல்டோசர் முகாமின் மத்திய பகுதிமீது ஓடிச் சென்று அங்கிருந்த காவல் அரண்களை உடைத்து எமது போராளிகள் அவற்றைக் கைப்பற்ற உதவிக் கொண்டிருந்தது. முகாமின் பிரதான கட்டடங்கள், காவல் அரண்களை நாம் கைப்பற்றிய பின்னர் எதிரி படிப்படியாக தனது அடுத்த பிரதான முகாமாகிய உப்பள அலுவலக முகாமை நோக்கி பின்வாங்கினான்.

நள்ளிரவு 12 மணியளவில் அதாவது தாக்குதல் தொடங்கி இரண்டு மணி நேரத்தின் பின்னர் தாக்குதலணிகளுக்குத் தலைமை தாங்கிச் சென்ற தளபதி சூசை உல்லாச விடுதி முகாமிற்குள் நின்றபடி "வோக்கிடோக்கி" மூலம் முகாம் கைப்பற்றப்பட்ட செய்தியை அறிவித்தார்.

விடிந்ததும் நடைபெறப் போகும் விமானக் குண்டுவீச்சுக்களிலிருந்து பாதுகாப்பைத்தேடுமுகமாக இரவிரவாகவே — நித்திரையின்றி கைப்பற்றப்பட்ட உல்லாச விடுதி முகாமின் காவல் அரண்களை புதுப்பிக்கத் தொடங்கினார்கள்.

இந்த முகாம் தாக்குதலில் 33 புலிகள் வீரமரணமடைந்தார்கள்.

## இரண்டாவது தாக்குதல்

அடுத்தநாள் (11 ம் திகதி) இரவு சுமார் 7.30 மணியளவில் தடைமுகாமின் ஒரு பகுதியாகவிருந்த படையினரின் தங்குவிடுதி மீது தாக்குதலைத் தொடங்கினோம்.

ஆனையிறவுத் தளத்தின் வடபகுதிக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டிருந்த யாழ். மாவட்டத்தளபதி தினேசின் கண்காணிப்பின்கீழ் இத்தாக்குதல் நடந்தது.

உள்நுழையும் தாக்குதலணிகளின் தலைவனாக தென்மராட்சிப் பொறுப்பாளர் திரு. குணா நியமிக்கப்பட்டிருந்தார். இவருடன், மகளிர் படைப்பிரிவின் சார்பில் அதன் தளபதிகளில் ஒருவரான விதுசாவும் நியமிக்கப்பட்டார்.

இருள்கவிழ்ந்த நேரத்திலிருந்தே இந்தத்தாக்குதலை எதிரி எதிர்பார்த்துத்தயாராகவே இருந்திருப்பான். இந்த முகாமும் எம்மிடம் வீழ்ச்சியடையுமாக இருந்தால், ஆனையிறவுத்தளமே புலிகளிடம் வந்துவிட்டதற்கு ஒப்பாகும் என அங்கிருந்த அனைத்து இராணுவத்தினரும் உணர்ந்தே இருப்பார்கள்.

எனவேதான் முகாமின் முழுப்பலத்தையுமே அங்கே பயன்படுத்த எதிரி வழிவகை செய்துவைத்திருந்தான்.

துப்பாக்கிச் சண்டை தொடங்கிய சில நிமிடங்களில் சின்ன உப்பளப்பகுதியிலிருந்து, தங்குவிடுதிப் பகுதிக்குச்செல்லும் ஒரு சிறிய பாதையூடு கவசமிடப்பட்ட எமது புல்டோசர் சென்று கொண்டிருந்தது. ஆனால் துரதிஷ்டவசமாக எதிரியின் காவலரணை அடைய முன்னர் தூரத்திலேயே பாதையை விட்டிறங்கி புதைந்துவிட்டது. இதனால் புல்டோசர் நகரமுடியாது போய்விட்டது. இருந்தபொழுதிலும் தாக்குதலணிகள் காவலரண்களை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தன. ஆனாலும் இயந்திரத் துப்பாக்கிரவைகளினால் எதிரி, அமைத்து வைத்திருந்த வேலியை எமது போராளிகளினால் தாண்டமுடியவில்லை. முன்சென்ற தாக்குதலணிகள் அதிக இழப்புக்களைச்சந்தித்தன. அந்த இடத்தைநிரப்பி தொடர்ந்து முன்னேறச் சென்ற உதவித்தாக்குதலணிகளும் பாரிய இழப்புக்களைச்சந்தித்தன. அத்துடன் உழவு இயந்திரங்களும், பல இடையூறுகளைச் சந்தித்ததால் அவற்றாலும் முன்னேறிச் செல்ல இயலவில்லை. எனவே தாக்குதல்களிலிருந்து பின்வாங்கினோம்.

இந்தச்சண்டையின் முடிவில் மொத்தம் 63 போராளிகள் வீரமரணமடைந்தனர். சுமார் 100 பேர் காயமடைந்தனர்.

## மூன்றாவது தாக்குதல்

முற்றுகைச் சண்டை தொடங்கி மூன்றாம் நாள் (12 ம் திகதி) ஆனையிறவுத் தளத்தைச்சூழ அமைதி நிலவியது. விமானங்கள் குண்டு வீச்சில் ஈடுபட்டதைத் தவிர சண்டை நடைபெறவில்லை.

அடுத்தநாள் 13 ம் திகதி இரவு 7 மணியளவில் மீண்டும் சண்டை மூண்டது. முதன்நாளே நாம்கைப்பற்றி வைத்திருந்த உல்லாசவிடுதி முகாமுக்கு அடுத்ததாக இருந்த உப்பள அலுவலக முகாமைத்தாக்கத் தொடங்கினோம்.

முதலாவது தாக்குதலைப் போன்றே இத்தாக்குதலும் தளபதி பால்ராஜின் கண்காணிப்பின் கீழ் தளபதி சூசை தாக்குதலணிகளுக்குத் தலைமைதாங்கினார். பெண் போராளிகளின் தரப்பில் மகளிர்படை அணித்தளபதிகளில் ஒருவரான ஜெனா தலைமைதாங்கினார்.



*மேஜர் கேசரி*

பாலகிருஷ்ணன் அரசகேசரி

தம்பசிட்டி, புலோலிமேற்கு

*பிறப்பு: 30-11-1963*

*வீரமரணம்: 13-07-1991*

உல்லாச விடுதிமுகாமுக்குள் இருந்து புல்டோசர் புறப்பட்டு பிரதானவீதியால் ஓடி உப்பள முகாமிற்குள் புகுந்தது. அதேவேளை எமது தாக்குதலணிகளும் புல்டோசரின் பின்னாலும் புகையிரதப்பாதை வழியாகவும் உள்நுழைந்தனர்.

உல்லாச விடுதி முகாமிலிருந்து உப்பள அலுவலக முகாமுக்கு ஒருசிறிய அகலங்குறைந்த நிலப்பகுதியூடாகத் தான் செல்லமுடியும். தார்ப் பாதையையும், புகையிரதப் பாதையையும் உள்ளடக்கியதாகவே அந்தச்சிறிய நிலப் பகுதி இருந்தது.

எனவே எமது தாக்குதல்களை முறியடிப்பதற்காக எதிரி அந்நிலப்பரப்பில் வரிசையாக பொறி வெடிகளை விதைத்து வைத்திருந்தான். இருந்தபொழுதிலும் கண்ணிவெடி அகற்றும் கருவிகளைப் பயன்படுத்தி எமது அணிகள் ஒவ்வொன்றாக உள்நுழையத் தொடங்கின.

உல்லாசவிடுதி முகாமுக்குள் இருந்து பிரதான பாதைவழியூடாக சென்று கொண்டிருந்த புல்டோசரை மேஜர் கேசரி ஓட்டிக்கொண்டிருந்தான்.

உல்லாச விடுதி முகாமைக் கைப்பற்ற வெற்றிகரமாகப் புல்டோசரை ஓட்டிச்சென்று சாதனை படைத்ததும் மேஜர் கேசரியே என்பது குறிப்பிடத்தக்கது.

பிரதான வீதியால் ஓடி உப்பள அலுவலக முகாமிற்குள் நுழைந்த புல்டோசர் தனது வேலையை ஆரம்பிக்கும் சமயத்தில் எதிரியினால் தாக்கப்பட்டு செயலிழந்து விடுகின்றது. இதேசமயம் உப்பள அலுவலக முகாமின் இன்னொரு பகுதியால் உள்நுழைந்த மேஜர் ரெட்டியினது அணி பலகாவலரண்களைக் கைப்பற்றியது.

### சண்டையில் ஏற்படும் சிக்கல்கள்

இந்த இடத்தில் ஒருசுவாரசியமானதும், சண்டையின் நடைமுறைச் சிக்கல்களை வெளிப்படுத்துவதுமான ஒரு சம்பவம் நடந்தது.

மேஜர் ரெட்டியினது தலைமையிலான அணி கைப்பற்ற வேண்டிய காவல் அரண் வரிசையில் இயந்திரத்துப்பாக்கிகள் பொருத்தப்பட்ட தொரு பலமான காவல் அரண் ஒன்று இருந்தது. இந்த அரணை இன்னொரு முனையால்-வேறொரு சிறிய அணி எதிர்கொண்டு அதன் கவனத்தைத் திருப்பி ரெட்டியினது அணிஉட்செல்வதற்கு ஒரு வசதி செய்யப்படவேண்டும் என்பது எமது போர் முறைத்திட்டத்திலிருந்த ஒரு தந்திரோபாயமாகும்.

அதன்படி சண்டை தொடங்கியதும் மேஜர் ரெட்டியினது அணி ஒருபுறத்தால் முன்னேறிச்செல்ல மற்றைய ஒரு சிறிய அணி பலமான அந்த அரணை நோக்கி வேறுதிசையால் சென்று கொண்டிருந்தது.

தாக்குதல்கள் தொடங்கியதும் எதிரியினதும், எங்களுடையதும் துப்பாக்கிகள் தீப்பொறிகளைக் கக்கிக்கொண்டிருந்தன. சண்டை மிக அருகில் நடப்பதால் எந்தத் தீப்பொறிகள் எமது துப்பாக்கிகளுக்குச்சொந்தமானவை என இனங்காண்பது கடினம். அத்தகைய வேளைகளில் "வோக்கி டோக்கி" மூலம் தொடர்புகொண்டு சந்தேகங்களை அணித்தலைவர்கள் தீர்த்துக்கொள்வார்கள்.

சண்டை நடந்துகொண்டிருக்கின்றது. மேஜர்ரெட்டியினது அணிதுரிதமாக அரண்களைக் கைப்பற்றிச் சென்று குறித்த பலமான காவல் அரணையும் பக்கவாட்டால் தாக்கி கைப்பற்றிவிட்டது



எதிரியின் படைத்தளத்தைச் சூழ பதுங்குகுழி அமைக்கும் பணியில் புலிவீரர்கள்

ஆனால் அந்த பலமான அரணைக் கவனித்துக்கொள்ளச்சென்ற அச்சிறிய அணி எதையுமே அறியாத நிலையில் தொடர்ந்தும் அவ் அரணைத் தாக்கிக்கொண்டே இருந்தது. ஆனால் தாக்குபவர்களும் எமது போராளிகள்தான். தாக்கப்படும் அந்த அரணுக்குள் நிற்பவர்களும் எமது போராளிகள்தான்.

இந்தச் சிக்கலைத்தீர்ப்பதற்கு மேஜர்ரெட்டி தனது வோக்கியின் துணையுடன் அச்சிறிய அணியின் தலைவனுடன் தொடர்பு கொள்கின்றார். ஆனால் தொடர்பு கிடைக்கவில்லை. குறித்த அரணை நாங்கள் கைப்பற்றி விட்டோம். உடனடியாகஇவ் அரண்மீதான தாக்குதலை நிறுத்தச் சொல்லும்படி தளபதி சூசையிடம் "வோக்கி டோக்கி" மூலம் ரெட்டி கேட்டுக்கொண்டிருந்தார்.

தளபதி சூசையும், தளபதி பால்ராஜ்"ம் அச்சிறிய அணியின் தலைவனை "வோக்கி டோக்கி" மூலம் துளாவினர். பலன் கிடைக்கவில்லை.

எதிரியினது ஒரு குண்டு அல்லது ஒரு எறிகணையின் சிதறல் அவ் அணித்தலைவனின் "வோக்கிடோக்கியை" சேதமடையச் செய்துவிட்டது என்பது புலனாயிற்று.

இந்தச் சிக்கல் சுமார் 30 நிமிடங்கள்வரை நீடித்தது. இறுதியில் மேஜர் ரெட்டியினது அணியிலிருந்து ஒரு போராளியை நேரடியாகவே குறித்த சிறிய அணிநிற்கும் இடத்துக்கு அனுப்பி செய்தியைச்சொல்லி தாக்குதலை நிறுத்துவிக்கும்படி தளபதி சூசை கட்டளையிட்டார். அதன்படியே செயற்பட்டு தாக்குதலும் நிறுத்தப்பட்டது. அதன் பின்னர் தொடர்ந்தும் மேஜர் ரெட்டியினது அணி முன்னேறிச் சென்று சண்டையைத் தொடர்ந்தது.

பரந்தஅளவில் - அதுவும் இரவு நேரத்தில் - ஒரு சண்டையை நடாத்துவது என்பது பல்வேறுவிதமான சிக்கல்கள் நிறைந்தது. அவற்றைப் பெருமளவுதீர்ப்பது "வோக்கி டோக்கிகள்" தான். தற்செயலாக ஏதோஒருகாரணத்தால்ஒருஅணியினது "வோக்கி டோக்கி" பழுதாகி அதற்குப் பதிலாகஇன்னொரு வோக்கி டோக்கியை பெறமுடியாத நிலையில் ஒரு அணித்தலைவன் இருப்பானாகில் சண்டையில் பெரிய சிக்கல்களை எதிர் கொள்ளவேண்டிவரும்.

மேஜர் கேசரி ஓட்டிச் சென்ற புல்டோசர் முகாமுக்குள் செயலிழந்துவிட்டதால் உப்பள அலுவலக முகாமிலுள்ள, அனைத்து அரண்களையும் கைப்பற்றி அந்த முகாமை முழுமையாக எம்மால் வெற்றிகொள்ள முடியவில்லை.

இறுதியில் கைப்பற்றிய காவல் அரண்களிலிருந்து நாம் மீட்ட எதிரியினது ஆயுதங்களுடன் உல்லாச விடுதி முகாமுக்குப் பின்வாங்கி விட்டோம். இந்தச்சண்டையில் 52 போராளிகள் வீரமரணமடைந்திருந்தனர். இந்தச்சண்டையின்முக்கிய நாயகனாக இருந்த மேஜர் ரெட்டி 22-09-1991 அன்று முள்ளியாவில் நடந்த இன்னொரு வெற்றிகரமான தாக்குதலில் வீரமரணத்தைத் தழுவிக் கொண்டான்.

## நான்காவது தாக்குதல்

14 ம் திகதி வெற்றிலைக் கேணியில் தரையிறக்கப்பட்ட இராணுவம் ஆனையிறவை நோக்கி நகரத்தொடங்கியது. எமது தீவிர எதிர்த்தாக்குதல் காரணமாக எதிரியினது நகர்வு ஆமைவேகத்திலேயே இருந்தது. வெற்றிலைக் கேணியில் தரையிறக்கப்பட்டு சரியாகப் 13 நாட்களின் பின்னர் நான்காவது தாக்குதலை ஆனையிறவுத் தளம் மீது தொடுத்தோம்.



*மேஜர் ரட்ணராஜ்*
*(ரெட்டி)*

தம்பிப்பிள்ளை அந்தோனிதாசன்

ஆஸ்பத்திரி வீதி, மன்னார்.

*பிறப்பு: 10-02-1970*

*வீரமரணம்: 22-07-1991*

11ம் திகதி தாக்கப்பட்டு வெற்றியைப்பெறாது போன தடைமுகாம் பகுதிமீதே இந்தத் தாக்குதலைத் தொடுத்தோம். அதாவது தடை முகாம்மீதான இரண்டாவது தாக்குதல் இதுவாகும்.

இந்தத் தாக்குதலில் ஈடுபட்ட அணிகளுக்குப் பொறுப்பாக தீவகப்பொறுப்பாளர் திரு. கிளி நியமிக்கப்பட்டிருந்தார். மகளிர்படை அணிசார்பில் தளபதி விதுசா அவர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்.

தடைமுகாம்மீது 11ந் திகதி நடாத்தப்பட்ட தாக்குதலிற்குப்பின்னர் இந்த முகாமை காவல்காத்த எமது அரண்களிலிருந்து தடைமுகாமை நோக்கி சுமார் மூன்று அடி ஆழமான அகழிகளை அமைத்தோம். தாக்குதல் தொடங்கிய பின்னர் எதிரியின் துப்

(19 ஆம் பக்கம் பார்க்க)

www.eelamview.com

# தாயின் அரவணைப்பு

இரவு விலக நினைத்த விடிகாலைப் பொழுது. வேகமாக வந்த வாகனமொன்று வைத்தியசாலை வாசலில் போராளி ஒருவனை இறக்கி விட்டு திரும்பி ஓடியது. அந்த வண்டிக்காக இன்னொரு போராளி காத்திருப்பான் போலும்.

இறக்கப்பட்ட அந்தப் போராளி படுகாயமடைந்திருந்தான். அவன் உடல் முழுவதும் கருகி இருந்தது. தீயின் நாக்கு அவனைப் படுகோரமாக சிதைத்திருந்தது. ஆனாலும் அந்தப் போராளி சலனமில்லாமல் அமைதியாக இருந்தான்.

இரவு முழுவதும் காயமடைந்த போராளிகளை பராமரித்துக் கொண்டிருந்த அம்மா தன்னையும் அறியாமல், அவனுக்குப் பக்கத்தில் சென்றாள் அவனுக்குரிய பணிவிடைகளைச் செய்யத் தொடங்கினாள்.

உருவம் தெரியாமல்போன அந்தப் போராளியில், அம்மா தன் மகனைக் கண்டாள். அம்மாவும், இந்த மண்ணின் விடுதலைப் போராட்டத்தில் ஒரு மகனை உரமாக்கியிருக்கின்றாள். அவனது பெயர் ராஜ்குமார். சில வருடங்களுக்கு முன் நெடுங்கேணியில் ஒரு சம்பவத்தில் வீரமரணமடைந்துவிட்டான். மகனைப் போலவே அம்மாவிற்கும் தேசத்தில் பற்று அதிகம்.

அம்மா விசிறியால் விசிறிக் கொண்டு இருந்தாள். அவளின் கை ஓயும் சில விநாடிகளுக்காக "ஈ"க்கள் காத்திருந்தன. தோல் சிதைந்து போன அவனது உடலில் அவை விழுவதை அவளால் பொறுக்க முடியாது அந்த நேரங்களில் அவளின் கைகள் வேகமாக இயங்கும்.

அந்தப் போராளி கண் விழித்த போது, அன்பே வடிவான அம்மா அவன் முன் நின்றாள் அவனின் தாயும் இப்படித்தான் இருப்பாள். போன வருடம் கூட அவனது தாய்- சகோதரர்கள் எல்லோருமே, திருக்கோணமலையில் உள்ள அவனது கிராமத்தில் மகிழ்ச்சியாக இருந்தார்கள். ஆனால், இப்போது அவர்கள் எங்கு என்று கூடத்தெரியாது.

அம்மா நீண்ட நேரமாக நின்றாள்.

"நிக்காதிங்கோ அம்மா இருங்கோ" என்றான் அவன். தனது பெயர் சசி என்றான். ஆனையிறவில் காயமடைந்ததாகக் கூறினான். அம்மாவிற்கு அதிசயமாக இருந்தது அந்த மகன் கதைக்கிறான். அவன் பரபரப்பாகத் திரிந்தான். இன்னொரு அன்னையையும் உதவிக்கு அழைத்தான்.

வைத்தியர்கள் வந்து பார்த்துவிட்டு பதிலேதும் சொல்லாமல் சென்றார்கள்.

அம்மா தொடர்ந்து விசிறிக் கொண்டு இருந்தாள். இரவுகளில் உறங்காததால் அவளும் சோர்வாக இருந்தாள். ஒரு தரம் தவறுதலாக விசிறி அவன் உடலில் பட்ட பொழுது அம்மா துடித்தாள்.

அவனோ "பரவாயில்லை அம்மா" என்றான். அந்தப் போராளி அம்மாவுடன் மனம் விட்டுப் பேசத் தொடங்கினான்.

"நாங்கள் முன்னேறிக் கொண்டிருந்தோம் அம்மா, இராணுவ முகாமின் வேலி எங்களுக்கு அருகில்தான் கிடந்தது. ஆனால், அந்த நேரம்தான் குண்டொன்று விழுந்து என் உடல் எல்லாம் தீப்பிடித்து விட்டது. அதை அணைப்பதற்காக நான் உருண்டனான் பிரண்டனான். ஆனால்..., அதற்கிடையில்எரிஞ்சுபோனனம்மா"

"அவங்களை விடக்கூடாது, எங்கட மண்ணில இருந்து... வார்த்தைகளை முடிக்க முடியாமல் அவன் துவண்டு போனான்.

"கதைக்காதையப்பன், உன்னால ஏலாது. களைச்சுப் போவாய். நீங்கள் படுகிற கஸ்டத்துக்கெல்லாம் பலன் கிடைக்காமல் போகாது. தமிழீழம் நிச்சயம் கிடைக்குமடா" அம்மா அமைதியாக ஆனால் உறுதியாகச் சொன்னாள்.

நேரம் செல்லச் செல்ல சசி வாடிப் போனான். உடலிலிருந்து ஊனம் வழிந்து கொண்டிருந்தது. முதுகு எல்லாம் எரிந்து இருந்தது. படுப்பதற்காக சரியாகக் கஸ்டப்பட்டான். எழுந்து இருக்கப்பார்ப்பான் இயலாமல் தவிப்பான். வேதனையைத் தாங்க முடியாமல் முகத்தை அடிக்கடி சுழிப்பான். மற்றும் படி அவன் முனகவோ- கத்தவோ இல்லை.

> **கப்டன் சசி**
> மாணிக்கராசா சிவகுமார்
> விளாங்குளம், திருக்கோணமலை.
> வீரமரணம் 28-07-1991

என்றான். ஆதரவைத் தேடி அவனது கண்கள் அம்மாவைப் பார்த்தன. அந்தத் தாயும் விழிகளால் அவனைத் தடவிக் கொண்டிருந்தாள்.

"என்னோட வந்த பெடியளில இரண்டு, மூன்று பேர் விழுந்து எரிந்து கொண்டிருந்தார்கள், அசைவில்லாமல் கிடந்த அவர்கள் வீரமரணமடைந்திருப்பார்கள். அதிலேயே எரிந்திருப்பார்கள். அவன் சிறிது நேரம் அமைதியாக இருந்தான். பற்களைக் கடித்தான்.

அமைதியான அந்தப் போராளியின் உறுதியும், பொறுமையும் அம்மாவிற்கு அவனில் அன்பையும், பாசத்தையும் அதிகமாகக் கொட்ட காரணமாயிற்று.

வைத்தியர்களும், தாதியர்களும் வருவார்கள். அம்மா அவர்களிடம் ஓடுவாள். சசியைப் பற்றிக் கேட்பாள், அம்மாவிற்காக, அம்மாவின் ஆறுதலுக்காக அவர்கள் ஏதாவது சொல்லிவிட்டுச் செல்வார்கள்.

அம்மாவைத் தவிர மற்ற எல்லோருக்குமே அவனின் முடிவு தெரிந்திருந்தது.

சசி பலவீனமாகிக் கொண்டிருந்தான், படிப்படியாகச் செத்துக் கொண்டிருந்தான். அவனின் அந்தக் கடைசிக் கணங்களில் கூட, வேதனையை வெளிப்படுத்தும் எந்த விதமான சத்தமுமே வெளிவர இல்லை.

*அம்மாவிற்கு விளங்காத வியப்பாகவே இருந்தது. எங்கள் கைகளிற்குள், இருளுக்குப்பயந்து ஒடித்திரிந்த இவர்கள்.*

*இன்று, உறுதியான- மலை போன்ற போராளிகளாக எப்படி மாறினார்கள்.?*

அம்மாவின் கண்ணுக்கு முன்னாலையே அவன் மௌனமாகிப் போய்விட்டான்.

தாதி ஒருவர் அவன் வீரமரணமடைந்து விட்டான் என்றார்.

அம்மாவினால் தாங்க முடியாமல் இருந்தது. சில வருடங்களுக்கு முன்பு ஒரு மாலை நேரம்.

"அம்மா உங்கள் மகன் வீரமரணமடைந்து விட்டான்" என்று அவனது தோழர்கள் வந்த பொழுது, அவளின் மனம் எப்படித் தவித்ததோ, அதேபோலவே இப்போதும்...

அம்மா போர்வை ஒன்றினால் அந்த மகனைப் போர்த்தினாள். அவள் வழமை போல அழவில்லை, அம்மா தன் புதிய மகனிடம் இருந்து உறுதியைக் கற்றுக் கொண்டாள். அமைதியாக- வைத்தியசாலையை விட்டு வெளியே வந்தாள். அந்தத் தாயின் மென்மையான பாதம் பட்டு இந்தப் பூமி அதிர்ந்தது.

---

# கப்டன் லக்சி

உடுத்துறை எனும் அந்த அமைதியான கரையோரக் கிராமத்தில் 1973ம் ஆண்டில் வீட்டிற்கு ஒரு பெண்பிள்ளையாய் அதுவும் மூத்த பிள்ளையாய் பிறந்தாள் லக்சி.

1989 ம் ஆண்டு இந்திய இராணுவம் எமது தாயகப் பூமியை ஆக்கிரமித்து நின்ற வேளை எமது இயக்கத்துள் தன்னை முழுமையாக இணைத்துக்கொண்டாள்.

வீட்டில் இருந்து இயக்கத்திற்குப் புறப்பட்ட அன்று, அவளது ஊரில் இருந்த இன்னும் சில இளம் பெண்களுடன் பயிற்சிப்பாசறை நோக்கிச் செல்ல படகில் ஏறும்போது இவளது தந்தை அந்த அடிக்கும் கடலுக்குள்ளும் படகை கரைநோக்கி இழுத்து அதில் மகளை ஏறவிடாது தடுத்து அலைக்குள் புரண்டு, விழுந்த போதும் பறித்துக்கொண்டு ஓடும் படகிற்குள் ஏறியவள் இவள்.

பயிற்சி முடிந்த பிறகு அடிக்கடி அவள் சொல்வாள்...... பயிற்சிக்கு வரமுன்னர் அப்பாவை நினைத்துப் பார்த்து வீட்டை போகவா? என்றுகூட நினைத்தேன். ஆனால், போராட வந்தனான். திரும்பிப்போகக்கூடாது என்று முடிவெடுத்து நின்றுவிட்டேன் .......என்பாள்.

பயிற்சிப்பாசறைக்கு வன்னிக்காட்டுக்கு இவளை அனுப்பியபோது ஏற்கனவே அங்கே பயிற்சி தொடங்கிவிட்டதால், அடுத்த பாசறையில்தான் இவளால் பயிற்சி எடுக்க முடிந்தது. தனது பயிற்சிப் பாசறை தொடங்கும்வரை இவள் சும்மா இருக்கவில்லை. காட்டிற்குள் நீண்ட தூரம் நடந்துசென்று முகாமிற்குத் தேவையான உணவுப் பொருட்களைக் கொண்டு வருவதிலும், கொட்டில்கள் அமைக்க மரந்தடி வெட்டுவதிலும் மிக விருப்புடன் ஈடுபட்டு வந்தாள்.

பயிற்சி முடிந்து காட்டில் இருந்து வந்தவுடன் இவள் ஒரு சிறு குழுவுடன் வடமராட்சி மண்டான் வெளியில் காவல் கடமையிலீடுபட்டாள்.

முதன் முதலாக எமது மகளிர் படையணி பிரதான பங்கு வகித்த கொக்காவில் இராணுவ முகாம் தகர்ப்பின் போது ஏழுபேர் கொண்ட ஒரு சிறு குழுவிற்குத்தலைமை தாங்கி இத்தாக்குதலில் சிறப்பாகப் பணியாற்றினாள்

கொக்காவில்சண்டைமுடிந்த பின்னர் யாழ். கோட்டை முகாம் மீது தாக்குதல் ஒன்று நடாத்தப்பட்டபோது அதிலும் ஒரு குழுத்தலைவியாக நின்று லக்சி போராடினாள். அத் தாக்குதல் எமக்கு வெற்றியைத் தரவில்லை. அதன்பின்னர், கோட்டைக் காவல் அரண்களுள் ஒன்றைப் பொறுப்பெடுத்துகாவல் கடமையில் ஈடுபட்டுவந்தாள். அங்கே காவல் கடமையில் ஈடுபடும்போது ஏதாவது ஒரு உயரமான இடத்தில் இருந்து எதிரியின் நடவடிக்கைகளை உன்னிப்பாகப் பார்த்து அவர்களின் தலை தெரியும் நேரங்களில் எல்லாம் குறிபார்த்துச் சுட்டுக்கொண்டே இருப்பாள்.

கோட்டையில் இவளது திறமையான செயற்பாடுகளையும், தலைமைத்துவத்தையும் கவனத்திற் கொண்டு கோட்டையிலிருந்து இராணுவம் பின்வாங்கியதன் பின்னர் இவள் பலாலியில் 75 பேர் கொண்ட பெரியகுழு ஒன்றின் தலைவியாக நியமிக்கப்பட்டாள்.

பலாலி இராணுவமுகாமைக் காவல்காத்த வேளைகளில் தனது பொறுப்பில் விடப்பட்ட எல்லாக் காவல் அரண்களுக்கும் மாறிமாறிச்சென்று போராளிகளை உற்சாகப்படுத்தி காவலைப்பலப்படுத்திக் கொண்டிருப்பாள். அடிக்கடி எதிரி அரண்களை இரகசியமாக நெருங்கி அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து, இராணுவத்தினரை எந்த நேரமும் பதற்றத்திற்குள் வைத்திருப்பாள்.

இவ்விதமாக லக்சியின் அணி நகர்ந்து சென்று இராணுவத்தின் மீது தாக்குதலை நடத்தும் ஒரு கட்டத்துள் ஒருநாள் இவர்களுக்குத் தெரியாமல் இராணுவத்தினர் வந்து தூரக்கட்டுப்பாட்டில் இயங்கும் கண்ணிவெடிகளைப் புதைத்துவிட்டு சென்றுவிட்டார்கள்.

அடுத்தநாள் லக்சி வழமை போலவே தன்னுடன் இரு போராளிகளையும் அழைத்துக்கொண்டு கட்டடத்திற்குக் கிட்டேபோனவள் சந்தேகம் அடைந்து கவனமாகச் சென்றபோது ஒரு மின்வயர் துண்டு அவளின் கண்ணில் பட்டது. உடனடியாகவே வயரைக் கத்தரித்து புதைக்கப்பட்ட கண்ணிவெடிகளையும் எடுத்துக் [illegible]



**கப்டன் லக்சி**
முத்துலிங்கம் சுதா
வேம்படி, உடுத்துறை,
தாழையடி.
பிறப்பு: 10-10-1973

வந்துவிட்டாள். இவளுடைய துணிகரமான செயற்பாடுகளுக்கு இது ஒரு உதாரணமாகும்.

பலாலி காவல் அரண்களில் லக்சி முக்கிய பொறுப்புக்களை வகித்ததால் மாங்குளம் முகாம் தாக்குதலுக்குச் செல்ல இவளுக்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

சிலாவத்துறை சமரின் போது தூரத்தில் நிறுத்தப்பட்டிருந்த காவல் அணி ஒன்றிற்கு தலைமைதாங்க விடப்பட்டாள்.

ஆனையிறவுச் சமரிற்குத் தன்னையும் அனுப்பும்படி விடாப்பிடியாகக் கேட்டுக் கொண்டிருந்தாள். அவளுக்குரிய சந்தர்ப்பமும் கிடைத்தது 5.8.1991 அன்று புல்லாவெளியில் இராணுவம் மீது ஒரு சிறப்புத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டது. அந்தத் தாக்குதலில் இவள் வீரமரணமடைந்துவிட்டாள்.

இவளது குழு கடைசியாகத்தான் சண்டையில் இறங்க வேண்டியது. ஆனால் இவளது குழுவிற்கு முன் இன்னொரு குழு சண்டையில் இறங்கக் காத்திருந்தபோதும் சண்டை பிடிக்கவேண்டும் என்ற ஆவலில் தனது குழுவும் சண்டைக்களத்தில் இறங்கி விட்டதாக "வோக்கி டோக்கி" மூலம் அறிவித்தாள்.

ஆனையிறவுச் சண்டைக்கான பயிற்சிகள் நடந்து கொண்டிருந்தபோது லக்சியைப்பார்க்க வந்த தாயும்- தந்தையும் இயக்கத்தை விட்டுவிட்டு வீட்டிற்கு வரும்படி மன்றாடினர்.

"நான் போராட வந்தனான். எனது உயிரற்ற உடல்தான் வீட்டிற்கு வரும். நான் வரமாட்டேன்" என்று தாய் - தந்தையைப் பார்த்துச் சொன்னவள் அதன் பிறகு பெற்றோருடன் கதைக்கவில்லை. முகாமிற்கே வந்துவிட்டாள்.

ஆனாலும் ஒருமுறை வீட்டுக்குச்சென்று வரவேண்டும் என்ற விருப்பம் அவளுக்கு இருக்கத்தான்செய்தது. ஆனையிறவுச்சமர் முடிந்து உயிருடன் திரும்பி வந்தால் ஒருமுறை வீட்டுக்குப் போய்வர வேண்டும் என்று சொன்னவளது உயிரற்ற உடலைக்கூட வீட்டாரிடம் கொடுக்க எம்மால் முடியவில்லை.

ஆனையிறவுச் சண்டையில் வீரமரணமடைந்தவர்களில் எம்மால் மீட்கப்படாதுபோனவர்களின் உடல்களுள் எங்களுடைய கப்டன் லக்சியினது உடலும் மீட்கப்படாமலேயே போய்விட்டது.

ஜெயந்தி
மகளிர்படைப்பிரிவுப்
பொறுப்பாளர்

www.eelamview.com

# ஒரு போராளியின் குருதிச்சுவடுகள்



சரா,... சரா,...

அவனது முகத்தை கடைசியாக ஒரு தரம் பார்க்க வேண்டும். எனக்கு இதயம் வெடித்து விடுவது போல இருந்தது.

எங்கள் போராளிகளின் உடல்கள் துப்பரவு செய்யும் இடம்.

"சராவின் உடல் வந்து விட்டதா?" என்னை மாதிரிப் பலர் கேட்டுக் கொண்டு நின்றார்கள். உள்ளே போனேன். வீரமரணமடைந்த எமது போராளிகள். அங்கொன்றும், இங்கொன்றுமாகக் கிடந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவரின் முகங்களாக நான் தடவினேன். எனக்குப் பழக்கமான சராவின் முகத்தைக் காணவே இல்லை. ஆனால் அந்தத் தோழர்களின் முகங்களும் எனக்குப் பல கதைகளைச் சொல்லின.

பதினைந்து வயதிருக்கும். சற்று நிறமான, சுருள் சுருளான தலைமயிருடன் ஒரு போராளி முகம் வாடிக்கிடந்தான். அவனது உயிரை அழைத்துச் சென்ற விமானக் குண்டு வயிற்றை ஆழமாகச் சிதைத்திருந்தது.

அவனைக் கடந்ததும், சின்னப் போராளி ஒருவன் தூங்கிக் கொண்டிருந்தான். கால் ஒன்று தொடையில் ஆழமாகப் பிய்ந்திருந்தது. உடலைக் குறுக்காகவும் ஒரு ரவை துளைத்திருந்தது. உயிர் பிரியும்போது இருந்த வேதனை அந்தச் சின்ன முகத்தில் படிந்து போய்க்கிடந்தது.

அடுத்ததாக ஒரு போராளி, சப்பாத்துக்கூட கழட்டாமல் கிடந்தான். சீருடை கூட ஒழுங்காக இருந்தது அவன் எப்படி மரணித்தான்? முகத்தைத் திருப்பினேன்.

முகத்தின் ஒரு பக்கம் கோறையாக இருந்தது.

இப்படிப் பல போராளிகள்......

இவர்களில் சிலரை சராவின் பயிற்சி முகாமில் பார்த்திருக்கிறேன். சில நேரங்களில், வேகமாகச் செல்லும் வாகனமொன்றிற்குள் சிரித்தபடி செல்வதைக் கண்டிருக்கிறேன் அந்த தோழர்கள் தான். இன்று இப்படி.........

இந்த மரணங்களை நன்றாகத் தெரிந்து கொண்டு தான், இவர்கள் துப்பாக்கிகளைத் தொட்டார்கள் போர் முனைகளிற்கு வெளிக்கிடும் போதும், வழியிலும், எதிரியை எதிர்த்து நின்று போராடும் பொழுதும் தமது மரணத்தைப் பற்றி இவர்கள் உணர்ந்துதான் இருந்தார்கள்.

ஆனாலும், இந்த இளவீரர்கள் உறுதியாக நின்று போராடினார்கள். இவர்களின் நெஞ்சங்களில் இருந்ததெல்லாம் விடுதலை என்ற உணர்வு ஒன்றேதான். தன்னை இழந்து சுதந்திரத்திற்காகப் போராடும் மனவுண்மையை இவர்களுக்குத் தந்தது நம்பிக்கைதான். தலைவர் மீது கொண்ட நம்பிக்கை — தங்கள் இலட்சியம் நிச்சயம் வெல்லப்படும் என்ற நம்பிக்கை, இவை தான் இந்த இளைஞர்களை மலை போன்ற மாவீரர்களாய் மாற்றி நிற்கிறது.

அந்த இடத்தின் ஒரு ஓரமாக, சிலர் ஒவ்வொரு உடலாக துப்பரவு செய்து கொண்டிருந்தார்கள். அந்த மனிதர்களின் முகங்கள் சோகமாக இருந்தன. அலங்கோலமாகக் கிடந்த போராளிகளின் உடல்களை ஒழுங்குபடுத்தி அடிமனதின் விருப்பத்தோடு உயிர் கொடுக்க அவர்கள் முயன்று கொண்டிருந்தார்கள்.

ஏற்கனவே எடுத்து வைத்த சவப்பெட்டிகளில் அளவுக்கு ஏற்ற மாதிரி அந்தப் போராளிகள் கிடத்தப்பட்டார்கள்.

சராவின் உடல் வரவே இல்லை.

ஒரு மண் வீதியால் விழுந்து கடற்கரையில் ஏறுகின்றேன். அந்தச் சிறுகடல் கோபத்தில் அலைகளை அள்ளி வீசமுடியாமல் தவித்து தளதளத்துக் கொண்டிருந்தது. இந்த வீதியால், இந்தக் கடலைப் பார்த்துக் கொண்டு தான் சரா அடிக்கடி போவது வழமை. என்னையும் இந்த வீதியால், சில தடவைகள் அவன் நடத்திய பயிற்சி முகாமிற்கு அழைத்துச் சென்றிருந்தான்.

இன்று, இந்தக் கடல், மக்கள், குன்றும் குழியுமாக இருக்கும் வீதி எல்லோருமே அவனை, இறுதியாக ஒரு தரம் பார்க்க ஏங்கிக் கொண்டிருந்தார்கள்.

வானம் இருண்டு திட்டுத் திட்டாகக் காணப்பட்டது. கருமேகங்கள் எங்கேயோ வேகமாய்ப் போய்க்கொண்டிருந்தன. அதில் சராவை மாதிரியே ஒரு மேகம். அவனது கறுப்பு. அவனுடன் இருக்கும் சாதுவான தாடி. பழகும் போது வீசும் குளிர்மை......

அந்த மேகம் எனக்குக் கதை சொல்லத் தொடங்கியது.

O O O

நாங்கள் வெப்பமான மலைகளிற்குக் கீழ் வாழ்ந்த இனிமையான காலம். எமது பயிற்சி முகாமிற்கு சரா ஜேர்மனியிலிருந்து வந்திருந்தான் அந்த பயிற்சி முகாமின் வெப்பமான சூழ்நிலை — கடுமையான பயிற்சி எல்லாமாகச் சேர்ந்து அவனது வெளிநாட்டுத் தோற்றத்தை இலகுவாக மாற்றி ஒரு கிராமப்புறத் தோற்றத்தைத் தந்து விட்டது.

பொதுவாக பயிற்சி முகாம்களில் சிலர் மட்டும் தான் எல்லோராலும் அறியப்பட்டவர்களாக இருப்பார்கள். அவர்களிடம் ஏதோ ஒரு திறமை. அது நடிப்பாகவோ, விளையாட்டாகவோ இருக்கும். அப்படி எல்லோராலும் அறியப்பட்டவர்களில் சராவும் ஒருவன்.

குளப்படி தான் அவனது திறமை.


எங்கள் பயிற்சி முகாமின் பொறுப்பாளர் பொன்னம்மானின் கண்கள் எப்போதும் சராவைத்தான் சுற்றும். குளப்படிகளைச் செய்து விட்டு அவன் தப்பி விடுவான் என்பது அவருக்கு நன்றாகவே தெரியும்.

அந்தப் பயிற்சி முகாமின் இனிமையான கலகலப்புக்கு காரணங்களில் சராவும் ஒருவன் பயிற்சி முடிந்த பின் நாங்கள் சிலர் முதன் முதலில் முகாமிலிருந்து பிரிந்து சென்றோம். அந்தச் சின்னப் பிரிவைத் தாங்க முடியாமல் எல்லோருமே இயலுமட்டும் அழுது தீர்த்தோம். அப்போது நான் சராவைப் பார்த்தேன். கலங்கிய கண்களுடன் அவன் எனக்கு விடை தந்தான். அதன் பின்பு மன்னார் பொலிஸ் நிலையத் தாக்குதலின் பின்தான் சராவைப் பார்த்தேன். ஜி 3. துப்பாக்கி ஒன்றை வைத்திருந்தான் அவனது உயர்ந்த கம்பீரமான தோற்றத்திற்கு. அது பொருத்தமாக இருந்தது.

மன்னார் பொலிஸ் நிலையத் தாக்குதலில் தான் செய்தவற்றைச் சொன்னான். யாழ். பொலிஸ் நிலையத் தாக்குதலிலும் பங்கு பற்றியதாகக் கூறினான்.

காலங்கள் சென்றன. சரா கல்வியங்காடு, திருநெல்வேலிப் பகுதிகளுக்கான பொறுப்பாளனாக நியமிக்கப்பட்டான். அப்பகுதியில் சராவை சராவின் செயற்பாடுகளை எல்லா மக்களுமே விரும்பினார்கள்.

அந்த நேரத்தில்தான், இந்தியப்படைகள் — தென்றலெனச் சொல்லிக் கொண்டு எங்கள் தேசத்தில் புயலாகப் புகுந்தார்கள். இந்த மண்ணின் மீது தங்கள் கோரக் கரங்களை அகல விரித்தனர்.



லெப். கேணல்

**சரா**

(சின்னத்துரை சிவராசா)

கல்வியங்காடு.

பிறப்பு: 19-04-1962

வீரமரணம்: 27-07-1991

இந்திய வல்லாதிக்கத்திற்கெதிராக புலிகள் தொடுத்த போரில் சரா முன்னணியில் நின்று திறமையாகச் சண்டையிட்டான். ஒரு முறை இந்தியப் படையினரின் சுற்றிவளைப்பிலிருந்து தப்பிச் செல்லும் போது சராவின் கையில் ஆழமாக காயமேற்படுகிறது. அவன் சிகிச்சைக்காக தமிழகத்திற்குச் சென்றான். அங்கு வைத்து இந்திய அரசால் கைது செய்யப்பட்டான்.

இந்தியர்களின் சிறைகளில் இரு வருடங்களைக் கழித்த — பின் தமிழீழம் அவனை வரவேற்றது. சராவினது போராட்ட வாழ்க்கை [illegible]

சிறீலங்கா அரசுடனான போர் மீண்டும் தொடங்கிய பின் யாழ் கோட்டை இராணுவ முகாம் மீதான முற்றுகைப் போரில் சராவும் ஒருவனாகக் கலந்து கொண்டான். கோட்டை வெற்றிகொள்ளப்பட்டதன் பின்பு புலிகளின், பயிற்சி முகாம்களிற்கான பொறுப்பாளராக செயற்பட்டான்.

ஆனையிறவு இராணுவத்தளம் மீதான முற்றுகைப் போர் ஆரம்பித்தவுடன் அப்போர் முனையில் ஒரு தளபதியாக சராவும் நின்றான். பழைய தடைமுகாம் இராணுவத்தினர் மீது ஒரு தாக்குதலைத் தொடுத்தோம். அந்தத் தாக்குதல் வெற்றியடையவில்லை எல்லாமாக 63 போராளிகளை நாங்கள் இழந்திருந்தோம், சராவிற்கு காலில் காயம். வைத்தியசாலை வாசலில் நின்றான். நான் அவனைப் பார்ப்பதற்காகப் போயிருந்தேன். சின்னக் காயம் தான் பழையபடி போர் முனைக்கு போகப் போவதாகச் சொன்னான்.

"இழப்புகள் தான் அதிகம் போராட்டம் வளரும் பொழுது. போர் முனைகளும் பெரிதாக மாறும் — இழப்புகளும் அதிகமாகத்தான் இருக்கும். இதைத் தவிர்க்க முடியாது" என்றான் அந்த நேரத்தில் அவசரமாக வந்த வாகனம் ஒன்றில் ஏறி அவன் போர்க்களத்திற்குச் சென்று விட்டான்.

O O O

ஆனையிறவு முற்றுகையை முறியடிப்பதற்காக கடற்கரையில் இறக்கப்பட்ட இராணுவத்தினர் நெருப்பு மழையைப் பொழிந்து கொண்டே முன்னேறத் தொடங்கினார்கள். இரவும் பகலும் வானத்தில் நீந்திய விமானங்கள் அங்குலம், அங்குலமாக குண்டுகளை விதைத்தன. கடலிலிருந்து நிலத்தை நோக்கி அலை அலையாக குண்டுகள் வந்து கொண்டிருந்தன. சிறீலங்கா அரச இயந்திரங்கள் தங்கள் முழுப் பலத்தையும் திரட்டி வெளிக்காட்டியவாறு முன்னேறி வந்தார்கள்.

இந்த நிலையில், இரண்டாவது தடவையாக தடை முகாம் இராணுவ முகாம் மீதான தாக்குதல் ஒன்றுக்கு புலிகள் திட்டமிட்டனர். கவச வாகனங்களின் உதவியுடன் எம்மவர்கள் முன்னேறுவதாக இருந்தது.

தாக்குதல் ஆரம்பமாகும் நேரம் எமது கவச வாகனம் நின்று புறப்படும் இடத்தில் நானும் நின்றேன். சரா வந்தான், என்னுடைய கன்னங்களைத் தடவினான் "மச்சான், என்னுடைய நல்ல படம் வைத்திருக்கிறாயாடா" என்று கேட்டான்.

"ஏன்" நான் விளங்காமல் கேட்டேன்.

"நான்தான் போசர் கொண்டு போறன்" என்றான். பயிற்சி முகாமிலிருந்து நாங்கள் பிரியும் போது கலங்கிய கண்கள் இன்று மீண்டும் கலங்கியது.

ஆனால் இந்தப் பிரிவு...... நான் விழிகளைத் துடைக்க வேறு பக்கம் திரும்பினேன். சரா இன்னொரு தோழனிடம் சொல்லிக் கொண்டிருந்தான்.

"எனது உடல் சிதையாமல் வந்தா, இந்தச் சீருடையைப் போடுங்கோ, இந்தப் புலிக் கொடியைப் போர்த்துங்கோ."

இந்தச் சண்டையில் தப்பி வரும் சந்தர்ப்பங்கள் மிகக் குறைவு என்பது சராவிற்கு நன்றாகவே தெரியும். தங்கள் மரணத்தைத் தெரிந்து கொண்டு போர் முனைகளுக்குச் செல்லும் உயர்ந்த மனிதர்களை இந்த மண் பிரசவித்திருக்கிறது.

தாக்குதல் தொடங்கியது, துப்பாக்கி ரவைகளால் அரண்களை அமைத்த படியே புலிகள் முன்னேறினார்கள். சராவின் வாகனமும் முன்னேறியது. ஒரு பீரங்கிக் குண்டு அந்த வாகனத்தில் பட்டு— வெடித்தது.

சரா, அவனுடன் சேர்ந்து சென்ற குகதாஸ்...., தாக்குதல் தொடர்ந்தது. காலை வேளை வெற்றி இல்லாமல் எம்மவர்கள் பின்வாங்கினார்கள்.

சராவின் உடலை மீட்பதற்கு முடியாமலே போய் விட்டது. இரண்டு நாளின் பின் போர் முனையிலிருந்து வந்த ஒரு தோழன். "எங்கள் நிலைகளிற்கு முன்னால், இராணுவ முகாம் வேலிக்குப் பக்கத்தில் சரா அண்ணை கொண்டு சென்ற வாகனம் நிற்குது, காகங்கள் உள்ளே இறங்கி ஏறுது" எனச் சொன்னான்.

சராவை, காகங்கள்......,

என்னால் வேதனையைத் தாங்க முடியாமலிருக்கிறது, என் முன்னாலிருக்கும் சாளரத்தின் வழியே பார்க்கிறேன். கோட்டை தெரிகிறது. சிதைந்து அழிந்து கொண்டிருக்கும்- அந்த அக்கிரமிப்புச் சின்னத்தின் முன்னே. இடப்படித்தான். அகழியையும் உயர்ந்த கோட்டைச் சுவரையும் தாண்டுவதற்காக எம்மவர்கள் பயன்படுத்திய கருவிகள் அப்படி அப்படியே கிடக்கிறது.

மதிலில் ஏறுவதற்காகச் சாத்திய ஏணி மதிலுடன் விழுந்து கிடக்கிறது சேற்று அகழியைத் தாண்டுவதற்காக அடுக்கிய பலகைகள் அப்படியே தாழாமல் இருக்கின்றன. இவை எல்லாம் வீரம் நிறைந்த கடுமையான அந்த நாட்களை நினைவு படுத்துகின்றன.

கோட்டை இராணுவ முகாம் மீதான இரண்டாவது தாக்குதல் முயற்சி, அன்றும் சரா ஒரு கவசவாகனத்தை ஓட்டிச் சென்றான். முன்னேறிச் சென்ற அந்த வாகனம் பள்ளம் ஒன்றிற்குள் விழுந்து சரிந்தது. அன்றைய தாக்குதலும் வெற்றியடையவில்லை.

விடிந்தது. எங்கள் கண்களிற்கு முன்னால் வெட்டை வெளியில் எங்கள் தோழர்களின் உடல்கள் கிடந்தன. அவர்களின் மீது காகங்கள் இருக்க முயல்வதும் பறப்பதுமாக.........

அந்த வேதனையான நினைவுகளை எண்ணியபடியே திரும்புகிறேன். சிதைந்து போன கோட்டையின் எஞ்சிய மதிற் சுவரால் எங்கள் போராளிகளில் சிலர் நடந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களின் கைகளில் இருக்கும் துப்பாக்கிகள் புது நம்பிக்கைகளை விதைத்துக் கொண்டிருந்தன.

சற்றுத் தள்ளி, காற்றில் தன் கைகளை வீசி புலிக் கொடி பறக்கிறது.

வவுனியா -தினேஸ்-

www.eelamview.com

# வெற்றிலைக்கேணி - புல்லாவெளி நேரடிச் சண்டை.

## கடல் வழியாக தரையிறக்கம்

14ம் திகதி மாலை வெற்றிலைக்கேணி கடற்கரையில் இராணுவத்தை இறக்கி,எதிரி ஒரு புதிய போர்முனையைத் திறந்துவைத்தான். ஆனையிறவு தளம்மீதான தாக்குதல் தொடங்கப்பட்ட மறுநாளிலிருந்தே வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் எதிரிப்படைக் கப்பல்கள் நங்கூரமிடத் தொடங்கிவிட்டன.

14ம் திகதி மாலை 5-00 மணியளவில் வெற்றிலைக்கேணி சந்தியை அண்மித்திருந்த கடற்கரையை நோக்கி சுமார் பத்து விசைப்படகுகளில் இராணுவத்தினர் கரையிறங்கமுயன்றனர். இந்தப் படகுகள் கடலில் வைத்தே தாக்கப்பட்டன. இதில் இரண்டு படகுகள் பாரிய சேதமடைந்ததுடன் மற்றைய படகுகளும்துப்பாக்கித் தாக்குதலுக்கு உள்ளாயின. இந்த நிலையில் சேதமடைந்த படகுகள் இரண்டையும் மீட்டபடி வந்த படகுகள் எல்லாம் கப்பலுக்கே திரும்பிச் சென்றுவிட்டன.

சிறிதுநேரத்தின் பின்பு மீண்டும் ஒரு தரையிறக்க முயற்சி நடந்தது. முதல் தரையிறக்கப்பட முயன்ற இடத்திலிருந்து கட்டைக்காட்டுப் பக்கத்தை நோக்கி சுமார் ஒரு கி.மீ தொலைவை குறியாகக்கொண்டு 15 விசைப்படகுகளில் வந்து இராணுவத்தினர் தரையிறங்கினர்.

தரையிறங்கிய இராணுவமும், கடற்கரைக்காவலில் ஈடுபட்ட புலிவீரர்களும் கைக்கெட்டும் தூரத்தில் நின்று சமர் புரிந்தனர். இந்த முதல் நாள் சண்டையிலேயே வெற்றிலைக்கேணி- கட்டைக்காட்டுப் போர்முனைக்குப் பொறுப்பாக இருந்த லெப். கேணல் குட்டி வீரமரணமடைந்தார்.

கடற்கரையில் சண்டை நடைபெற்ற அதேசமயம் தொடர்ந்தும் படகுகள் மூலம் படையினர் இறக்கப்பட்டனர். இத்தனை எதிர்ப்பையும் தரையிறக்கப்பட்ட இடத்தில் நின்ற - எண்ணிக்கையில் மிகக்குறைந்த போராளிகள் சந்திக்கவேண்டியிருந்தது.

இந்த நிலையில் தரையிறக்கப்பட்ட இடத்திற்கு இருமருங்கிலும் நின்ற எமது அணிகள் தரையிறக்கப்பட்ட இடத்தை நோக்கி வந்து இராணுவத்தை எதிர்த்துப் போரிட்டனர். சண்டை தீவிரமாக நடந்தது. இராணுவம் தனது பலத்தை ஒரு முனைக்குள் குவித்து பலத்த தாக்குதலைத் தொடுத்ததால், வீரமரணமடைந்த எமதுதோழர்கள் பலரது உடல்களை எம்மால் எடுக்கமுடியாது போய்விட்டது. அன்று இரவிரவாகவே கவசவாகனங்களும் தரையிறக்கப்பட்டு இராணுவத்தின் நிலைகள் பலப்படுத்தப்பட்டன.

அன்றிரவே அப்பகுதிக்குள் நுழைந்த எமது அணியொன்று தரையிறக்கப்பட்ட படைகளின் தற்காலிக தலைமையகம் மீது ஒரு தாக்குதலை நடாத்தியது. அந்தத் தாக்குதலில் தரையிறங்கிய படைகளின் தளபதியாக இருந்த அதிகாரி ஒருவர் உட்பட பல இராணுவத்தினர் கொல்லப்பட்டிருந்தனர். பின்னர் சிறீலங்கா அரசும் கொல்லப்பட்ட அந்த இராணுவ அதிகாரி லெப். கேணல் அஞ்சலோ பீரிஸ் என அறிவித்தது.

இந்தத் தாக்குதலை நடாத்திய புலிகள் அணிக்கு மேஜர் யாசின் தலைமைதாங்கிச் சென்றார். பாலாவியில் நடந்த சண்டை ஒன்றில் இவர் தனது ஒரு கையை இழந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரைப்பற்றி யாழ் மாவட்டத் தளபதி தினேஸ் கூறினார்.

ஆனையிறவுச் சண்டை தொடங்கப்போகிறது என்றவுடன் யாசின் என்னிடம் வந்து தானும் சமர்க்களத்துக்குச் செல்லப் போவதாக வற்புறுத்திக் கொண்டிருந்தார். அவரது நச்சரிப்பைத் தாங்கமுடியாது நான் சொன்னேன் "உனக்கு ஒரு கை இல்லை. இந்தநிலையில் நீ சண்டைக்குப் போய் என்ன செய்யப் போகிறாய். உன்னாலை முடியுமென்றால் அந்த இளனியை இலக்கு வைத்து அடித்து வீழ்த்து. அதன் பிறகு களத்துக்குப் போறதைப்பற்றி முடிவெடுப்பம்" என்றேன்.

நான் சொன்னதுதான் தாமதம் அருகில் நின்ற போராளியிடமிருந்து ஜி3 ரக துப்பாக்கியை வாங்கி நான் குறிப்பிட்ட அந்த இளனியை இலக்குவைத்து அடித்து வீழ்த்தினார். என்னால் பதில்கூற முடியவில்லை. சண்டைக்குச் செல்லும் அனுமதியை வழங்கினேன்" எனத் தளபதி தினேஸ் அவரைப்பற்றி நினைவு கூர்ந்தார்.

மேஜர் யாசின் அடுத்தநாள் நடந்த சண்டையொன்றில் வீரமரணமடைந்து விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தளத்தை நோக்கிய நகர்வும் எதிர்த்தாக்குதலும்

தரையிறக்கப்பட்டு இரண்டாம்நாள் அதாவது 15ம்திகதி பி.ப 2-30 மணியளவில் இராணுவம் ஆனையிறவுத் தளத்தை நோக்கி தனது நகர்வைத் தொடக்கியது. அன்று இருள்சூழும் வேளை வரை நடந்த சண்டையில் சுமார் 200 யார் தூரத்தை இராணுவம் நடந்து கடந்தது. அப்போது நாம் நின்ற இடத்துக்குப் பின்னால் ஒருபெரிய வெளியும் அதன் பின்னால் மரங்கள் பற்றைகள்கொண்ட இடமும் இருந்தது. எனவே அந்த வெளிக்குள் எதிரியைச் சந்திப்பதைத் தவிர்த்துவிட்டு வெளிக்கு அப்பால் இருந்த இடத்தில் எமது அரண்களை அமைக்கத்தொடங்கினோம்.

அன்றிரவே கடற்கரையின் பல்வேறு இடங்களிலும்நின்ற எமது அணிகளை ஒருங்கே திரட்டி முன்னேறிவரும் இராணுவ அணிகளைத் தடுக்க எம்மைத் தயார்படுத்திக்கொண்டிருந்தோம்.

16ம் திகதி காலை 6-30 மணியளவில் பத்திற்கும் மேற்பட்ட கவசவாகனங்களுடன் இராணுவம் நகரமுனைந்தது. அப்போது நாம் தொடுத்த எதிர்த்தாக்குதலில்ஒரு 'பவள்' கவசவாகனம் முற்றாக எரிந்து நாசமானது. இதைத் தொடர்ந்து இராணுவம் தனது முயற்சியைக் கைவிட்டு நகராதுநின்றது. மீண்டும் பி.ப 2-30 மணியளவில் முன்நோக்கி நகரத்தொடங்கியது. அன்று மாலை வரை நடந்த சண்டையில் மேலும் மூன்று கவசவாகனங்கள் நாசமாக்கப்பட்டன. அன்றைய முழுநாள் சண்டையில் மட்டும் இரண்டு பவள், இரண்டு சலாடின் ஆகிய நான்கு கவசவாகனங்களை நாசப்படுத்தினோம்.

17ம், 18ம் திகதிகளிலும் சண்டை தீவிரமாக நடந்தது. ஒவ்வொருநாளும் சிலநூறு யார் தூரம்வரைதான் இராணுவத்தால் முன்னேறிவர முடிந்தது.


19ம் திகதி நடந்த சண்டையில் தளபதி தினேஸ் காயமடைகின்றார். அதன் பின்னர் தளபதி பால்ராஜ் வெற்றிலைக்கேணி - புல்லாவெளிச் சண்டைக்குத் தலைமை தாங்குகிறார். முன்னர் லெப். கேணல் குட்டியின் தலைமையில் இப்பகுதியில் போரிட்டுக்கொண்டிருந்த எமது படை அணிக்கு தளபதி சுரேஸ் தலைமை தாங்கினார். இவர் முன்னர் யாழ். கோட்டை முகாம் முற்றுகைக்குப்பொறுப்பாக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அதேசமயம் இப்போர் முனையில் பணியாற்றிக்கொண்டிருந்த மகளிர் படை அணியின் தலைமையை மகளிர்படைப்பிரிவின் துணைத்தளபதி ராதா பொறுப்பேற்கின்றார்.

மீண்டும் 20ம் திகதி பி.ப 3-00 மணிக்கு சண்டை தொடங்குகின்றது. இப்போது புல்லாவெளி சந்தியை இலக்காகக்கொண்டே இராணுவத்தினது நகர்வு முயற்சி இருந்தது. சண்டையின் தீவிரம் அதிகரிக்க அதிகரிக்க கவசவாகனங்களின் பாவனையையும் எதிரி அதிகரித்தான். சுமார் 100 கவசவாகனங்கள் சண்டையின் இந்தக்கட்டத்தில் பயன்படுத்தப்படத் தொடங்கிவிட்டது. அத்துடன் மிக உயரத்தில் இருந்த நிலையிலும் விமானங்கள் குண்டுகளைப் போட்டுக் கொண்டிருந்தன இராணுவம் புல்லாவெளியை வந்தடைந்ததும் சண்டை அதன் உச்சக்கட்டத்திற்கே சென்றது. இதனால் ஆனையிறவு தளத்தைச் சூழநின்ற எமது அணிகள்பல புல்லாவெளி சண்டைக் களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுக் கொண்டிருந்தன.

இதேசமயம் வெற்றிலைக்கேணியிலிருந்து, புல்லாவெளி வரை சுமார் 4 கி.மீ தூரத்துக்கு நீண்டு சங்கிலித்தொடராகக்கிடந்த இராணுவ அணியை ஊடறுத்து ஒரு தாக்குதலைநடாத்தத் திட்டமிட்டோம். அந்தத் தாக்குதல்மூலம் இராணுவ சங்கிலியை உடைத்து இராணுவத்துக்கு பெருமளவு உயிர்ச்சேதத்தை உண்டுபண்ணுவதுடன் நகர்வையும் குழப்பத்துக்குள்ளாக்க முயன்றோம்.

## தகர்த்தெறிந்து நுழைதல் முறையிலான தாக்குதல்

அதன்படி 21ம் திகதி மாலை 5-00 மணியளவில் முள்ளியானில் இருந்த இராணுவச் சங்கிலி மீது "தகர்த்தெறிந்து நுழைதல்" முறையிலான ஒரு அதிரடித்தாக்குதலை நடாத்தினோம் இந்தத் தாக்குதலை எமது தளபதிகளில் ஒருவரான திரு. சொர்ணம் தலைமைதாங்கி நடாத்தினார். இந்தத்தாக்குதல் வெற்றிகரமாக நடந்ததுடன் பெருமளவு ஆயுதங்களையும், வெடிப்பொருட்களையும் கைப்பற்றியிருந்தோம். இந்தத் தாக்குதலில் 90 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அவர்களில் 31 இராணுவத்தினது சடலங்களை நாம் எடுத்ததுடன் ஒரு இராணுவ வீரனும்



தரையிறக்கப்பட்ட படையினர் தளத்தை சென்றடையும்வரை நிகழ்ந்த வெற்றிலைக்கேணி - புல்லாவெளி நேரடிச் சண்டையை விளக்கும் வரைபடம்

www.eelamview.com

கைது செய்யப்பட்டிருந்தான். வெற்றிலைக்கேணி- புல்லாவெளி போர்முனையில் ஒரே சமயத்தில் எதிரி சந்தித்த மிகப்பெரிய இழப்பு இது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த அதிரடியைத் தொடர்ந்து இராணுவத்தினது நகர்வு மந்தகதிக்கு சென்றுவிட்டது. இராணுவம் தனது போர்வீரர்களின் எண்ணிக்கையை பல்மடங்காக அதிகரித்தது. சேதமடைந்த அணிகளைப் போர்முனையிலிருந்து அப்புறப்படுத்தி அதற்குப் பதிலாக புதிய அணிகளை சண்டைக்களத்துக்குக் கொண்டுவந்தது. புலிகளிடமிருந்து வரும் எதிர்ப்புகளை தணிக்க அளவுக்கதிகமான வெடிமருந்துகளைப் பயன்படுத்தத் தொடங்கியது.

22ம் திகதியிலிருந்து 27ம் திகதிவரை இராணுவத்தால் ஒரு பெரிய நகர்வை நடாத்த முடியாமலிருந்தது. 27ம்திகதி மீண்டுமொரு கவசவாகனத்தை அது இழந்திருந்தது. பின்னர் தனது படைபலத்தை சீராக்கிவிட்டு மீண்டும் 28ம் திகதி ஒரு படைநகர்வைச் செய்தது. அன்று காலை 9-00 மணிக்கு கவசவாகனங்கள் சகிதம் ஆனையிறவை நோக்கி நகரத்தொடங்கியது இந்தச் சண்டை பி.ப 5-30 வரை நீடித்தது. ஆனால் இராணுவத்தால் 500 யார் தூரம் வரைதான் முன்னேற முடிந்தது இப்போது புல்லாவெளிச் சந்திக்கு அருகில் அதாவது வாடியடியிலிருந்து சுமார் 600 யார் தூரத்தில் இராணுவம் நிலைகொண்டிருந்தது.

கடல் வழியாக துருப்புக்கள் இறக்கப்படுவதும், காயமடைந்த சிப்பாய்கள் மற்றும், சிதைந்த இராணுவ அணிகள் ஏற்றப்படுவதுமாக வெற்றிலைக்கேணி கடல் 24 மணிநேரமும் இராணுவப் படகுகளினால் நிறைந்து காணப்பட்டது.

29ம் திகதி பி. ப 1-00 மணிக்கு மீண்டும் சண்டை ஆரம்பமானது. அன்றைய தினம் எமது நிலைகளுக்குள்ளே கவசவாகனங்கள் புகுந்து தாக்கின. இந்தநிலையில்கைகலப்பைப் போன்று சண்டை நடந்தது இந்தச் சண்டையில் இரண்டு 'பவள்' கவசவாகனங்களை நாசமாக்கினோம். அதே சமயம் எமது அணிகளும் சில நூறு மீற்றர்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டன.

இருந்தும் புலிகளுக்கே உரித்தான உறுதியுடன் எமது அணிகள் சண்டையைத் தொடர்ந்தன. இச் சந்தர்ப்பத்தில் இப் பகுதியில் போரிட்டுக்கொண்டிருந்த எமது படையணி ஒன்றிற்குத் தலைமை தாங்கிப் போரிட தளபதி ஜெயம் நியமிக்கப்பட்டார்.

இப்பகுதியில் சண்டையிட்டுக் கொண்டிருந்த பெண் போராளிகளுக்கு தலைமை வகித்த மகளிர்படையணியின் துணைத்தளபதி ராதா கூறினார்..

சண்டை முடியும் நாள்வரை இந்தச் சிக்கலை நாம் எதிர்கொண்டபடியே இருந்தோம்.....என தளபதி ராதா கூறினார்.

30ம் திகதியன்று சண்டை மாலைவரை தீவிரமாக நடந்தது. வாடியடிச் சந்தியை நோக்கி முன்னேற முயன்ற இராணுவ அணிகள் தடுத்து நிறுத்தப்பட்டன. ஆனால் கடனீரேரிப் பக்கமாக முன்னே செல்ல முயன்ற அணிகள் சிலநூறு யார் தூரம் முன்னேறிச் சென்றுவிட்டன.

## முறியடிக்கப்பட்ட வாடியடிச் சந்தி நோக்கிய நகர்வு

30ம்திகதி இராணுவம் இருமுனைகளுக் கூடான நகர்வொன்றை செய்யமுயன்றது. வாடியடி சந்திப்பக்கமாக ஒரு முயற்சியும் ஆனையிறவு கடனீரேரிப்பக்கமாக மற்ற முயற்சியையும் செய்தது.

வாடியடி சந்தியை அடைந்துவிட்டால் அங்கிருந்து இயக்கச்சியூடாக இராணுவம் ஆனையிறவு செல்வது சுலபமாகிவிடும். எனவே வாடியடிச் சந்தியைப் பாதுகாப்பதற்கு எமது அணிகள் போராடின. சண்டை தீவிரமடைய எமது அணிகளுக்கு உதவியாக பல புலிவீரர்கள் வெட்ட வெளியையும் பொருட்படுத்தாது வாடியடிச் சந்திக்கு அனுப்பப்பட்டுக் கொண்டிருந்தார்கள். சிலர் போகும் வழியிலேயே விமானக்குண்டு வீச்சுக்கோ, அல்லது எறிகணைத் தாக்குதலுக்கோ ஆளானார்கள்.

''காயமடைந்த, வீரமரணமடைந்த போராளிகளது இடத்தை நிரப்பி தொடர்ந்தும் போரிடுவதற்காக 30 அல்லது 50 போராளிகளைக் கொண்ட அணிகளை அவ்வப்போது சண்டை முனைக்கு அழைத்தோம்- ஆனால் குறித்த இவ் அணிகள் சண்டை முனைக்கு வரும் வழியிலேயே எறிகணைத் தாக்குதலால் அல்லது விமானக்குண்டுகளினால் 5 அல்லது 6 பேரை இழக்கின்றது. காயமடைந்த இவர்களை பாதுகாப்பான இடத்திற்கு சேர்ப்பித்து மருத்துவ வசதி செய்வதற்காக மேலும் 5 அல்லது 10 போராளிகள் தேவைப்படுகின்றனர். இந்த நிலையில் 30 போராளிகள் அனுப்பப்பட்ட குறித்த சண்டை முனைக்கு 15அல்லது 20 போராளிகள்தான் சென்றடைகின்றார்கள்.

இது தொடர்ந்தும் அம் முனையில் ஆள்பற்றாக்குறையையே ஏற்படுத்துகின்றது.

31ம் திகதி பெரிய அளவில் சண்டை நடைபெறவில்லை. பின்னர் மீண்டும், 1ம், 2ம் திகதிகளில் சண்டை தீவிரமடைந்தது. இராணுவம் தனது கவசவாகன பலத்தை நீரிணைப்பகுதியெங்கும் பயன்படுத்தியது நீரிணை அருகால் நகர்ந்த துருப்புக்கள் எமது போராளிகளின்எதிர்ப்புக்களைச் சந்தித்தபடி ஆனையிறவு தளத்தின் ஒரு பகுதியாகிய தடைமுகாமை காவல் காத்துநிற்கும் எமது காவல் அரண்களுக்கு அருகில் வந்துவிட்டன. இப்போது இருமுனைகளிலிருந்தும் எமது அரண்கள். எறிகணைகளால் தாக்கப்பட்டன. முன்னேறி வந்த இராணுவம் ஒருபுறமும், ஆனையிறவுத்தளத்திலிருந்த இராணுவம் மறுபுறமுமாக தாக்குதலைத் தொடுத்தது.

## படையினரின் தள நுழைவு

3ம் திகதி எமது காவல் அரண்களிலே கடும் சண்டை தொடங்கியது. அன்று காலை தொடங்கிய சண்டை மாலை வரை நீடித்தது.

இராணுவம் சில மணி நேரத்துள் தளத்துக்குள் சென்றுவிடும் என்று தெரிந்திருந்தும் இறுதிவரை எமது போராளிகள் சளைக்காது போரிட்டனர். இது எதிரியைப்பிரமிப்படையச் செய்திருக்கும்.

3ம் திகதி மாலை தடைமுகாமின் பின்பகுதியூடாக ஒருபகுதி இராணுவம் ஆனையிறவுத் தளத்தினுள் புகுந்து கொண்டது. இராணுவம் உள்நுழைந்த நீரிணைவழியாக வாகனங்கள் உட்செல்ல முடியாது.

எனவே அடுத்தநாள் 4ம் திகதி பி.ப 1-00மணியளவில் மீண்டும் சண்டை தொடங்கியது. இந்தச் சண்டை தடைமுகாமிலிருந்து ஆனையிறவு- இயக்கச்சி பிரதான பாதையில் சுமார் 1. கி. மீ தூரத்தை கைப்பற்றுவதையே நோக்கமாகக் கொண்டிருந்தது. அப்போது தான் அவர்களது வாகனங்களை ஆனையிறவு தளத்துக்குள் கொண்டுசெல்ல முடியும். அதன்படி அன்று மாலையே அந்தப்பாதையை கைப்பற்றிய இராணுவம் அங்கிருந்து ஆனையிறவுத் தளத்துடன் ஒரு இணைப்பை ஏற்படுத்திக் கொண்டுவிட்டது.

இதேவேளை அன்றுவிடியற் காலை (5ம் திகதி அதிகாலை) புல்லாவெளியில் வைத்து இராணுவ தொடர்சங்கிலி மீது மீண்டும் ஒரு அதிரடித் தாக்குதலை நடாத்தினோம் இதில் 43 புலி வீரர்கள் வீரமரணமடைந்தார்கள். இத்தாக்குதல் நாம் எதிர்பார்த்த வெற்றியைத் தேடித்தரவில்லை. இத்துடன் வெற்றிலைக்கேணி- புல்லாவெளி நேரடிச் சண்டை தணிந்து விடுகின்றது.

இதன்பின்னர் தளத்தின் தென் பகுதியில் சண்டை தொடங்குகின்றது. நாம் முன்னரே கைப்பற்றிவைத்திருந்த உல்லாசவிடுதி முகாமை மீண்டும் கைப்பற்றும் நோக்குடன் சண்டை தீவிரமடைந்தது. 7ம் 8ம் திகதிகளில் உல்லாச விடுதி மீது ஒரு தீவிர தாக்குதலை இராணுவம் தொடுத்தது. பல இராணுவத்தினரை இழந்து 8ம் திகதி மாலை உல்லாச விடுதிமுகாமை மீளவும் இராணுவம் மேலும் ஒரு கிலோமீற்றர் தூரம் முன்னேறி கைப்பற்றிக் கொண்டது.

9ம் திகதியுடன் ஆனையிறவுச்சமர்முடிவுக்குவருகின்றது. அங்கேயே தனது நிலைகளை அமைத்து இச்செய்தி எழுதப்படும்வரை நிலைகொண்டிருக்கின்றது.

அதேசமயம் வெற்றிலைக் கேணிக் கடற்கரையிலிருந்து ஆனையிறவுத் தளம்வரை தொடர் சங்கிலிபோன்று நிலைகொண்டிருந்த இராணுவம் அத்தொடர் சங்கிலியை முழுமையாகவே எடுத்துவிட்டு வெற்றிலைக் கேணியில் ஒருபெரிய முகாமை அமைத்து வைத்திருக்கின்றது.



ஆ. க. வெ. இராணுவ நடவடிக்கையின்போது, பயன்படுத்தப்பட்ட விமான எதிர்ப்புத் துப்பாக்கி உருமறைப்புச் செய்யப்பட்ட நிலையில்

---

# ஆ. க. வெ. இராணுவ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இச்சண்டையில் 567 புலிகள் வீரமரணமடைந்துள்ளனர்.

10-07-1991 அதிகாலை தொடக்கம் 09-08-91 மாலை வரை ஆனையிறவுப்பகுதிகளில் நடந்த கடும் சமர் வரலாற்று முக்கியத்துவம் பெற்றுவிட்டது.

பாரிய முன்னேற்பாடுகளுடனும், அதிநவீன இராணுவ சாதனங்கள் சகிதமும் இருபகுதிப் படைகளும் மோதிக் கொண்டன. 2000ற்கும் மேற்பட்ட புலிவீரர்கள் உட்பட ஏறக்குறைய 10,000 போர் வீரர்கள் இச்சமரில் பங்கேற்றுள்ளனர்.

31 நாட்கள் நடந்த இச் சமரில் இருபகுதிப் படையிலுமாக ஏறக்குறைய 1000 பேர் உயிரிழந்துள்ளனர், 2500 ற்கும் மேற்பட்டோர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

இந்த ஆ. க. வெ. இராணுவ நடவடிக்கை இரண்டு வெவ்வேறு இராணுவ பரிமாணங்களில் நடைபெற்றுள்ளது.

I ஆனையிறவுத்தளம் மீதான முற்றுகைச் சண்டை.

II வெற்றிலைக்கேணி - புல்லாவெளி நேரடிச் சண்டை.

ஆனையிறவுத்தளம் மீது தொடுத்த முற்றுகைச் சண்டைக்கு நாம் பயன்படுத்திய போர் முறையும் அதை வென்றெடுக்க பயன்படுத்திய தந்திரோபாயங்களும் (TACTIES) வெற்றிலைக்கேணி - புல்லாவெளி சண்டையைவிட முற்றிலும் வேறுபட்டது.

ஆனையிறவுத்தளம் மீது நாங்கள் ஒரு தாக்குதற்போர் முறையை(offensive) பிரயோகித்தோம்.

வெற்றிலைக்கேணி- புல்லாவெளிச்சண்டையில் நாம் ஒரு தற்காப்புப் போர் முறையை (Deffensive) பயன்படுத்தினோம்.

இந்த இரண்டு போர் முறைகளும் வெவ்வேறான விளைவுகளைக் கொடுக்கக் கூடியவை என்பதுடன் வேறுபட்ட இலக்குகளையும் கொண்டவை.

14ம் திகதி மாலை (14-7-1991) வெற்றிலைக் கேணி வழியாக தரையிறங்கிய சிங்களப்படைகள் கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில்முன்னியான், புல்லாவெளி ஆனையிறவு நீரிணை வழியாக 23 நாட்கள் போராடி, பாரிய இழப்புகளைச் சந்தித்து ''தலைக்குவந்தது தலைப்பாகையுடன் சென்றுவிட்டது'' என்பது போல தரையிறக்கப்பட்ட படையினர் ஆனையிறவுத் தளத்தினுள் சென்றனர்.

இந்த ஆ. க. வெ. இராணுவ நடவடிக்கையின் பிரதிபலிப்பாக சர்வதேச இராணுவ - அரசியல் விமர்சகர்கள் மத்தியில் ஒருமித்த கருத்தொன்று உருவாகியுள்ளது.

அதாவது, புலிகள் ஒரு முழு அளவிலான மரபுவழி இராணுவத்தைப்போன்று செயற்படடிருக்கின்றார்கள் என்றும் இந்தச் சண்டையை அவதானிக்கும்போது இலங்கைத் தீவில் இரண்டு இராணுவங்கள் உள்ளதுபோல் தோன்றுகின்றது என்றும் கருத்து வெளியிடப்பட்டிருக்கின்றது.

பக்கச்சார்பற்ற கணிப்பின் வாயிலாக எழுந்த இராணுவரீதியான இக்கருத்தானது சர்வதேச சமூகத்தின் மத்தியில் ஒரு அரசியற்தாக்கத்தை உண்டுபண்ணும் தன்மை வாய்ந்தது என்பது வெளிப்படை.

அதாவது தமிழீழம்; ஒரு இறைமையுள்ள தனிநாடாக உலகில் மிளிரும் நிலையை நோக்கி தமிழீழ விடுதலைப் போராட்டம் வளர்ந்து செல்கின்றது என்பதுவே அதுவாகும்.

www.eelamview.com

# லெப். கேணல் சூட்டி

ஆனையிறவுப் போர் தொடங்கி விட்டது.

நாங்கள் கண்ணுக்கு முன்பு விரிந்த கடலை கண்களால் அளந்தபடியே இருந்தோம். இராணுவத்தினரைக் கடற் கரையால் இறக்கலாம் என நாம் எதிர்பார்த்தோம். நீண்ட கடற்கரை. எங்களுக்கு ஆட்தொகை காணாது தான். எங்களில் இன்னும் சிலர் இருந்தால் நன்றாக இருக்கும்.

கடல் வெறுமையாக இருந்தது. இடை இடையே தூரத்துப் பாதையல் பீரங்கிப் படகு ஒன்று கண்ணை வெட்டும் நேரத்தில் ஓடி மறையும்.

மற்றும்படி கடலும் நாங்களும் அமைதியாகவே இருந்தோம்.

கடற்கரையில் பாதுகாப்பிற்கு நின்ற புலிகளின் படையணிக்குப் பொறுப்பாளராக சூட்டி அண்ணை நியமிக்கப் பட்டிருந்தார். எனக்கு சூட்டி அண்ணையில் சரியான விருப்பம். அவரின் கலகலப்பானவையும் இலகுவாக பழகும் தன்மையை நான் அதிகமாக விரும்பினேன். அவரின் துணிவை - வீரம் நிறைந்த செயல்களைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன்.

நாங்கள் சிறு, சிறு அணிகளாகப் பிரிக்கப்பட்டு கடற்கரை நீள இருந்த நிலைகளுக்கு அனுப்பப்பட்டோம். எனக்கு ஒரு ஆயுதம் தரப்படும் என நான் எதிர்பார்த்திருந்தேன் எல்லாப் போராளிகளும் சென்ற பின்பும் நான் நின்றேன். ஆயுதம் எதுவும் தரப்படவில்லை. எனக்குக் கோபமாகவும், வெறுப்பாகவும் இருந்தது- உள்ளம் குமுறிக் கொண்டிருந்தது. என்னை விளங்கிக் கொள்ளாமல் கடல் அமைதியாக நின்றது.

''எனக்கு ஒரு ஆயுதம் தாங்கோ'' என்று சூட்டி அண்ணையிடம் கேட்டேன். அவர் என்னைப்பார்த்துச் சிரித்தார்.

''நீ என்னோடு நில். நான் செத்த பிறகு என்ர ஆயுதத்தைத் தூக்கிப் போராடு'' என்று சொல்லிவிட்டு நடந்தார். அவருக்குப் பின்னால் நான் ஏதேதோ எல்லாம் பேசிக் கொண்டு நடந்தேன். அன்று தொடக்கம் - சூட்டி அண்ணையின் உயிர் பிரியும் அந்தக் கடைசிக் கணம் வரையும் நான் அவருடனேயே நின்றேன்.

சூட்டி அண்ணை ஓய்வில்லாமல் இயந்திரமாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தார். கடற் பரப்பில் போர்க் கப்பல்கள் வந்து நின்றன. விமானங்கள் வந்து ஏராளமாக குண்டுகளை வீசிச் செல்லும், கடலிலிருந்தும் பீரங்கிக் குண்டுகள் வந்து விழும். அதற்கிடையிலும் எதிரியைக் கண்காணித்தபடியே நாங்கள் காவல் நிலைகளை அமைத்தோம்.

ஒரு இரவு. அதிகமான நம்பிக்கையோடு அலட்சியமாக நின்ற குழுத் தலைவனொருவனை சூட்டி அண்ணை அழைத்தார்.

''இந்தச் சண்டையின் முடிவில், நாங்கள் சோகத்துடன் செல்லலாம். ஆனால் அவமானத்துடன் செல்லக் கூடாது'' என்று சொன்னார். அவனும் விளங்கிக் கொண்டான். இப்படித்தான் இரவும் பகலும் அந்தக் காவல் நிலைகளைச் சுற்றிச் சுற்றி சூட்டி அண்ணை நடந்து கொண்டே இருப்பார்.

1991 ஆவணி 13,

இரவுகடற்பரப்பில் ஆர்ப்பாட்டம் அதிகமாக இருந்தது. நாங்கள் எல்லோரும் விழித்திருந்தோம். தோழர்கள் மகிழ்ச்சியாகக் கதைத்துக் கொண்டிருந்தார்கள். சூட்டி அண்ணை கடலைப் பார்த்துக் கொண்டிருந்தார். தோழன் ஒருவன் சொன்னான்.

''சூட்டி அண்ணைக்குப் பிரச்சனை இல்லை. அவர் வீரமரணமடைந்தாலும் அழுகைக்கு வீட்டில் ஆக்களில்லை. தம்பியவை இருவரும் இயக்கம். அண்ணனும் இயக்கம், என் அப்பாவும் இயக்கம் என்று தான் திரிகிறார். அம்மா தான் பாவம். தனியாக அழ வேண்டும்.'' என்றான். எல்லாருடனும் சேர்ந்து சூட்டி அண்ணையும் சிரித்தார்.

இருள் விலகி கடல் வெளித்தது. கடலில் கண்ணுக்கெட்டும் தூரத்தில் கப்பல்களும் படகுகளும் கரும்புள்ளிகளாக நின்றன. இன்று எப்படியும் எதிரி கரையில் இறங்க முயலலாம். ஆனால் எங்கே இறங்குவான்?

இந்த நீண்ட கடற்கரையில் எங்கு நாம் எங்கள் படைகளைக் குவிப்பது? விடிந்தவுடன், வானிலிருந்தும், கடலிலிருந்தும் ஏராளமாக- குண்டுகள் வீசப்பட்டுக் கொண்டிருந்தது. அந்தக் குண்டு வீச்சு மாலை 4 மணி வரை நீடித்துக் கொண்டே இருந்தது.

விமானங்கள் மூலம் எங்கள் நிலைகளை அழித்து விட்டு அல்லது பலவீனப் படுத்தி விட்டு கடலிலிருந்து இறங்க வேண்டும் என அவர்கள் தீர்மானித்திருக்கலாம்.

பீரங்கிக் குண்டுகளைத் தூவிக்கொண்டே அந்தப் படகு அணி முன்னேறத் தொடங்கியது.

எங்கள் தாக்குதல் வீச்சுக்குள் அந்த படகுகள் வந்ததும், சூட்டி அண்ணை தான் தாக்குதலை ஆரம்பித்தார். எங்கள் கடுமையான தாக்குதலால் அந்தப் படகு அணி நிலை தடுமாறியது.

ஒரு விசைப்படகு புகைந்தபடியே கப்பலை நோக்கி தடுமாறித் தடுமாறி ஓடியது. வேறும் சிலது சேதப்பட்டிருக்கலாம்.

எங்கள் துப்பாக்கிகள் ஓய்ந்தபோது, படகுகள் ஓடி எங்கேயோ காணாமல் போயின.

வானில் மீண்டும் விமானங்கள் தோன்றின. எங்களுக்குத் தெரியும் அவர்கள் வருவார்கள் என்று. 3 போர் விமானங்கள், 2 அவ்ரோ விமானங்கள், 2 உலங்கு வானூர்திகள், 1 கடல்விமானம் அனைத்தும் தம்மால் இயன்றவரை குண்டுகளை வீசத் தொடங்கின. நாங்கள் விமானங்களுக்கு எதிராகவும் சண்டையிடத் தொடங்கினோம்.

மாலை, 5 மணி,

கடலில் கப்பல்கள், பீரங்கிப்படகுகள், விசைப்படகுகள் எல்லாமே அணிவகுத்து நின்றன. எமக்கு முன்பு சிறீலங்கா கடற்படையின் முழுப்பலமும் நின்றது.

குண்டுகளைக் கக்கிக் கொண்டே அவை கரைக்கு வரத்தொடங்கின. படகுகள் வந்த திசையை நோக்கி சூட்டி அண்ணை ஓடினார். நானும் அவருடன் சேர்ந்து ஓடினேன் கரையில் ஒரு காவலரணில் நாம் நிலை எடுத்தோம், நாங்கள் நாலு பேர் தான் அந்த நிலையில் இருந்தோம். எங்களுக்கு அருகருகே இருந்த நிலைகளில் வேறும் சில போராளிகள் நின்றனர்.

படகுகள் அண்மையில் வந்தன. எங்கள் துப்பாக்கிகள் இயங்கத்தொடங்கின. நாங்கள் அடிக்க அடிக்க எதிரி கரையைத் தொட்டான். மிகக்கிட்டிய தூரத்தில் எமக்கும் எதிரிக்குமிடையே ஓர் கடும் சண்டை நடந்தது. எங்கள் ஒவ்வொரு தோழராக விழுந்து கொண்டிருந்தார்கள். எதிரி தனது ரவைகளையும், வெடிகுண்டுகளையும் அளவு கணக்கில்லாமல் அள்ளிச் செலவழித்தான்.

அந்த நேரம் தான் சூட்டி அண்ணையின் தலையில் துப்பாக்கி ரவை ஒன்று தைத்தது, சிறிது நேரத்தில் எங்கள் காவல் நிலை அமைதியானது. தோழர்களெல்லாம் விழுந்துகிடந்தார்கள். எதிர்ப்பில்லாத அந்தக் காவல் நிலையை நோக்கி ஏராளமாக துப்பாக்கி ரவைகள் வந்து கொண்டிருந்தன.

நான் சூட்டி அண்ணையின் துப்பாக்கியை எடுத்தேன்.

இராணுவத்தினர் ஓடி வந்து கொண்டிருந்தார்கள். துப்பாக்கியை இயக்கியபடியே எழுந்து பின்னால் ஓடினேன்.

என்னைக் கலைத்தபடியே துப்பாக்கி ரவைகள் வந்தன. என் பின் பகுதியில்............ எனக்குத் தெரிகிறது எனக்குச் சூடுபட்டு விட்டதென்று. சில நிமிடங்களில் நான் என் தோழர்களுக்கு நடுவில் நின்றேன். எனக்கு இயலாமலிருந்தது ஆனாலும் துப்பாக்கியைக் கொடுக்க மனமில்லை. அங்காங்கே சில தோழர்களின் உடல்கள் கிடந்தன சிலர் காயமடைந்திருந்தார்கள்.

சிறிது நேரத்தில் நான் தளர்ந்து போனேன். என் துப்பாக்கி நழுவியது. யாரிடமாவது கொடுக்க வேணும்.

நிமிர்ந்து பார்த்தேன். எல்லாப் போராளிகளுமே இரண்டு, மூன்று ஆயுதங்களை வைத்திருந்தார்கள். என்னைப்போல சூட்டி அண்ணையைப்போல் காயமடைந்த அல்லது வீரமரணமடைந்த தோழர்களுடையதாக அவை இருக்கலாம்.

என்ன செய்வது? என் ஆயுதத்தை யாரிடம் கொடுப்பது?

தூரத்தில் பனைகளிற்கும், தென்னைகளுக்கும் இடையே சில வீடுகள் தெரிந்தன. எனக்கு கத்த வேண்டும் போல் இருந்தது.

''அண்ணையவை ஓடி வாங்கோ, துவக்குகள் இருக்கு. எதிரி வருகிறான்.........''

— இளந்திரையன் —



லெப். கேணல் சூட்டி

சின்னத்தம்பிஇராசு செல்வேந்திரன்

கெருடாவில், சாவகச்சேரி

பிறப்பு:- 28.05.1967 வீரமரணம்:- 14.07.1991

# அலைகடல் நினைவுகள் . . .

சூட்டி அண்ணா!
கடலையோ பகைவர் உன்னை
உன்னோடு
கடற்கரையோரங்களில் திரிந்த
அலைகடல் நினைவுகள்
என் மனதில்
இன்னமும் நிலைத்து நிற்கின்றன.
நெஞ்சம் மறக்குமா..?
அண்ணா
உன் வீரமுகம்
இன்னமும் எனக்குத் தெரிகிறது.
நீ எதிர் பார்த்த அளவு சண்டை
இப்போது தான் நடக்கிறது.
''நான் எதிர்பார்த்த அளவு சண்டை
இன்னும் வரவில்லை.''
ஆம்.
நீ கடைசியாய் கூறியவசனம் இது.
இலக்குப் பார்த்து நீயும்
என் கண்முன்னே
எத்தனை எதிரிகளை வீழ்த்தினாய்.
உனது ஆசையை
உன் தோளோடு நின்று
போராடிய வேங்கைகள்
நிறைவேற்றாமல் விடமாட்டார்கள்.
நானும் அப்படித்தான்.
அண்ணா!
உனக்கு ஞாபகமிருக்கிறதா?
உன்னிடம் நான் ஆயுதம் கேட்டேனே.
எனக்கு ஞாபகமிருக்கிறது.
நான் மடிந்ததும்
எனது ஏ.கே யை எடுத்து
போராடு என்றல்லவா கூறினாய்.
ஆம்! இன்று எனக்குப் புரிகிறது.
ஒரு போராளி வீழ்ந்ததும்
அவன்
துப்பாக்கி எழும் என்பது.
ஆம் அண்ணா!
நீ வீழ்ந்ததும்
உனது ஆயுதம்
எனது கைக்கு வந்துவிட்டது.
உன்னைப் போல எதிரியின் முன்
சிரிப்பாய
ஆம்!
உன் துப்பாக்கி எதிரியைக்கண்டு
மீண்டும் வெடிக்கும்.
தமிழீழ தனிநாட்டை விடுவிக்கும்.
இன்று உன்
ஆயுதத்தை மீட்டெடுத்தேன்
நாளை
தமிழீழ தனிநாட்டை மீட்பேன்.
உனது பணியை நான் தொடர்வேன்
இது
உன்மீது செய்யும் சத்தியவாக்கு
மீண்டும் சொல்கிறேன்
உன் துப்பாக்கி எதிரியைக்கண்டு
மீண்டும் வெடிக்கும்.
தமிழீழ தனிநாட்டை விடுவிக்கும்.

— இளந்திரையன் —

லெப். கேணல் சூட்டியுடன் இறுதிவரை களத்தில் நின்று அவர் வீரமரணமடைந்த பின் அவருடைய ஆயுதத்தை எடுத்துப் போராடி காயமடைந்த நிலையில் சூட்டியின் ஆயுதத்துடன் மீண்டுவந்த போராளி தான் இளந்திரையன்.

www.eelamview.com

# இரு இராணுவம் என்பதற்கான அளவுகோல் போர்வலு எனின் அது சரியானதே!

*31 நாட்கள் ஆனையிறவுப் படைத்தளத்தைச் சூழ நடைபெற்று முடிந்த ஆ.க.வெ.இராணுவ நடவடிக்கைக்கு தலைமை தாங்கிய விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான பொட்டு அவர்கள் "விடுதலைப் புலிகள்" ஏட்டிற்கு அளித்த செவ்வி.*

*- தளபதி பொட்டு -*

O ஒரு இராணுவ அதிகாரி இந்தச் சமரை வளைகுடா போருடன் ஒப்பிட்டுள்ளார். இந்த ஒப்பீடு சரியானதா?

ஃ அவர் எதை அடிப்படையாக வைத்து இதனைக் கூறியுள்ளார் என்பது எனக்கு விளங்கவில்லை. நில அமைப்பை அடிப்படையாக வைத்து இக்கருத்து கூறப்பட்டிருந்தால், அது ஓரளவுக்குச் சரியானதுதான். நீண்ட பெரும் வெளிகளும், மணற்பரப்புக்களும், சிறு பற்றைகளுமே இந்தப் போரின் உயிர்ப்பரப்பாக அமைந்தது.

போரில் படைகளின் ஆள், ஆயுத பலத்தினை அடிப்படையாக நோக்கின் அது பன்னாட்டுப் படைகளுடன் ஈராக் படையின் விகிதாசாரத்தினை விட சிறீலங்கா படைப்பலத்துடனான எமது படைப் பலத்தின் வீதம் குறைவானதே.

ஆனால் போர் முடிவுகளின் அடிப்படையில் நோக்கினால் அது வளைகுடா போர் முடிவுகளுக்கு முற்றிலுமாகவே நேர் எதிராக அமைந்துள்ளது. ஈராக் சரணடைந்து அவமானத்துடன் தலை குனிந்து நிற்கிறது. தமிழீழம் பெருமையுடன் எழுந்து, சிலிர்த்து, புதிய போர் அனுபவங்களுடன் காத்திருக்கின்றது.

O இந்தச் சமரிலிருந்து நீங்கள் பெற்றுக் கொண்ட போர் அனுபவங்கள் என்ன?

ஃ போர் அனுபவங்கள்... அவற்றை இதில் கூற முற்பட்டால், அது ஒரு பெரும் தொடராக நீளும். எனினும் சுருக்கமாகச் சொல்வதானால், நாம் இந்தப் போரின் பின்னால் எமது படைப் பிரிவுகட்குரிய பயிற்சி முறைகளில் செய்யப்பட வேண்டிய திருத்தங்கள், விசேட பயிற்சி முறைகளின் அவசியம் என்பன பற்றி உணர்ந்துள்ளோம்.

பெரிய படையணியைப் போரில் ஈடுபடுத்தும் போது, அதுவும் நீண்ட நாட் போரில் ஈடுபடுத்தும்போது செய்யப்பட வேண்டிய பின்களவேலைகளான விநியோகம், மருத்துவம், படைப்பிரிவு மாற்றங்கள் பற்றி புதிய பாடங்களைப் படித்துள்ளோம்.

இதைவிடவும் இன்னும் அதிகம் கூற முடியும். ஆனால் தொடரும் போரின் இடையில் கிடைக்கும் அனுபவத்தொடரானது இப்போது பகிரங்கப்படுத்தமுடியாதது. ஆனால் உறுதியாக ஒன்றைக் கூறமுடியும்.

எம்மை எதிர்ப்பது எந்தப் பெரியபடையாக இருந்தாலும், அது எமது போராளிகளை நேருக்கு நேர் சந்திப்பது, எதிரிக்கு மிகவும் கடினமான காரியமாகவே தொடர்ந்தும் இருக்கும் என்பதை மீண்டும் ஒரு தடவை பெருமையுடன் உணர்ந்துள்ளோம்; உணர்த்தியுமுள்ளோம்.

O இலங்கையில் இரண்டு இராணுவங்கள் உள்ளதாக உலகப் பத்திரிகைகள் விமர்சிக்கின்றன. இந்தக் கணிப்பு சரியானதா?

ஃ இந்த விமர்சனமானது சண்டைக்களத்துள் நின்று சொல்லப்பட்டதல்ல. யுத்த களத்தில் சிறீலங்காப் படைகளுக்கு ஏற்பட்ட சேதங்களையும், அவர்களின் திணறல்களையும் கணக்கிட்டதனால் எழுந்த கருத்தே மேற்கண்ட விமர்சனமாகும்.

ஆனையிறவு முற்றுகைச் சண்டையானது, சிறீலங்கா இராணுவத்தாலும் வெளி உலகத்தினாலும் எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். அதற்கென முறியடிப்பு நடவடிக்கையும் சிறீலங்காவால் தீர்மானிக்கப்பட்டே இருந்துள்ளது.

எதிர்பார்க்கப்பட்ட முற்றுகைக்கான, முறியடிப்பு நடவடிக்கையானது, எதிர்பாராத எதிர்ப்புக்களையும், இழப்புகளையும் சந்தித்த வேளையில் அவர்கள் இவ் எதிர்ப்பை வழங்கக்கூடிய அணியின் ஆயுத, ஆள்பலம் பற்றி கணிப்பிடுகின்றார்கள். அந்தக் கணிப்பின் போது அந்த விமர்சகர்கள் குறிப்பிட்ட போர் வலுவை வழங்கக்கூடிய படைபற்றிய கணிப்பீடுகளுக்கு, வழமையான இராணுவ அமைப்புக்களது போர் வலுவையே அளவு கோலாகப் பயன்படுத்துகின்றார்கள். ஆனால் விடுதலைப் புலிகளது இராணுவ அமைப்பானது களத்தில் போரிடும் வேளையில், எமது போராளிகளது ஒப்பற்ற வீரத்தால், வெளி ஆட்களால் நம்புதற்கரிய போர்த்திறனுடன் செயற்படுகிறது.



ஒரு மரபுவழி இராணுவத்தை, அதன் முழுமையான நவீன, இராணுவ பலத்துடனான நகர்வினை, விடுதலைப் புலிகள் தம் உயிரையே கவசமாக்கித் தடுத்துள்ளனர்.

ஆக இரு இராணுவம் என்பதற்கான அளவுகோல் "போர் வலு" எனின் அது சரியானதே. ஆனால் ஆள், ஆயுதக் கணக்குகளின் அடிப்படையில் அமையுமானால் அதற்கான நிலையை நாம் அடைய இன்னும் நாட்கள் உள்ளன. அப்படி ஒரு நிலை ஏற்படும் போது எமது விடுதலைப் போராட்டத்தில் ஒரு பெரிய வரலாற்றுத்திருப்பம் ஏற்படும் என்றே நான் நம்புகிறேன்.

O மரபுவழி இராணுவமாகப் புலிப்படை வடிவமாற்றம் பெறவிழைவது தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் எத்தகைய அரசியல் தாக்கத்தை ஏற்படுத்தும் என எண்ணுகிறீர்கள்?

ஃ மரபுவழி இராணுவமாகவும் எம்மால் போரிட முடியும் என்பதை நாம் சிறீலங்காவுக்குத் தெளிவாக உணர்த்தியுள்ளோம். இதை உணர்ந்து சிறீலங்கா அரசானது தமிழீழ மக்களது தன்னாட்சி உரிமையை அங்கீகரித்து அதன் அடிப்படையில் ஒரு தீர்வைக்காண முன்வருமானால் அது புத்திசாலித்தனமாக இருக்கும்.

அதைவிடுத்து தமிழரின் இராணுவ பலத்தினை முறியடிக்கவெனத் தம் இராணுவத்தினது ஆள், ஆயுதப் பலத்தினைத் தொடர்ந்து அதிகரிக்க முற்படுமேயானால், அதுவும் எமக்குச்சாதகமானதே. ஏனென்றால் அவர்களால் தாங்கமுடியாத பொருளாதார, இராணுவச் சுமையினை அது அவர்கள் மீது சுமத்தும் அந்தத் தொடர் அழுத்த[illegible]த்த முடியாத நிலையை அடையும் போது முடிவுகள் அவர்களது விருப்பங்களுக்கு அப்பால் சென்று தீர்மானிக்கப்படும் நிலை ஏற்படும்.

www.eelamview.com

எந்த விருப்பு வெறுப்புகளுக்கும் உட்படாது நிலமையைத் தெளிவாக அவதானித்த எவருமே இந்த முடிவுக்கே வருவர். இதுவே தொடர்ச்சியாக நடந்தும் வந்துள்ளது.

தமிழர் தம் இராணுவ பலமே அரசியல் தாக்கங்களை ஏற்படுத்தவல்ல மூல காரணமாக அமைந்துள்ளது.

ஆகவே தமிழீழ மக்களது தேசிய இராணுவம் என்பது தமிழீழ விடுதலையின் ஆரம்பமே.

O இந்தச் சமரில் எவ்வளவோ மகத்தான தியாகங்கள் நடைபெற்றிருக்கின்றன. அதைப்பற்றி ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா?

> **விடுதலைப் புலிகளது இராணுவ அமைப்பானது களத்தில் போரிடும் வேளையில், எமது போராளிகளது ஒப்பற்ற வீரத்தால் வெளி ஆட்களால் நம்புதற்கரிய போர்த்திறனுடன் செயற்படுகிறது.**
>
> — தளபதி பொட்டு

ஃ நான் முதலில் கூறியது போல் எமது போராளிகள் தம் உயிரையே கவசமாக்கிப் போராடினார்கள். காயமடைந்து விழும் போராளியைத் தாங்கவென ஆயுதங்களற்ற நிலையில் நகர்ந்தார்கள். காயமடைந்த போராளியின் ஆயுதத்தை ஓயவிடாது இயக்கவென ரவைகளின் மத்தியில் காத்திருந்தார்கள்.

எதிரியின் கவசவாகனங்கள் எமது நிலையினையூடுருவும் நேரத்தில் தோழர்களது மீள் ஒழுங்கமைப்புக்கு அவகாசம் வேண்டி தம்மையே கவசமாக்கி, தம்மிலேதடம் பதிய நின்று போரிட்டார்கள்.

சண்டைக்களம் வெடித்து, அதிர்ந்து கொண்டிருக்கிறது. எமது நிலை ஒன்றுள் எதிரி ஊடுருவுகிறான். தன்னுடலில் ஏற்பட்ட படுகாயத்தை-தனது நுரையீரல் ரவை ஒன்றால் கிழிக்கப்பட்டதைக் கூட உணராமல் தனது படையை ஒழுங்கு செய்து கொண்டிருந்த ஒரு தளபதி அவனது விருப்பத்திற்கு மாறாக சண்டைக்களத்திலிருந்து சகபோராளிகளால் பலவந்தமாக வெளியேற்றப்படுகின்றான்.

வேறொரு பொழுது, வேறொரு போர்க்களம். எதிரி எம் நிலையைத் தாண்டுகிறான். அவனது நகர்வைத் தொடர்ந்து செய்யவிடேன். என்று சொல்லி எதிரிப்படையுடன் தன்னைக் கலந்து காணாமல் போன "ஈழவன்".

இன்று தமிழீழ விடுதலைப் போராட்டம் ஒரு புதிய வரலாறாய் புதிய அத்தியாயத்துள் புகுந்து கொண்டிருக்கின்றது. இந்த வரலாறு எழுதப்படுவது ஆயுதங்களினால் மட்டுமல்ல. எமது போராளிகளின் வீரம், தியாகம், அவர்தம் உயிர்கலந்தே இவ்வரலாறு எழுதப்படுகிறது.

தம் உயிரை; தம் உடலை; "தம்மையே" தியாகம் செய்த போராளிகளை நாளைய தமிழீழவரலாறு கூறும்.

# இரு முனைகளில் இரு சண்டைகள்

## - ஒரு ஆய்வு -

**ஆ. க. வெ. இராணுவ நடவடிக்கையின் போது நாம் இரு வேறுமுனைகளில், இருவேறுமுறையிலான சண்டைகளை நடாத்தினோம். ஆனையிறவும், வெற்றிலைக்கேணியுமே இந்த இரு வேறு முனைகளாகும். ஆனையிறவில் "தாக்குதற் போர் முறை"யிலும், வெற்றிலைக்கேணியில் "தற்காப்புப் போர்முறை"யிலுமாக இரு வேறு முறையிலான சண்டைகளை நாம் நடாத்தினோம். இந்த இரண்டு சண்டைகளையும் உள்ளடக்கிய ஆனையிறவுச்சமரின் இராணுவ கனப்பரிமாணங்களை இக்கட்டுரை ஆய்வு செய்கின்றது.**

சிங்களப்படைகளுக்கும்,புலிப் படைக்கும் இடையில் இது வரை நாளும் நடந்த சமர் எல்லாவற்றையும் விட ஆனையிறவுச் சமர் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும்.

இராணுவ பரிமாணங்களிலும்சரி, சமர் கற்பித்த அனுபவங்கள் மற்றும் சமரின் விளைவுகளிலும் சரி ஆனையிறவுச்சமர் இரு பகுதியினருக்கும் பல போர்ப்பாடங்களைக் கற்றுக்கொடுத்துள்ளது.

என்னதான் இனவெறியூட்டும் திமிர்க்கருத்துக்களையும், வெற்றிப் பேரிகைகளையும் சிறீலங்காவின் பக்கமிருந்து கேட்ட பொழுதிலும் இந்தச் சமரின் பரிமாணமும், அதன் விளைவுகளும் அவர்களுக்கு அடிவயிற்றில் புளி கரைத்தது போன்றே இருக்கும்.ஆனால், ''மணிச்சத்தம் தேவையில்லை உழவுதான் முக்கியம்'' என்ற நிலைப்பாட்டையொத்த புலிகளின் பக்கத்தில் இந்தச் சமரின் முடிவானது எமது போராட்ட வளர்ச்சியின் ஒரு படியாகவே இருக்கின்றது.

இந்தச் சமருக்காக புலிகள் வகுத்த போர்முறைத் திட்டம், தந்திரோபாயங்கள் செயற்பாடுகளை உன்னிப்பாக ஆய்வு செய்யும் ஒரு இராணுவவல்லுனன் இந்தச் சமரின் முடிவு எத்தகைய தன்மை வாய்ந்தது என்பதை துல்லியமாக வெளிப்படுத்துவான்.

ஆ. க. வெ. எனப்பெயரிடப்பட்ட இந்த ஆனையிறவுச் சமர் ஏற்கனவே கூறிய படி இருவேறு இராணுவ பரிமாணங்களில் - ஒரே நிலத்தொடரைக் கொண்ட-பகுதியில் நடந்துள்ளது.

ஒன்று ஆனையிறவுத் தளம் மீதான முற்றுகைச்சண்டை- மற்றையது வெற்றிலைக்கேணி புல்லாவெளி நேரடிச்சண்டை இந்த இரண்டிலும் இருவேறுபட்ட போர்முறைகளைக் கடைப்பிடித்து வெவ்வேறு நோக்கங்களை அடைய முயன்றோம்.

தளம் மீதான முற்றுகைச் சண்டையில் தாக்குதற் போர் முறையைப் பிரயோகித்து (Offensive) தளத்தைக் கைப்பற்ற முயன்றோம்.

மற்றையதில் தற்காப்புப் போர்முறையைப்பயன்படுத்தி (Defensive) எதிரியை தடுத்து நிறுத்த முயன்றோம்.

### தளம் மீதான தாக்குதற் போர் முறையின் தன்மைகளும், விளைவுகளும்

தாக்குதற் போர்முறையில் அதிகளவு அபாயங்களையும், தடைகளையும் சந்தித்தபடி எதிரியை எதிர்கொள்ள வேண்டும்.

ஆனால் தற்காப்புப்போர் முறை என்பது பெரும்பாலும் பாதுகாப்பானதொரு நிலையில் இருந்தபடி சண்டையை எதிர்கொள்வதாகும்.

இந்த ஆனையிறவுச்சமரில் தற்காப்புப்போர் முறையில் நாம்கண்ட இழப்புகளைவிட தாக்குதற் போர் முறையில் நாம் சந்தித்த இழப்புகள் அதிகமானதாகும்.

இந்தப் பெரும் சமரில் தாக்குதல் போர் முறையில் மொத்தம் ஆறு தாக்குதல்களை நடாத்தியிருக்கின்றோம்,

அதில் நான்கு ஆனையிறவுத் தளம் மீதும் மிகுதி இரண்டும்வெற்றிலைக்கேணி-புல்லாவெளிச் சண்டைகளத்திலும் மேற்கொண்டிருந்தோம்.

ஆனையிறவு தளம் மீதான தாக்குதல்களில் 216 போராளிகளும் மற்றைய இரண்டு தாக்குதல்களிலும் 85 போராளிகளுமாக மொத்தம் 301 போராளிகள் இந்த ஆறு தாக்குதல் நடவடிக்கைகளிலும் வீரமரணமடைந்துள்ளனர்.

இது கிட்டத்தட்ட மொத்தச் சமரில் வீரமரணமடைந்த போராளிகளின் தொகையில் ஏறக்குறைய அரைப்பங்கிற்கு சற்றுக் குறைய என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனையிறவுச் சண்டையில் மொத்தம் 567 போராளிகள் வீரமரணமடைந்துள்ளனர்.

ஆனையிறவுத் தளம் மீது நடாத்தப்பட்டநான்குதாக்குதல்களிலும் ஒன்று பூரண வெற்றியைப் பெற்றுத் தந்தது. (உல்லாசவிடுதி முகாம்) ஏனைய மூன்றும் வெற்றி பெறாமலே முடிந்து விட்டது.

இந்த நான்கு தாக்குதல்களுக்கும் பொது யுக்தியாக கவசமிடப்பட்ட புல்டோசர்களையும்,உழவுஇயந்திரங்களையும் பயன்படுத்தியிருந்தோம். இந்தத் தாக்குதல் நடவடிக்கைகளின் நம்பிக்கை நட்சத்திரங்களாக இருந்ததும் இவைதான்.

ஆனையிறவு தளத்தைச் சூழ எமது நிலைகளுக்கும் எதிரி நிலைகளுக்குமிடையே நீண்ட இடைத்தூரமொன்று இருந்தது. தாக்குதற்போரை நடாத்துவதற்குத் தேவையான இயற்கைக்காப்பரண்கள் எதுவுமற்ற ஒரே வெட்ட வெளியாக அது இருந்தது. எனவேதான் ஓரளவிற்கேனும் செயற்கைக்காப்பரண்களை வழங்கக்கூடிய ஒரு உபாயமாக புல்டோசர்களையும் உழவு இயந்திரங்களையும் பயன் படுத்தியிருந்தோம்.

ஆனால் வெற்றிபெறாமலே முடிந்த மூன்று தாக்குதல்களுக்கும் பிரதான காரணம் இடைநடுவில் புல்டோசர்கள் செயலிழந்து போனதுதான்.

தடைமுகாம் பகுதிமீது 11ம், 27ம் திகதிகளில் நடாத்தப்பட்ட இரண்டு தாக்குதல்களின்போதும் முகாமின் காவலரண்களை அண்மிக்க முன்னரேயே புல்டோசர்கள் செயலிழந்தது குறிப்பிடத்தக்கது. முதற்தடவை (11ம் திகதி) காவலரணிலிருந்து சுமார் 100 மீற்றர் தொலைவில் பாதையை விட்டிறங்கி சேற்றில் புதைந்தது காரணமாகவும், இரண்டாம் தடவை காவலரண்களுக்கு அருகிலேயே வைத்து எதிரிநடாத்திய பீரங்கித்தாக்குதல்களினாலும் புல்டோசர்கள் செயலிழந்தன.

அதேசமயம் சமர் தொடங்கிய முதல் நாளே உல்லாசவிடுதி மீது நாம் நடாத்திய வெற்றிகரமான தாக்குதலில் புல்டோசரின் பங்கு பாரியதாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

ஆனால் உல்லாசவிடுதி முகாமிலிருந்தபடி 13ம் திகதி உப்பள அலுவலக முகாம் மீது ஒரு தாக்குதலை நடாத்தினோம். அந்தத் தாக்குதலின்போது முகாமினுள் புல்டோசர் வெற்றிகரமாகப் புகுந்துவிட்டது. பின்னர் எதிரியின் காவல் அரண்களை ஏறி மிதித்து, உடைத்து தனது வேலையைத் தொடங்கும் சமயத்தில் எதிரியின் தாக்குதலுக்கு இரையாகி செயலிழந்துவிட்டது. அன்றைய தாக்குதலில் உப்பள அலுவலகமுகாமின் சில பகுதிகள் எம்மால் பிடிக்கப்பட்டு ஆயுதங்கள் எடுக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. ஆனால் புல்டோசரின் உதவி தொடர்ந்தும் கிடைக்காததால் கைப்பற்றப்பட்ட காவல் அரண்களையும் கைவிட்டு பின்வாங்கவேண்டியிருந்தது.

தடைமுகாம் பகுதியைத் தாக்கிக்கைப்பற்ற நாம் எடுத்த இரண்டு முயற்சிகளில் மட்டும் 141 போராளிகள் மண்ணில் சாய்ந்தார்கள். இரண்டு தடவையும் இடைநடுவில் புல்டோசர் செயல் இழந்து விட்டதால் காவலரண்கள் அற்ற நிலையில் எதிரி முகாம் நோக்கி இடம் பெற்ற நகர்வுகள் எமது பக்கத்தில் அதிகளவு உயிரிழப்புக்களை ஏற்படுத்தி விட்டது.

இத்துடன் தாக்குதலில் காயமடைந்துகிடந்த தோழர்களையும், வீரமரணமடைந்த போராளிகளது புகழுடல்களையும் எடுக்கச்சென்ற மருத்துவ அணிகளும், மீட்பு அணிகளும் பலத்த உயிரிழப்பைச் சந்தித்துள்ளன.

**சண்டைக்களத்திலிருந்து சக போராளிகளது உடல்களை மீட்பதற்காக உயிர்களைக் கொடுப்பது புலிகளின் போர் மரபு.**

கவசமிடப்பட்ட புல்டோசர்கள்,உழவு இயந்திரங்கள்என்றவுடன் உண்மையான கவச வாகனங்களின் தன்மையைக் கொண்டதாகக் கருதக் கூடாது. உள்ளூரில் கிடைக்கும் சாதாரணரக தகடுகளையும் இரும்புச் சிலாகைகளையும் கொண்டே எமது ''கவச வாகனங்கள்'' தயாரிக்கப்பட்டிருந்தன. பீரங்கித் தாக்குதல்களுக்கும், குறைந்த தூரத்திலிருந்துவரும் இயந்திரத் துப்பாக்கிகளின் தாக்குதல்களுக்கும் தாக்குப்பிடிக்கக் கூடிய தன்மைகளைக் கொண்டிருக்கவில்லை. மேலும் புல்டோசர்கள் செல்லும் பாதைகளில் மிகப்பெரிய சிக்கல்களே இருந்தன. வயற்றுநிலங்களையும், தண்ணீருடன் கூடிய சகதிகளையும் பெரும்பாலும் கொண்ட ஆனையிறவு தளச் சூழலில் கும்மிருட்டில் மின்குமிழ்களின் உதவியின்றி சரியான பாதையூடு செல்வது மிகச்சிரமம்.



வீழ்த்தப்பட்ட சுற்றுலாவிடுதி முகாமின் காவலரண் ஒன்றில் தளபதிகள் பால்ராஜ், சூசை

நாங்கள் சந்தித்த இழப்புகளுக்கு இன்னொரு காரணம் எதிரி வைத்திருந்த தற்காப்பு முறை (Defensive system) ஆகும்.

ஆனையிறவுத் தளத்தைப் பாதுகாப்பதற்கு சிறு அளவிலான எலாஸ்ரிக் பாதுகாப்பு முறையை (நெகிழ்வு முறைப் பாதுகாப்புத்திட்டம்) ஒத்தவகையில் காவல் அரண்கள் அமைக்கப்பட்டிருந்தன.

அதாவது ஒன்றன்பின் ஒன்றாக மூன்று நான்கு வரிசைகளில் காவல் அரண்கள் அமைக்கப்படும். முதலாவது காவல்அரண் எம்மிடம் வீழ்ச்சியுறும்நிலை தோன்றினால் அப்படியே பின்வாங்கி அடுத்த வரிசைக் காவல் அரண்களுக்குள் செல்வார்கள். சில சமயங்களில் இரவில் இறுதி வரிசைக் காவல் அரண்களில் இருக்காது அதற்கு உள்ளேயுள்ள காவல் அரண்களில் துப்பாக்கிகளைத் தயாராக வைத்தபடி காவல் இருப்பார்கள். அங்கே இருந்தபடி கைவிடப்பட்ட காவல் அரண்களை இலகுவாகத் தாக்கக் கூடியவகையில் முன்னேற்பாடுகளையும் செய்து வைப்பார்கள். தாக்குதல்கள் தொடங்கியதும் சிலவேளைகளில் எமது போராளிகள் இக்கட்டுக்குள் மாட்டிவிடுகின்றனர்.

இந்தத் தற்காப்பு முறையை 'எலாஸ்ரிக் சிஸ்ரம்' (நெகிழ்வு முறைத் திட்டம்) என அழைப்பதற்கு காரணம் இருக்கின்றது.

இரு முனைகளில் பிணைக்கப்பட்டிருக்கும் எலாஸ்ரிக்கை (நாம் வழமையாக உடைகளுக்குப் பாவிக்கும் நாடா) ஒரு குறிப்பிட்ட தூரம் வரை ஒரு விரலால் தள்ளினால் அது ஈய்ந்து கொடுத்து அறாது நின்று பிடிக்கும். அப்பொழுது விரலை வெளியே எடுத்தால் ஈய்பட்ட நாடா மீண்டும் தனது பழைய நிலைக்குவரும். ஆனால் ஒரு எல்லைக்கு அப்பால் தள்ளினால் அறுந்துவிடும். அது போன்றே இந்தத் தற்காப்பு முறையும் இருப்பதாலேயே இதற்கு 'எலாஸ்றிக் தற்காப்பு முறை எனப்பெயரிட்டு அழைக்கப்படுகின்றது.

அதாவது முதலாவது வரிசைக் காவல் அரணில் இருக்கும் எதிரியை இரண்டாவது வரிசைவரை பின்னுக்குத்தள்ளினால் மட்டும் போதாது. இரண்டாவது வரிசைக்கும் பின்னால் அதிக தூரம் தள்ளினால்தான் முதலாவது காவல் அரண்வரிசையை நாம் கைப்பற்றமுடியும். பின்னர் முதலாவது காவல் அரண்வரிசையிலிருந்து மூன்றாவது வரிசைக்கும் அப்பால் எதிரியைத் தள்ளினால் இரண்டாவது வரிசைக்காவல் அரண்களைக் கைப்பற்றமுடியும்.

நாங்கள் மத்திய கட்டளையகம் வரை முன்னேறினால் மாத்திரமே முகாம் முழுமையாக வீழ்ச்சியுறும்.

ஆனாலும் போரில் பயன்படுத்தப்படும் சில தந்திரோபாயங்கள் இந்த நடைமுறையையே சிலவேளைகளில் மாற்றியமைத்துவிடுவதும் உண்டு. ஆனால் இந்தப் பாதுகாப்பு முறைபொதுவான சண்டையின்போதும் அல்லது

www.eelamview.com

பிரயோகிக்கப்படும் பிரத்தியேகமான தந்திரோபாயங்கள் செயலிழந்து போகும் போதும் முன்சொன்னபடியே செயற்படும் தன்மை வாய்ந்தது.

ஆனையிறவுச் சமரிலும் எமக்கு இவ்விதமே நடந்துவிட்டது.

எதிரியினது தற்காப்பு முறையை உடைத்துநொறுக்க நாம் பயன்படுத்திய புல்டோசர், உழவுஇயந்திர யுக்திகள் செயற்படாமல் போனது சண்டைகளின் விளைவுகளில் ஒன்றாகிய இழப்பை அதிகரிக்கச் செய்துவிட்டது.

## வெற்றிலைக்கேணி-புல்லாவெளி தாக்குதற்போர்முனையின் தன்மைகளும், விளைவுகளும்.

இதே சமயம், முன்னரே குறிப்பிட்டபடி வெற்றிலைக்கேணி - புல்லாவெளி நேரடிச் சண்டையிலும் நாங்கள் இரண்டு தாக்குதல் சம்பவங்களை நடாத்தியிருக்கின்றோம்.

*21-07-1991* அன்று முள்ளியானில் ஒன்றும், பின்னர் *05-08-1991* அன்று அதிகாலை 4-30 மணிக்கு புல்லாவெளியில் மற்றைய தாக்குதலையும் நடாத்தினோம்.

முள்ளியான் தாக்குதலில் எமது தரப்பில் 42 பேர் வீரமரணமடைந்துள்ளனர். ஆனால் எதிரிதரப்பில் 90ற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் 31 இராணுவத்தின் சடலங்களை நாம் கைப்பற்றி வந்தோம். இதில் 29 சடலங்கள் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தூடாகச் சிறீலங்கா அரசிடம் ஒப்படைத்தோம். மிகுதி இரண்டு உடல்களும் சிதைந்து பழுதாய்ப்போன காரணத்தால் கொடுக்கப்படவில்லை.

இந்தத் தாக்குதலை வெற்றிகரமாக நடாத்தி முடித்தது குறிப்பிடக்கூடியதொரு அம்சமாகும்.

1983ம் ஆண்டு யூலை மாதம்23ம் திகதி நள்ளிரவுதிருநெல்வேலியில் நடந்த கண்ணிவெடித்தாக்குதல் எப்படி தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு நிரந்தர இடத்தைப்பிடித்துவிட்டதோ அதே போன்று 21-07-1991 அன்று நடந்த முள்ளியான் தாக்குதலும் ஒரு நிரந்தர இடத்தைப் பிடிக்குமெனலாம்.

அதாவது கண்ணிவெடித் தாக்குதல், அதிரடித் தாக்குதல், முற்றுகைச் சண்டைகள் என்பவற்றைப்போல 'தகர்த்தெறிந்து நுழைதல்' Break through ) எனும் ஒரு தாக்குதல் முறை உண்டு.

போர்த்திறன் மிக்க ஒரு இராணுவத்தின் போர்க்கலையை இத்தகைய தாக்குதலைக் கொண்டும் இராணுவ ஆய்வாளர்கள் தீர்மானிப்பார்கள்.

அத்தகைய இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த "தகர்த்தெறிந்து நுழைதல்" எனும் தாக்குதற்போர் முறையைத்தான் நாம் முதன்முதலாக முள்ளியானில் பிரயோகித்துள்ளோம்.


தொடர் சங்கிலியாக நீண்டு நகரும் இராணுவத்தின் மீது இத்தகைய தகர்த்தெறிந்து நுழைதல்களை வெற்றிகரமாகப் பயன்படுத்துவதன் மூலம் எதிரி இராணுவத்தைச் சிதறடித்து அவனுக்கு பலத்த இழப்பை ஏற்படுத்தமுடியும். சண்டைகளில் திருப்பங்களையே இத்தகைய தாக்குதல்போர் முறை ஏற்படுத்தவல்லது.

*21-07-1991* அன்று தளபதி சொர்ணத்தின் தலைமையில் முள்ளியானில்நடாத்தப்பட்ட தாக்குதலும் ஒரு தகர்த்தெறிந்து நுழைதல் ஆகும். இது வெற்றிலைக்கேணி - புல்லாவெளி போர் முனையில் எமக்குப் பெரிய வெற்றியைப் பெற்றுத்தந்த தாக்குதலாகும்.

வெற்றிலைக்கேணி - புல்லாவெளிபோர் முனையில் நீண்டிருந்த இராணுவச் சங்கிலிமீது தொடர்ந்தும் தகர்த்தெறிந்து நுழைதல்களைப் பயன்படுத்தியிருந்தால் அப் போர் முனையில்எதிரி சின்னாபின்னமாக்கப்பட்டு தோற்கடிக்கப்பட்டிருப்பான்.

ஆனால். எமக்கு ஏற்பட்ட ஆள்பற்றாக்குறை காரணமாக இத்தகைய தாக்குதல்களைத் தொடர்ந்து நடாத்த முடியாமல் போய்விட்டது.

அதே சமயம் *05-08-1991* அன்று புல்லாவெளியில் மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கை எமக்கு பூரண வெற்றியைப் பெற்றுத் தரவில்லை. இந்தத் தாக்குதலில் நாம் 43 போராளிகளை இழந்தோம். எதிரிதரப்பின் இழப்பு எமக்குச் சரியாகத் தெரியவில்லை. சுமார் 10க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம்.



சண்டையின் போது காயத்துக்குள்ளான ஒரு புலிவீரன் மருத்துவ சிகிச்சைக்காக எடுத்துச் செல்லப்படுகின்றான்.

ஒட்டுமொத்தமாக இந்த இரண்டு தாக்குதல்களிலும் நாம் 85 போராளிகளை இழந்தோம். எதிரி தரப்பில் சுமார் 100க்கும் மேற்பட்டவர்களைக் கொன்றோம்.

இது இப்படியிருக்க ஆனையிறவுத்தளம் மீது தொடுத்த நான்கு தாக்குதல்களிலும் நாம் 200 போராளிகளை இழந்தோம். எதிரி தரப்பில் 50ற்கும் குறைவானவர்களே கொல்லப்பட்டிருந்தனர்.

**எனவே வெற்றிலைக்கேணி-புல்லாவெளியில் நாம் நடாத்திய தாக்குதற் சண்டைகளில் எமக்கும், எதிரிக்கும் இருந்த இழப்பு விகிதமும் ஆனையிறவு, தளம்மீதான தாக்குதற் சண்டைகளில் எமக்கும், எதிரிக்கும் ஏற்பட்ட இழப்பு விகிதமும் நேர் எதிரானது.**

**ஆனையிறவுத் தளம்மீதான தாக்குதல் போர்முறையில் கொல்லப்பட்ட இராணுவத்தினது எண்ணிக்கையைவிட அதிக எண்ணிக்கையான போராளிகளை நாம் இழந்தோம்.**

**ஆனால் வெற்றிலைக்கேணி புல்லாவெளியில் நடந்த தாக்குதல் போர்முறையில் வீரமரணமடைந்த எமது தோழர்களின் தொகையைவிட கொல்லப்பட்ட இராணுவத்தினது தொகை அதிகம்.**

இந்த விதமாற்றத்துக்குரிய பிரதான காரணம் நாம் முன்னர் குறிப்பிட்ட "தற்காப்பு" முறையாகும்.

ஆனையிறவுத்தளம் நீண்டகாலமாக இருக்கின்றது. எனவே பொருத்தமான தற்காப்பை நன்கு திட்டமிட்டு முன்னரே எதிரி அமைத்து வைத்திருந்தான்.

ஆனால் வெற்றிலைக்கேணி-புல்லாவெளி போர்முனையில் அத்தகைய தற்காப்புத் திட்டத்தைக் கைக்கொள்ள எதிரியால் முடியவில்லை. அதற்குரிய கால அவகாசமும், திட்டமிடுவதற்குத் தேவையான தகவல்களை சேகரிக்க அவர்களுக்கு நேரத்தையும் நாம் கொடுக்கவில்லை. எனவே சாதாரண தற்காப்பு முறைகளைத்தான் கைக்கொண்டிருந்தார்கள்.

எனவேதான் வெற்றிலைக்கேணி-புல்லாவெளி தாக்குதற் போர்முனையில் எதிரி அமைத்த தற்காப்புப் போர் முறையை ஊடுருவித் தாக்குவதற்கு எமக்கு வசதி இருந்தது. இங்கே நாங்கள் புல்டோசர்களையோ, உழவு இயந்திரங்களையோ பயன்படுத்தவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்விதமாகவே ஆனையிறவுச் சமரின் தாக்குதற் போர்முறையும் அதன் விளைவுகளும், அதற்குரிய காரணிகளும் இருந்தன.

இனி வெற்றிலைக்கேணி-புல்லாவெளியில் நடந்த நேரடிச் சண்டையைப் பார்ப்போம்.

ஆனையிறவுச் சண்டை உக்கிரம் அடைந்த நேரத்தில் பி. பி. சி. வானொலியில் ஒலிபரப்பானதொரு சம்பாசனையுடன் தொடருவோம்.

பி. பி. சி. யின் கொழும்பு முகவரான கிறிஸ்டோபர் மொறிசை லண்டனிலிருந்து ஒரு செய்தியாளர் தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டு கேட்கின்றார்.

What's happening in Elephant Pass ?

(ஆனையிறவில் என்ன நடக்கிறது ? )

இதற்கு மொறிஸ் பின்வருமாறு பதிலளிக்கின்றார் :-

"புலிகள் ஆனையிறவை முற்றுகையிட்டு உக்கிரமான தாக்குதல்களை நடாத்திக் கொண்டிருக்கிறார்கள். அதைத் தடுத்து நிறுத்த இராணுவம் கடும்பிரயத்தனப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இழப்புகளைப் பற்றி இராணுவ தரப்பிலிருந்து வரும் தகவல்கள் நம்பகத் தன்மை அற்றவையாக உள் போரில் முதற்தடவையாக மரபுவழிப்போர் முறையில் புலிகள் போரிடுகின்றார்கள். சிறீலங்கா இராணுவமும் அதற்கெதிராக மிகப்பெரிய இராணுவ நடவடிக்கையை...

கிறிஸ் மொறிசின் இந்த விபரிப்பை இடையில் குறுக்கறுத்து விமர்சகர்.

So, you say, there are Two armics in Srilanka?

(ஆகவே இலங்கையில் இப்பொழுது இரண்டு இராணுவங்கள் இருக்கின்றன எனச் சொல்லுகின்றீர்களா ?)

என வினாவினார்.

அதற்கு கிறிஸ்மொறிசும் yes, ofcourse

(ஆம் அப்படித்தான் ) எனப் பதிலளித்தார்.

*28-07-1991* அன்று மாலை 6-30 மணிக்கு ( தமிழீழ நேரப்படி ) பி.பி. சி. வானொலியில் நடந்த இந்தச் சம்பாசனை புலிகள் தொடர்பாக ஒரு கருத்துருவ மாற்றத்தை உலகம் முழுவதும் இனங்காட்டியதாக அமைந்திருந்தது எனலாம்.

இவ்விதமாக இரு இராணுவக் கருத்துருவம் பற்றி பேசக்கூடிய அளவுக்கு இந்த ஆனையிறவுச் சண்டையை இனங்காட்டியது உண்மையில் வெற்றிலைக்கேணி-புல்லாவெளி நேரடிச் சண்டைதான் என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்கமுடியாது.

அந்த அளவுக்கு வெற்றிலைக்கேணி - புல்லாவெளி நேரடிச் சண்டையின் இராணுவ பரிமாணம் போராட்ட முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறிவிட்டது.

14ம் திகதி மாலை கருக்கல்வேளை ஆனையிறவுத் தளத்திலிருந்து 8 கி.மீ. தூரத்திலிருந்த வெற்றிலைக்கேணி கடற்கரையில் இராணுவம் தரையிறக்கப்பட்டதைத் தொடர்ந்து ஆனையிறவுத் தளம் மீதிருந்த "சண்டையின் மையம்" வெற்றிலைக் கேணிப்பக்கம் நகர்ந்தது. அன்றிலிருந்து ஆனையிறவுத் தளத்துக்குள் இராணுவம் சென்றடையும்வரை வெற்றிலைக்கேணி - புல்லாவெளி போர்முனையே ஆனையிறவுச் சண்டையின் மையமாக இருந்தது.

## தரையிறக்கமும் - சாதகமும், பாதகமும்

தரையிறக்கத்தைப் பொறுத்த அளவில் இறங்கப் போகும் இராணுவத்திற்கிருந்த சாதகமான நிலைகள் அதைத் தடுக்கப்போகும் புலிகளின் பக்கம் இருக்கவில்லை.

கடல்வழி தரையிறக்கம் நடைபெறக்கூடிய வெற்றிலைக்கேணி - சுண்டிக்குளக் கடற் பகுதி சுமார் 16 கி. மீ நீளத்தைக் கொண்டிருந்தது. இதில் எங்கோ ஒரு சில யார் இடைவெளிக்குள் தான் இராணுவத்தினர் இறக்கப்படப் போகின்றார்கள். அதன் பின்னர்தான் தமக்குத்தேவையான கடற்கரையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முனைவார்கள்.

எனவே இறக்கப்படப் போகும் குறித்தபகுதி எதுவாக இருக்கும் எனப்புலிகள் அறிந்து கொள்வது சிரமம். அப்படி ஊகித்தறிந்து வைத்திருந்தாலும் கூட ஒரு இடத்தில் இறங்க முடியாது விட்டாலும் அடுத்த. அடுத்த இடங்களில் படையினரை இறக்குவதற்கு இராணுவத்திற்கு வாய்ப்புகள் இருந்தன.

இதையும் தடுக்க வேண்டுமாயின் 16 கி. மீ. நீள கடற்கரை எங்குமே மிகுந்த ஆட்பலத்துடன் போராளிகள் நிலைகொண்டிருக்க வேண்டும்.

ஆனையிறவுத் தளத்தின் மீது ஒரு பாரிய தாக்குதலையும் நடாத்திக்கொண்டு 16 கி.மீ. நீள கடற்கரையில் ஏராளமான போராளிகளைக் குவிப்பது என்பது தற்போதையநிலையில் முடியாத காரியம்.

அந்த அளவுக்கு இன்று எம்மிடம் ஆட்பலம் இல்லை. ஆனால் இராணுவத்திடம் தேவையான ஆட்பலம் இருந்ததுடன் எங்கே இறங்க வேண்டும் எனத் தீர்மானிக்கும் பொறுப்பும் அவனிடமே இருந்தது.

இவைகள் தரையிறக்கப்படவிருந்த சிங்கள இராணுவத்துக்கிருந்த ஆரம்ப அனுகூலங்கள் ஆகும்.

14ம் திகதி தரையிறக்கமும் அப்படித்தான் நடந்தது. முதலில் வெற்றிலைக்கேணி சந்தியை நோக்கிவந்த படகுகள் கரையிலிருந்து அதிக எதிர்ப்பைச் சந்தித்தனினால் திரும்பிச்சென்றன. சிறிது நேரத்தில் முதல் வந்த இடத்திலிருந்து ஒரு கி. மீ. தூரத்தில் கொண்டு சென்று இறக்கினர். தற்செயலாக அந்த இடத்திலும் அதிக எதிர்ப்பை போராளிகள் கொடுத்திருந்தாலும் அடுத்த பகுதியொன்றில் அவர்கள் தரையிறங்கியே இருப்பார்கள். குறிப்பாக இந்த இடத்தில் தான் இறங்க வேண்டும் என்ற கட்டாயம் அவர்களுக்கு இல்லை.

இத் தருணத்தில் யாழ்-கோட்டை மீது நாம் விரித்திருந்த முற்றுகையை உடைக்க மண்டைதீவில் இருந்துவந்த இராணுவம் தோல்வியுடன் திரும்பியதை நினைவு கூரலாம்.

கோட்டையைப் பொறுத்த அளவில் ஒரு சில கி. மீற்றருக்குள் தான் படையினர் இறங்கவேண்டிய கட்டாயம் இருந்தது. அந்த பகுதிக்குள் நிறுத்தவேண்டிய அளவுக்கு எம்மிடம் ஆட்பலம்இருந்தது. மற்றைய இடங்களில் இறக்கி கோட்டையை நோக்கி நகர்வது அவர்களுக்கு சிரமமானது. எனவேதான் *13-09-1990* அன்று காலை 6-00 மணிக்கு கோட்டையின் முன்னால் சிங்கள இராணுவத்துக்கும், புலிப்படைக்கும் இடையில் ஒரு பலப்பரீட்சை நடந்தது. அதன் விளைவு கோட்டை முகாமின் உயிர் வாழ்வுக்கு சாவுமணி அடிக்கப்பட்டது என்பது அனைவரும் அறிந்ததே.

## புலிகளினதும், எதிரியினதும் படைக்கல சக்தி

பி. பி. சியின் செய்தியாளர்கள் மட்டுமல்ல சிறீலங்கா விமர்சகர்களும் 'இரண்டு இராணுவம்' என்ற கருத்தைக் கூறியுள்ளனர்.

(18 ம் பக்கம் பார்க்க)

www.eelamview.com

# கப்டன் திலகா

குள்ளமான சிறிய உருவம். சிரிக்கும் முகம், அமைதியான சுடாவம், எல்லாருடைய மனங்களையும் கவர்ந்த, பழகுவதற்கு இனிய போராளி, கற்பனை செய்து பாருங்கள். உங்கள் மனதில் ஒரு உருவம் தெரிகிறதல்லவா? நன்றாகக் கவனித்துக் கொள்ளுங்கள். அதோ, அந்த உருவம் ஓடுவதைப் பாருங்கள். பாதங்கள் தரையில் படாதது போல் தோன்றுகிறதல்லவா. உடற்பயிற்சி செய்வதைப் பாருங்கள், எப்படி இவ்வளவு வேகமாகவும், லாவகமாகவும் உடலை வளைக்க முடிகிறது என்று உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறதல்லவா? அவள் தான் திலகா. சிட்டுக் குருவி போல் துருதுருவென்ற இயல்புடன் எப்போதுமே உற்சாகமாகத்தான் ஓடித்திரிவாள். திலகாவிடம் பயிற்சி பெற்ற பெண் புலிகள் 'திலகாக்கா மாத்திரம் எப்படி சோர்வேயில்லாமல் இப்படிச் சுறுசுறுப்பாக இருக்கிறார்?'' என்று ஆச்சரியப்படுவார்கள். ''பயிற்சிப் பாசறையில் நாம் பயிற்சி எடுக்கிறோமா அல்லது திலகாக்கா பயிற்சி எடுக்கிறாரா என்று சந்தேகமாக இருக்கும். ஏனென்றால் அவர் எந்நேரமும் ஓடித்திரிந்து கொண்டே இருப்பார்'' என்று அவர்கள் சொல்வார்கள்.

களத்தில் கூட அவளது உற்சாகம் சிறிதும் குறையவில்லை 1989 ம் ஆண்டின் நடுப்பகுதியில் அமைப்போடு தன்னை இணைத்துக் கொண்ட திலகா இதுவரை காலமும் பயிற்சி கொடுத்து படையணிகளை உருவாக்கும் பணியில் ஈடுபட்டிருந்ததால் களம் செல்லும் சந்தர்ப்பம் அவளுக்குக் கிட்டவில்லை. ஆனையிறவு மோதலே அவளது அவாவை நிறைவேற்றியது. வழமை போல் படு உற்சாகமாகவே தன் குழுவை அழைத்துக் கொண்டு புறப்பட்டாள்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆனையிறவு மோதலின் கடைசிக் கட்டம், திலகா தனது அணியுடன் களம் புகுந்தாள். அகிலன் வெட்டையில் நின்ற இராணுவம் ஆனையிறவை நோக்கி முன்னேறத் தொடங்கியது. புலிகளுக்கும் இராணுவத்துக்குமிடையில் கடும் மோதல் வெடித்தது. இராணுவம் அங்குலம் அங்குலமாக முன்னேற முயன்றது. இராணுவத்தினரின் நகர்வுகளுக்கு ஏற்ற வகையில் திலகா தனது அணியின் வியூகங்களை மாற்றி - மாற்றியமைத்து போரிட்டுக் கொண்டிருந்தாள்.



இராணுவத் தரப்பில் பலரை நாம் வீழ்த்திய போதும் எம் பக்கமும் இழப்புகள் அதிகமாகவே இருந்தது. களத்தில் நிற்கும் எம்மவர் தொகையில் வீழ்ச்சி ஏற்பட்டது. ஆனாலும் இராணுவத்தினது நகர்வு தடுக்கப்பட வேண்டும். திலகா உடனேயே தொலைத்தொடர்பு சாதனம் மூலம் தனது குழுவின் அணித் தலைவர்களை அழைத்தாள்.

'' முன்னுக்குப் போங்கோ. சளைக்காமல் அடிபடுங்கோ. வீரமரணமடைந்த ஒவ்வொரு போராளியையும் மனதில நினைச்சுக்கொண்டு போங்கோ-போய் அடிபடுங்கோ,'' என்று திரும்பத் திரும்பச் சொல்லி தன் குழுவை உற்சாகப்படுத்திக் கொண்டு சண்டைக்குத் தலைமை தாங்கினாள். சண்டையும் தீவிரமடைந்தது.

கப்டன் திலகா

இராசதுரை ரதீஸ்வரி

சேனையூர் - மூதூர்

பிறப்பு:- [illegible]3-05-1970

இராணுவத்தினரின் துப்பாக்கி ஒன்றிலிருந்து புறப்பட்ட ரவை திலகாவை துளைத்துச் சென்றது. தரையில் படாமல் பறப்பது போல் ஓடுகின்ற திருமலை மண் பெற்ற அந்தத் தவப்புதல்வி அந்தப் பெருமணல் வெளியிலே சாய்ந்தாள்.

அரை மயக்கத்திலிருந்த போதும் அவள் வாய், 'செத்த ஒவ்வொரு, போராளியையும் நினையுங்கோ. போய் அடிபடுங்கோ'' என்றே கட்டளையிட்டுக் கொண்டிருந்தது.

வைத்தியசாலைக்கு அவள் கொண்டு வரப்படும் வழியிலும் ஏதோ சொல்ல விரும்புவது போல் அவள் வாய் திறந்து, திறந்து மூடியது. ஆனால் வார்த்தைகள் வெளிவரவில்லை.

வைத்தியசாலைக்கு அவள் கொண்டுவரப்பட்ட பின்னர் உயிர்பிரியும் இறுதி நேரத்தில் கூட அவள் வாய் எதையோ முணுமுணுத்தது. நான் நினைக்கிறேன் கடைசி நேரத்தில் கூட, ''செத்த ஒவ்வொரு போராளியையும் நினைச்சுக் கொண்டு அடிபடுங்கோ,'' என்று சொல்லத்தான் அவள் விரும்பியிருப்பாள்.

மலைமகள்

# களத்தில்

## இனப்பற்று

ஆனையிறவுச் சமரில் ஈடுபட்ட பெண் போராளிகளை, கலை பண்பாட்டுக் கழக தலைமையகத்தில் கலைஞர்கள் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

சண்டை தொடர்பாக பல கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

கதைத்து முடிந்தபின் - ஒரு நிலையில்

ஒவ்வொரு போராளியாக அவர்களை இயக்கத்துடன் இணையவேண்டும் என்ற எண்ணத்தை விளைவித்த காரணிகளைப்பற்றி கேட்டுக்கொண்டிருந்தார்கள். பெண்போராளிகளும் சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

சூரியா என்றொரு பெண் போராளி, தனது தலையையும், கையையும் அடிக்கடி அசைத்தபடியே

''நான் திருக்கோணமலை குச்சவெளியைச் சேர்ந்தவள். சரி, எனி நான் இயக்கத்திற்கு ஏன் வந்தனான் எனச்சொல்லத் தேவையில்லை, உங்களுக்குத் தெரியும் தானே திருக்கோணமலையில் என்னென்ன நடந்தது'' என்று தனது இடத்தின், இராணுவ அட்டூழியங்களை, இலகுவாக வெளிப்படுத்திவிட்டு இருந்தாள்.

அடுத்ததாக நாதினி என்று அராலியைச் சேர்ந்த பெண் போராளி எழுந்தாள். அராலி யாழ்மாவட்டத்திலுள்ள கிராமம்.

'' நீர் என்னமாதிரி, உமது ஊருக்கு இராணுவம் வந்ததாலா வெளிக்கிட்டீர் '' என்று நகைச்சுவை உணர்வுடன் ஒருவர் கேட்டார்.

''அராலிக்கு இராணுவம் வந்தாத்தான் இயக்கத்துக்கு வரவேணும் என்று இல்லை. இராணுவம் எங்க வெளிக்கிட்டாலும் அங்கும் தமிழர்கள்தானே இருக்கிறார்கள்''

தனது இனத்தின் மீதான பற்றை எளிமையாக, வெளிப்படுத்திவிட்டு நாதினி சிரித்துக்கொண்டே அமர்ந்தாள்.

## தோழமை

கலை, பண்பாட்டுக் கழக தலைமைச் செயலகத்திற்கு கலைஞர்கள் சிலர், ஆனையிறவில் சண்டையிட்ட போராளிகளை சந்தித்து அவர்களின் அனுபவங்களைக் கேட்பதற்காக வந்திருந்தார்கள்.

உரையாடல் நீண்ட நேரம்நடந்தது. குகன் என்று ஒரு போராளி தன் அபாயம் நிறைந்த அனுபவங்களை அழகாகச் சொல்லி முடித்தான், அவனிடம் ''இந்தப்போர் முனையில் உங்களால் மறக்க முடியாத சம்பவம் எதையாவது சொல்ல முடியுமா?'' என்று கலைஞர் தரப்பில் இருந்து ஒருவர் கேட்டார்.

அவன் சிறிது நேரமாக சிந்தித்தபின் சொன்னான் ''பெரிதாக ஒன்றும் இல்லை ஒண்டை சொல்லலாம்.''

''எனக்கு அருகில் - 5 அல்லது 6 யார் தள்ளி - அவ்ரோ போட்டகுண்டொன்று விழுந்தது - ஆனால் வெடிக்கவில்லை'' என்றுவிட்டு நிமிர்ந்தான்.

எல்லோரும் வியப்புடன் சிரித்தார்கள், அப்போ கலைஞர் ஒருவர் ''அது வெடித்திருந்தா இன்று நீர் இதில் நிற்கமாட்டீர்'' என பலமான சிரிப்புடனே சொல்லி முடித்தார்.

''நான் சாகிறது பிரச்சனை இல்லை, என்னோடு ஏழு, எட்டுப் பொடியள் நிண்டவங்கள், அவங்களும் செத்திருப்பாங்கள்''

ஒரு விடுதலைப்புலி தனது உயிரை விட தன் தோழர்களை அளவு கடந்து நேசிப்பதை இலகுவாகச் சொல்லிவிட்டு அமைதியாக அமர்ந்தான்.

## பகிடி

ஆனையிறவு தடைமுகாமின் பின்பக்கமாக இருக்கும் காவல் நிலை ஒன்று - பரந்த வெட்டைக்கு நடுவே இருந்த அந்தக் காவல் நிலையில், வெயிலுக்கும் - வெப்பத்துக்கும் நடுவே போராளிகள் - தாக்குதலுக்கு தயாரான வேலைகளை செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் குளிப்பதானால் 3 மைல்கள் பின்னால் வரவேண்டி இருந்தது. அதனால் 10 அல்லை 15 நாட்களாக ஒருவருமே குளிக்கவில்லை.

ஒருநாள் கேசவன் என்று ஒரு தோழன் பொறுப்பாளனிடம் சென்றான்

''பத்துப்பதினைந்து நாளாகக் குளிக்கேலை, இன்றைக்காவது குளிக்க விடுங்கோ'' என்றான்.

''தம்பி, இந்த நேரத்தில குளிக்கவேணும் என்கிறாய் தற்செயலாக இராணுவத்தினர் வெளிக்கிட்டா என்ன செய்யிறது எங்கடதிட்டங்களே தவிடுபொடியாகிவிடும்'' என்றான் பொறுப்பானவன். அவனிடமிருந்து கொஞ்ச நாளாக இந்தப்பதில் தான் வருகிறது. இன்றும் இதைத்தான் சொல்வான் என்பது எல்லோருக்குமே தெரியும்.

குளிக்கக்கேட்ட கேசவன் வேறுபக்கம் திரும்பிக் கொண்டே சொன்னான்.

''இப்ப குளிக்கவிடாதீங்கோ பிறகு செத்தப்பிறகு உடல் மணத்தில மக்கள் அஞ்சலி செய்யவும் பக்கத்தில வராதுகள்'' என்றான். சுற்றி இருந்த தோழர்கள் சிரித்தார்கள். அவனது வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டு பக்கத்திலிருந்த ஒரு தோழன் சொன்னான்.

''பரவாயில்லை மச்சான் நீ உப்பளப் பக்கமாகத்தானே இறங்குகிறாய். செத்தாலும் பரவாயில்லை உப்புக்கை பழுதாகாமல் கிடப்பாய், எல்லாம் முடிந்தபிறகு நாங்களே உன்னை எடுத்து அடக்கம் செய்யிறம்'' என்று சிரித்துக்கொண்டே சொன்னான் குளிக்கக்கேட்க வந்த தோழனும் சிரித்துக் கொண்டே தனது வேலைகளைப் பார்க்கப் போய்க்கொண்டிருந்தான்.

இப்படித்தான் கடினமான சூழலுக்குள்ளும் சிரிப்புடனும் - மகிழ்ச்சியுடனும் அவர்கள் எதிரியைச் சுற்றி நின்றார்கள்.

www.eelamview.com